
கோகுலம்

GOKULAM

பிப்ரவரி '98 ரூ. 5.00








— எம்.பி. மாரியப்பா, மன்னார்குடி

![Ganesha and Krishna illustration]



கோகுலம்

பிப்ரவரி 1998

மலர் : 16 இதழ் : 1



அருமைச் சிறுவர் சிறுமியரே,

'படிக்காத மேதை' என்ற சொல்லைப் பலமுறை நாம் கேள்விப்படுகிறோம். இதனால் 'நன்றாகப் படிக்காவிட்டாலும் கெட்டிக்காரனாக விளங்கி, வாழ்க்கையில் வெற்றி பெற முடியும்' என்று சிலர் எண்ணக் கூடும். ஆனால் உண்மை அதுவல்ல. பெரும்பாலான படிக்காத மேதைகள் குடும்பத்தின் பொருளாதார நிலை காரணமாகவோ அல்லது வேறு சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாகவோ படிக்க முடியாமல் போனவர்களே. படிக்கிற வாய்ப்பு கிட்டியிருந்தால் அவர்கள் 'தூள் பரத்தி'யிருப்பார்கள்! இன்னும் சிலர், தங்கள் வயதுக்கும் அதிகமான திறமைசாலிகளாக இருந்ததால் வகுப்புப் பாடங்களில் நாட்டம் கொள்ளாமல் இருந்தார்கள்.

எனவே 'படிக்காத மேதை' என்ற சொற்றொடர் நம்மை ஏமாற்றி விட அனுமதிக்கக் கூடாது. பரீட்சை நெருங்குகிறது. திட்டமிட்டு படித்தால் அதனைச் சுலபத்தில் வெற்றி கொள்ளலாம். தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிக்கிற கதையாக, இப்போது அலட்சியமாக இருந்து விட்டால் முழுப் பரீட்சையை சந்திப்பது கஷ்டம். உடற்பயிற்சி என்னுமளவுக்கு மட்டுமே விளையாடுங்கள். பயனுள்ள டீ.வி நிகழ்ச்சிகளை மட்டுமே பாருங்கள். மற்றபடி பாடங்களில் தீவிர கவனம் செலுத்துங்கள். புரிந்து கொண்டு படிப்பது முக்கியம். அப்போதுதான் மறக்காமல் இருக்கும்.

தேர்தல் பிரசாரங்கள் உங்கள் படிப்புக்கு இடையூறாக இருக்கும். அதையும் சமாளித்துப் படிக்கத்தான் வேண்டும். கூடவே இந்தத் தேர்தலையொட்டிக் கொஞ்சம் அரசியல் அறிவும் பெறலாம். 'மாணவர்கள் அரசியலில் ஈடுபடக் கூடாது' என்பது உண்மைதான். படிப்பில் இருக்க வேண்டிய கவனம் சிதறிப் போகும் என்பதால் இவ்வாறு சொல்கிறார்கள். அரசியலில் ஈடுபடுவது வேறு, அரசியல் பற்றி தெரிந்து கொள்வது என்பது வேறு. நமது ஜனநாயக அமைப்பு, அது இயங்கும் முறை போன்றவற்றைப் பெரியவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளத்தான் வேண்டும். நேரம் இருந்தால், பல்வேறு கட்சிகள், அவற்றின் கொள்கைகள் குறித்தும் விவாதிக்கலாம். ஆரோக்கியமான, அமைதியான அலசல் உள்ளத்தில் தெளிவை உண்டாக்கும். எதிர்காலத்துக்கு உதவும். நீங்கள் வோட்டுப் போடும் வயது அதிக தூரத்தில் இல்லையே!

உங்கள் கோகுலத்துக்குப் பதினைந்து வயது முடிந்து, பதினாறாம் ஆண்டு தொடங்குகிறது. வாழ்த்துங்கள்!

அனைவருக்கும் ரம்ஜான் வாழ்த்துகள்!

அன்புடன்,

கி. ராஜேந்திரன்
ஆசிரியர்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.

— பாரதியார்.

கோகுலம்

பிப்ரவரி 1998

இந்த இதழில்...

**பிப்ரவரி மாதம்
'கோகுலம் பிறந்த மாதம்!'
பதினைந்து ஆண்டுகள் முடிந்து
பதினாறாவது ஆண்டில் கோகுலம்
அடியெடுத்து வைக்கிறது.
இவ்வேளையில் கோகுலத்தின்
ஆரம்ப கால வாசகர்கள்
நால்வர் தங்கள்
நினைவலைகளை உங்களோடு
பகிர்ந்து கொள்கிறார்கள்.**

பானுமதி: எங்க வீட்டில் பெரியவர்கள் படிக்கும் புத்தகம்தான் வாங்குவாங்க. நான் ஆறாம் வகுப்பு படிக்கும்போது என் தோழியின் வீட்டில் தான் கோகுலம் அறிமுகமானது. அதன் பிறகு எங்கள் வீட்டிலும் வாங்க ஆரம்பித்தோம்.

சுரேஷ்: எனக்கு ரொம்ப சின்ன வயதிலேயே கோகுலத்தின் அறிமுகம் கிடைத்து விட்டது. பக்கத்து வீட்டில் கோகுலம் வாங்குவாங்க. எங்க வீட்டில் உள்ள பெரியவர்கள் அதைப் படித்து கதை சொல்வாங்க. இதனால எனக்கு கோகுலத்து மேல ஒரு ஆர்வம் வந்துவிட்டது.

ரமா: நான் ஆறாம் வகுப்பு படிக்கும் (84ஆம் வருடம்) போது 'மானாமதுரை' என்ற ஊரிலிருந்தோம். சிறிய ஊர் என்பதால் கடைகளில் கோகுலம் கிடைக்காது. நூலகத்துலதான் பார்க்கலாம். இதுக்காக நானும் என் தோழியும் நூலகத்துக்குப் போய் படிப்போம்.

சதீஷ்: எனக்கு 88ஆம் வருடத்திலிருந்து தான் கோகுலத்துடன் தொடர்பு ஏற்பட்டது. எங்க வீட்ல பேப்பர் ஏஜென்சி எடுத்திருந்தோம். அதனால் எல்லா



• சுரேஷ்
பி.எஸ்.சி
இரண்டாம்
ஆண்டு

புத்தகங்களும் வீட்டுக்கு வரும். அதே போலதான் கோகுலமும் அறிமுக மானது.

பானுமதி: கோகுலத் துல அப்போ வந்த மின்

நன்றாக இருக்கும். அடுத்த மாதம் பரீட்சை வருகிறது



• ரமா, பி.காம் பட்டதாரி

• பானுமதி,
பைடெக் - கவுன்சிலர்

மினிக் கதைகள், கவிதை கள் எனக்கு ரொம்பப் பிடிக்கும்.

சதீஷ்: எனக்கு படக் கதைகள்தான் அதிகம் பிடிக்கும். அப்புறம் ஒவ்வொரு மாதத்துக்கும் ஏற்றாற்போல ஆசிரியருடைய கடிதம்

கோகுலம் நினைவலைகள்...

என்றால் இந்த மாதமே தயாராகும்படியான ஆலோசனை ஊக்கமளிக்கும் வகையில் இருக் கும்.

ரமா: 'சிரிக்க – சிந்திக்க' என்று ஒரு பகுதி வரும். உண்மையிலேயே சிரிப்பாகவும் இருக்கும். சிந்திக்கவும் தோன்றும். எனக்கு மட்டும் இல்லை. பொதுவாகவே குழந்தைகளுக்கு வள்ளியப்பா, வாண்டுமாமாவின் எழுத்துகள் மீது தீராத ஆர்வம் உண்டு.

சுரேஷ்: கோகுலம் தொடங்கியதிலிருந்து கொ.மா. கோதண்டம் எழுதும் மலை வாசிகள் பற்றிய கதைகள் என்னை ரொம்பவே கவர்ந்திருக்கு.

பானுமதி: கோகுலத்துல மற்ற பத்திரி



• சதீஷ்குமார்,
பி.எஸ்.சி இரண்டாம் ஆண்டு



கைகளை விட சரளமான நடையில் மொழி இருப்பதுதான் கோகுலத்தோட வெற்றின்னு நினைக்கிறேன்.

ரமா: 'வரைந்து பழகுங்கள்' என்று ஒரு பக்கம் வரும். அதைப் பார்த்த பின்புதான் எனக்கு ஓவியத்துலேயே நாட்டம் ஏற்பட்டது.

சதீஷ்: ரேவதி சாருடைய அறிவியல் கட்டுரைகள் படிக்கிற மாணவர்களுக்கு ரொம்ப பயன்தரக் கூடியது. நானும் என் நண்பர்களும் இப்பகுதியை பைண்ட் செய்து வைத்திருக்கிறோம்.

சுரேஷ்: கோகுலம் என்றாலே என் நினைவுக்கு வருவது ஒரு நிகழ்ச்சி. எனக்கும் பக்கத்து வீட்டு நண்பனுக்கும் கோகுலத்தை யார் முதல்ல படிக்கிறது என்பதில் போட்டி வந்து விடும். ஒருநாள் நானும் அவனும் ஒரே புத்தகத்தைப் பிடித்து இழுக்க புத்தகமே கிழிந்து போனது. பிறகு இருவர் வீட்டிலும் ஆளுக்கொரு புது புத்தகத்தை வாங்கிக் கொடுத்தாங்க. இரண்டு பேர் வீட்டிலும் திட்டுக் கிடைத்தது வேறு விஷயம்!

ரமா: எனக்கும் ஓர் அனுபவம் உண்டு. நானும் தோழியும் ஒருநாள் நூலகத்தில் படித்துக் கொண்டிருந்தோம். நீண்ட நேரம் கழித்து திரும்பிப் பார்த்தால் கதவு பூட்டியிருந்தது. உள்ளே நாங்கள் இருவர் மட்டும் தான். பயந்தபடி கதவை வேகமாகத் தட்டினோம். சிறிது நேரம் கழித்து கதவு திறக்கப்பட்டது. ஏன் பூட்டினீங்க என்று கேட்டோம். 'நான் நேரமாச்சுன்னு சொன்னதெல்லாம் படிக்கிற சுவாரசியத்தில உங்க காதிலேயே விழலை. அதான் பூட்டினேன். உடனே ஓடி வந்து தட்டுறீங்க' என்றார். நாங்க மன்னிப்புக் கேட்டு விட்டு வீட்டிற்கு வந்து சேர்ந்தோம்.

பானுமதி: அம்மா குரங்கும் அப்பா குரங்கும் கஷ்டப்பட்டு உணவு சேகரிக்கும். ஆனால் அவற்றின் குட்டிக் குரங்கு அதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் அட்டகாசம் பண்ணும். அந்தக் கதை என்னை ரொம்ப பாதிச்சது. நம்ம அம்மா, அப்பாவும் இப்படித்தானே கஷ்டப்படுகிறார்கள். அவங்க சொல்றதை தவறாமே கேட்கணும் என்று புரிந்தது.

ரமா: அப்போது பறவை, விலங்குகள் அட்டைகளில் வரும். இப்போது குழந்தைகள் படம் மட்டும்தான் அட்டையில் வருகிறது.

பானுமதி: கோகுலத்தை படிக்கிற அனைவருக்கும் எழுத வேண்டும் என்ற ஆசை வரும். உங்களுக்கு எப்படி?

சதீஷ்: நான் சமீப காலமாக கோகுலத்துல எழுத ஆரம்பிச்சிருக்கேன். என் முதல் படைப்பைப் பார்த்ததும் சந்தோஷத்திற்கு அளவேயில்லை.

ரமா: நான் இனிமேல்தான் எழுத முயற்சி செய்யணும்.

சுரேஷ்: ஒரு விஷயத்தை விட்டுட்டோம். கோகுலம் சிறுவர் சங்கம் என்று ஆரம்பித்தார்கள். அதில் நான் உறுப்பினராய் இருந்திருக்கிறேன். எனக்கு ஒரு நம்பர் கொடுத் தாங்க. ஆனால் இப்ப மறந்து விட்டது. நம்பரும் பெயர், முகவரியும் கோகுலத்துல பிரசுரமான போது ஏதோ சாதித்தது போல இருந்தது.

நால்வரும்: எங்கள் குழந்தைப் பருவத்தில் கோகுலத்திற்கு நிச்சயம் இடம் உண்டு. நீண்ட காலத்துக்குப் பின் எங்களுடைய நினைவுகளை மீண்டும் அசை போட உதவிய கோகுலத்திற்கு நன்றி.

படங்கள்: **ஸ்ரீஹரி**

இந்தக் கடலில் மிதக்கலாம்!

சாக்கடல், பெயரே விசித்திரமாக இருக்கிறதல்லவா? பெயர் மட்டுமல்ல - சாக்கடலும் விசித்திரமானதுதான். இதை பலவிதமாக அழைக்கின்றனர். கிரேக்கர்கள் 'சாக்கடல்' என்றும் ஹீப்ருக்கள் 'உப்புக் கடல்' என்றும் அரேபியர்கள் 'துர்நாற்றக் கடல்' என்றும் அழைகின்றனர்.

பூமியில், கடல் மட்டத்துக்கு அடியில் குறைந்த உயரத்தில் உள்ள நீர்நிலை சாக் கடல் மட்டும்தான். கடல் மட்டத்துக்குக் கீழே 400 மீட்டரில் இது உள்ளது. 16 கி.மீ. அகலமும் 76 கி.மீ. நீளமும் உடையது. வேடிக்கை என்னவென்றால் 'சாக்கடல்' உண்மையில் கடலே இல்லை; மிகப் பெரிய ஏரி அவ்வளவுதான்!

ஜோர்டானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் சாக்கடல் அமைந்துள்ளது. இருநாடுகளுக்கும் முக்கிய எல்லைப் பகுதியாக இது அமைகிறது. ஜோர்டான் நதியும் சிறு சிறு ஓடைகளும் இதில் கலக் கின்றன. இவையே இதற்கு உப்புத் தன்மையைத் தருகின்றன. ஆனால் இதில் விழும் நீர் வெளியேற ஒரே வழி 'ஆவியாதல்' மட்டுமே. பாலைவனப் பகுதியாக இருப்பதால் 'ஆவியாதல்' வேகமாக நிகழ்கிறது.

சாக்கடலில் 11,600,000,000 டன்கள் உப்பு உள்ளது. இவற்றில் ஒவ்வொரு ஆண்டும் 8,50,000 டன்கள் உப்பு அதிகமாகிக் கொண்டே வருகிறது. பெருங்கடல்களை விட ஏழு மடங்கு உப்பு அதிகம் உள்ளது. உப்பு என்றால் நாம் உணவில் பயன்படுத்தும் உப்பு மட்டுமல்ல. மக்னீஷியம் குளோரைடு, கால்ஷியம் குளோரைடு, பொட்டாசியம் குளோரைடு போன்ற எண்ணற்ற தனிமங்கள் உள்ளன. பொதுவாகவே கடல்களில் 4 முதல் 6 சதவீதம் வரையே உப்பு இருக்கும். ஆனால் இதில் 27 சதவீதம் உப்பு உள்ளது.

உங்களுக்கு நீச்சல் தெரியாவிட்டாலும், கவலையில்லை. நீங்கள் இதில் மூழ்க மாட்டீர்கள். நீரில் மிதப்பீர்கள். ஏனெனில், உப்பு அதிகமாக இருப்பதால் நீரின் அடர்த்தியும் அதிகமாக உள்ளது.

இக்கடலில் எந்த உயிரினங்களும் உயிர் வாழ முடியாது. ஜோர்டான் நதி மூலம் வரும் மீன்கள் கூட உடனே மடிந்து விடுகின்றன.


சாக்கடலிலிருந்து பொட்டாஷியம் குளோரைடு, மக்னீஷியம் குளோரைடு, கால்ஷியம் குளோரைடு, சோடியம் குளோரைடு, ப்ரோமைன், ஜிப்சம் போன்ற எண்ணற்ற வேதிப் பொருட்களை மலிவான செலவில் எளிதில் பிரித்தெடுக்க முடிகிறது. பொட்டாஷியம் குளோரைடு செயற்கை உரம் தயாரிப்பில் மூலப் பொருளாக விளங்குவது குறிப்பிடத் தக்கது. இப்பகுதி குளிர்கால வாசஸ் தலமாக வேகமாக வளர்ந்து வருகிறது.

பைபிள் வரலாறுடன் இதற்கு நெருங்கியத் தொடர்பு உண்டு. சோமன் மற்றும் கோமராஹ் நகரங்கள் இதில் மூழ்கி இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

— கோ. சதீஷ்குமார்




* நம்பினால் நம்புங்கள்! இவர் உண்மையிலேயே மிதக்கிறார்!



கழுதை தப்பிய கதை!

கழுதை ஒன்று தன் எஜமானரிடமிருந்து தப்பித்துக் காட்டுக்குள் சென்றது. வழியில் ஒரு குதிரையைக் கண்டது.

"குதிரையண்ணா, உணவு எங்கே



கிடைக்கும்?" என்றது கழுதை.

"இன்னும் பத்து நிமிடம் நடந்தால் உணவு, தண்ணீர் எல்லாம் கிடைக்கும். நீ எங்கிருந்து வருகிறாய்?" என்று கேட்டது குதிரை.

"என் எஜமானிடம் வேலை பார்த்து வந்தேன். அந்த அடிமை வேலை பிடிக்காமல் தான் இங்கு ஓடி வந்திருக்கேன்" என்று கழுதை கூறியது.

"ஒரு முக்கியமான விஷயம். இங்கு பொல்லாத நரி நடமாடிக்கிட்டு இருக்கு. அதுக்கிட்டே மட்டும் மாட்டிக்காதே!" என்று எச்சரித்து அனுப்பியது குதிரை.

பத்து நிமிடத்தில் அந்த இடத்தை அடைந்த கழுதை வயிறு முட்டச் சாப்பிட்டது. தூங்குவதற்கு இடம் தேடிக் கொண்டிருக்கும் போது குதிரை குறிப்பிட்ட பொல்லாத நரி எதிர்பட்டது.

நரியைக் கண்ட கழுதைக்கு பயம் பிடித்துக் கொண்டது. எப்படியாவது ஏமாற்றி தப்பித்து தன் எஜமானரிடமே போய்ச் சேர்ந்து விட வேண்டுமென நினைத்தது. அதற்குள் நரி அருகில் வந்து விட்டது.

"நரி மாமா, கால்ல முள்ளு குத்தியிருக்கு எடுத்து விடறீங்களா?" என்று நடித்தது கழுதை.

நரியும் கழுதை உணவாகக் கிடைக்கக் கூடிய மகிழ்ச்சியில் காலுக்கருகில் சென்றது.

அவ்வளவுதான் கழுதை காலால் ஓங்கி ஒரு உதை விட்டது. நரி, இந்த எதிர்பாராத தாக்குதலால் நிலைகுலைந்து கிடந்தது.

கழுதை பிடித்தது ஓட்டம்.


– ஜெ. ராஜா,
பதினோறாம் வகுப்பு, 'ஆ' பிரிவு,
அரசினர் மேல் நிலைப்பள்ளி,
ஊத்துக்கோட்டை.

மறதி முத்து!

மருத முத்து நல்லவன். ஒன்பதாம் வகுப்பு படிக்கிறான். அவனிடமிருந்த ஒரே ஒரு குறை அளவுக்கு அதிகமான ஞாபக மறதிதான்!

பள்ளிக்கு செருப்புப் போடாமல் கிளம்பி விடுவான். இல்லையென்றால் செருப்பை மாட்டிக் கொண்டு சாப்பாடு டப்பாவை வைத்து விட்டுச் சென்று விடுவான். இந்த ஞாபக மறதியால் பல பொருள்களை அவன் இழந்திருக்கிறான்.

மருதமுத்துவை பள்ளியில் 'மறதி முத்து' எனக் கூப்பிட ஆரம்பித்தார்கள். இதையறிந்த மருதமுத்துவுக்கு கோபம் வந்தது. இனி எல்லாப் பொருள்களையும்



மறக்காமல் கொண்டு வர வேண்டுமென நினைத்துக் கொண்டான்.

மறுநாள் புத்தகம், சாப்பாடு, செருப்பு என எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

"எங்கேடா கிளம்பிட்டே?" என்று கேட்டார் மருத முத்துவின் அம்மா.

அவன் பதில் சொல்லாமல் போய்க் கொண்டிருந்தான். போகும் வழியில் தன் நண்பன் மணியைக் கண்டான்.

"டேய் மருது எங்கே போறே?" என்று வியந்தான் மணி.

"நான் பள்ளிக்கூடம் போறேன். நீ வரலையா? இதோ பார் எதையும் மறக் காமல் எடுத்துட்டு வந்திருக்கேன்" என் றான் பெருமையுடன்.

"இன்னிக்கு காந்தி ஜெயந்தி, விடுமுறைடா" என்றான் மணி சிரித்துக் கொண்டே!

சி. முனுசாமி,
வெள்ளை கிராமம்,
திருவண்ணாமலை மாவட்டம்.

குதிரையைத் தேடி...

ரங்கன் குதிரை வண்டி ஓட்டுபவன். அதில் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டே ரங்கனும் அவன் மனைவி ரங் கம்மாவும் வாழ்ந்தனர்.


ஒரு நாள் ரங்கன் தன் குதிரையைத் தொலைத்து விட்டு வீட்டிற்கு வந்தான். குதிரையைக் காணாத ரங்கம்மா கத்த ஆரம்பித்தாள்.

குதிரையோடு வந்தால்தான் வீட்டிற் குள் விடுவதாகக் கூறி அனுப்பினாள்.

ரங்கன் பல இடங்களிலும் குதிரை யைத் தேடி அலைந்தான். எங்கும் குதிரை யைக் காணோம். பசி மயக்கத்தில் கண் இருட்டிக் கொண்டு வந்தது. அப்படியே மரத்தடியில் சாய்ந்தான். பக்கத்தில் ஒரு பிராணி படுத்திருந்தது.

அதைப் பார்த்ததும் மிகுந்த சந் தோஷம் அடைந்தான் ரங்கன். "ஏ முட் டாள் குதிரையே எழுந்திரி" என்றான்.

அந்தப் பிராணியும் பசி மயக்கத்தில் இருந்ததால் எழுந்திருக்கவில்லை. அருகில் கிடந்த கயிறை எடுத்து அந்தப் பிராணி யின் கால்களை வேகமாகக் கட்டினான் ரங்கன். அதை இழுத்துக் கொண்டு வந்து தன் வீட்டுத் திண்ணையில் போட்டு விட்டுத் தானும் அதன் அருகிலேயே தூங்கி விட்டான்.




மறு நாள் காலை ரங்கம்மா வாசல் தெளிக்க வந்தாள். கதவைத் திறந்த ரங்கம்மா பயங்கரமாக அலறினாள்.

தூக்கத்திலிருந்து எழுந்த ரங்கன் தன் அருகில் கிடந்த பிராணியைப் பார்த்துக் கத்தினான். ஆம் அது ஒரு சிறுத்தை!

அப்போது அரண்மனைக் காவலன் வந்தான், நாட்டிற்குள் புகுந்து, பயமுறுத்திக் கொண்டிருந்த சிறுத்தையை, தனி மனிதனாக அடக்கிய வீரன் ரங்கனுக்கு அரசர் ஆயிரம் பொன் பரிசாகத் தருவதாகக் கூறினான்.

ரங்கம்மா ரங்கனின் வீரத்தைப் பாராட்டி மகிழ்ந்தாள்!

ப. விஜயகுமார்,
வேலநத்தம்



1. சதுர வடிவத் தாளை எடுத்துக் கொண்டு படத்தில் காட்டியபடி வைத்துக் கொள்ளுங்கள். மேலிருந்து கீழ் நோக்கி மடித்துக் கொள்ளுங்கள். மீண்டும் பழைய நிலையில் வைத்துக் கொள்ளவும்.

2. மேல் முனை நடுக் கோட்டைத் தொடுமாறு மடிக்கவும். அதே போல் கீழ் முனையும் நடுக்கோட்டைத் தொடுமாறு மடிக்கவும்.

3. இடது பக்கத்திலும் அதே போல் இரண்டு பக்கங்களையும் மடித்துக் கொள்ளுங்கள்.


4. படத்தில் காட்டியபடி இடது முனையை மடித்து விடுங்கள். பிறகு கீழ் பக்கத்தை மேல் நோக்கி மடிக்கவும்.

5. படம் 5-ல் காட்டியபடி வலது முனையை மேல் நோக்கி மடிக்கவும்.

6. மேலுள்ள முனையை 2 செ.மீ வரை இரண்டாக வெட்டுங்கள்.

7. வெட்டிய பகுதியை படத்தில் காட்டியபடி மடித்து விடுங்கள்.

இதோ நத்தை தயார்.



நத்தை

கோகுலின் நாய்க்குட்டி!

அந்த நாய்க்குட்டி எங்கிருந்தோ வந்தது. அதை தாத்தா விரட்ட முயன்றார். சத்தம் கேட்டு, வாசலுக்கு வந்தான் கோகுல்.

"என்ன, தாத்தா?"

"இந்த நாய்க்குட்டிச் சனியன் எங்கே இருந்தோ வந்திருக்கு. விரட்டறேன்."

"விரட்டாதிங்க தாத்தா! அழகா இருக்கு. வளர்க்கலாம்."

"வேறே வேலை இல்லை. போ உள்ளே. நாய் எல்லாம் வளர்க்கக் கூடாது."

"உயிர்களிடத்தில் அன்பு வேணும்னு பாரதியார் சொல்லி இருக்கார், தாத்தா!"

சற்றுத் தயங்கினார் தாத்தா. கோகுலைப் பார்த்து விட்டு அந்த நாய்க்குட்டி தன் சிறு



வாலை ஆட்டியது. இரு காதுகளிலும், முதுகிலும் சிறு கறுப்பு நிறத் திட்டுகளுடன் வெள்ளை நிறத்தில் காணப் பட்டது.

சிறிது அச்சத்துடனேயே கோகுல் அந்த நாய்க் குட்டியை அணுகினான். வாலை ஆட்டியபடி அது அவனை நிமிர்ந்து நோக்கியது. இரு கண்களும் பளபளத்தன.

கோகுலையும், நாய்க்குட்டியையும் விட்டு விட்டு, தாத்தா வீட்டினுள் சென் றார்.

தரையில் அமர்ந்து, நாய்க்குட்டியைத் தடவிக் கொடுத்தான் கோகுல். அது அவ னுடைய கையை நக்கியது. அவனைக் கண்டு அது மகிழ்ச்சி அடைவது புரிந்தது. அவனுக்கும் சந்தோஷமாக இருந்தது.

"பசிக்கிறதா?" நாய்க்குட்டியைத் தடவியபடி கோகுல் அதனிடம் கேட்டான்.

'க்கும், க்கும்' என்று கீச்சுக் குரலில் அது முனகியபடி, கால்களை இப்படியும், அப் படியுமாக சுறுசுறுப்புடன் வைத்து, வாலை வேகமாக ஆட்டியபடி அவனுடைய முகத் தைப் பார்த்தது.

"இரு, வரேன்" என்று அதனிடம் சொல்லிவிட்டு கோகுல் வீட்டினுள் சென்றான்.

அவனுக்காக தாத்தா விதவிதமான பிஸ்கெட்டுகளை வாங்கி, உறை பிரித்து, ஒரு அகண்ட பாட்டிலில் போட்டு வைத்

திருவாழத்தான்



திருந்தார். கட்டில் மீது ஏறி, பாட்டிலைத் திறந்து, இரண்டு பிஸ்கெட்டுகளை எடுத்துக் கொண்டு இறங்கினான். திரும்பி வந்து பார்த்தபோது, அது வாசல்படி அருகில் அவனுக்காகக் காத்திருப்பது தெரிந்தது. புத்திசாலியான நாய் என அறிந்து கொண்டான்.

பிஸ்கெட்டை அதன் முன் போட்டான் கோகுல். அது ஆவலுடன் கவ்வித் தின்றது. பிறகு அது பூச்செடி நிழலில் படுத்துக் கொண்டது.

"அப்படி எல்லாம் மண்ணில் படுத்துக் கொள்ளக் கூடாது" என்று அதனிடம் சொல்லிவிட்டு, கோணிச் சாக்கு ஏதாவது கிடைக்கிறதா என்று தேடினான். பழைய அரிசிச் சாக்கு பார்வையில் பட்டது. எடுத்து வந்தான்.

"இந்தா, இதுலே படுத்துக்க."

அதே பூச்செடி நிழலில் சாக்கை விரித்தான். நாய்க்குட்டியைத் தூக்கி, சாக்கில் படுக்க விட்டான். சமர்த்தாக அது படுத்து, அவனைப் பிரியமாகப் பார்த்தது.

பள்ளியில் அரை ஆண்டுப் பரீட்சை முடிந்து, விடுமுறை விடப்பட்டது. ஆகவே அந்த விடுமுறை நாட்களை நாய்க்குட்டியுடன் கழிக்க கோகுல் முடிவு செய்தான். ஒரு பழைய டப்பா மூடியில் அம்மாவிடமிருந்து பசும்பாலை வாங்கிச் சென்று நாய்க்குட்டிக்குக் கொடுத்தான். அது ஆர்வத்துடன் பாலை நக்கிக் குடித்தது. அவன் நடந்தபோது, அவன் பின்னால் வீட்டைச் சுற்றி வந்தது.

ஆனால் தாத்தா அதை விரட்டிக் கொண்டே இருந்தார்.

"ஏன், தாத்தா, விரட்டறீங்க?" என்று பரிதாபத்துடன் கோகுல் கேட்டான்.

"இந்த லீவுக்கு நாம் எல்லாரும் பெங்களூருக்கு உன் அத்தை வீட்டுக்குப் போவதாக இருக்கிறோம். நாம் போன பிறகு நாய்க்குட்டியை யார் காப்பாற்றுவார்கள்? யார் அதுக்கு சோறு போட்டு, பால் ஊற்றுவார்கள்? அதனால்தான் நான் அது இங்கே வந்த போதே விரட்டினேன். இப்போ பாரு, நீ அது கூட பழகிட்டே. அதை விட்டு விட்டு உன்னால் இருக்க முடியலே. பெங்களூருக்கு நாம் செல்வதாக இருந்தால், நாய்க்குட்டியை நாம் விரட்டித்தான் ஆகணும்" என்றார் தாத்தா அவனிடம்.

"நான் பெங்களூருக்கு வரலே, தாத்தா!"

"சரி. நாங்கள் எல்லாரும் போறோம். யார் உனக்கு சமைச்சுப் போடுவாங்க? நீ தனியாக இந்த நாய்க்குட்டியுடன் வீட்டில் இருப்பாயா?"

"ஓட்டல்லே சாப்பிட்டுக்கறேன்."

"நாய்க்குட்டிக்கு?"

"ஓட்டல்லேருந்து திரும்பி வரும் போது, ஒரு டப்பாவில் கொஞ்சம் சாதமும், மோரும் எடுத்திட்டு வரேன்."

"சரி. ராத்திரி தனியா படுத்துத் தூங்குவியா?"

"தூங்குவேன். நாய்க்குட்டிதான் துணைக்கு இருக்கே!"

"இந்தச் சின்ன நாய்க்குட்டியா உனக்குத் துணை? சரி. இருந்து கொள். நாங்கள் பெங்களூர் போகிறோம்" என்றார் தாத்தா.

தாத்தாவிடம் அப்படி வீராப்பாகச்

சொல்லிவிட்டாலும், கோகுலுக்கு மனதில் உதைப்பு எடுக்கத் தொடங்கியது. வீட்டில் தனியாக அவன் மட்டும் நாய்க்குட்டியுடன் இருப்பது, சாப்பிட ஓட்டலுக்குத் தனியாகச் செல்வது, திரும்புவது, இரவு தனியாகப் படுத்து உறங்குவது என்பதை எல்லாம் நினைத்துப் பார்த்தபோது, மனது பதைத்தது. நிச்சயமாக அவனால் அப்படித் தனியாக வீட்டில் இருக்க முடியாது. குளிப்பாட்டுவதற்கே அம்மா, அப்பா அல்லது தாத்தா வேண்டும். வீட்டு வாசல் படியில் நாய்க்குட்டியை மடியில் வைத்துக் கொண்டு யோசித்தான்.

வீட்டுக்குப் பக்கத்திலேயே, அடுத்த தெருக்களில் அவனுடைய நண்பர்களின் வீடுகள் இருக்கின்றன. அவர்களில் எவராவது ஒருவர் நாய்க்குட்டியை, அவன் பெங்களூரிலிருந்து திரும்பி வரும் வரை தன்னிடம் வைத்துக் கொள்ள சம்மதிக்கலாம்.

பூச்செடி நிழலில் சாக்கின் மீது நாய்க்குட்டியைப் படுக்க வைத்துவிட்டு, கோகுல் சென்றான்.

முதலில் ஹனீஃப்பைச் சந்தித்தான்.

"என்ன கோகுல்? லீவுலே ஊருக்கு எங்கேயும் போகலியா?'' ஹனீஃப் கேட்டான்.

''போகப் போறேன். அதுக்காகத்தான் உன் கிட்ட வந்திருக்கேன்.''

''நான் என்ன செய்யணும்?''

"ஒரு உதவி பண்ணணும்."

"சொல்லு, செய்யறேன்."

''என் கிட்டே ஒரு நாய்க்குட்டி இருக்கு. நான் ஊருக்குப் போய் விட்டுத் திரும்பி வரும் வரை அதை நீ பார்த்துக்கணும். செய்வியா?"

"நாயா?" அரண்டு போய்விட்டான்.

''நாய் இல்லே. நாய்க்குட்டி. இத்துனூண்டு குட்டி." குனிந்து நாய்க்குட்டியின் உயரத்தைக் காட்டினான் கோகுல்.

"நாயினாலே எங்களுக்கு ஆகாது."

"நாய் இல்லே. நாய்க்குட்டி."

"இருக்கட்டும். என் அண்ணனை ஒரு நாய் கடிச்சிருச்சு. அதுலேருந்து யாருமே எங்க வீட்டுலே நாய் பக்கம் போக மாட்டாங்க. பயம். என்னால் உனக்கு உதவ முடியாது. வருத்தப்படறேன். வேறே யார் கிட்டவாவது கொடுத்திட்டு, ஊருக்குப் போ."

அங்கிருந்து சென்று, கணேஷ், ராமலிங்கம் ஆகிய நண்பர்களை கோகுல் சந்தித்தான். அவர்களும் ஏதேதோ காரணம் சொல்லி, நாய்க்குட்டியை ஏற்க மறுத்துவிட்டனர். ஆரோக்கிய மேரியை வழியில்



பெர்னார்ட் ஷா



அறிஞர் பெர்னார்ட் ஷாவின் வாழ்வில் நடந்த ஒரு சுவையான நிகழ்ச்சி. பெர்னார்ட் ஷா எழுதிய புத்தகம் ஒன்று வெளியான நேரம். புத்தகத்தை வெளியிட்ட பதிப்பாளருக்கு, ஷாவிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அக்கடிதத்தில் பெர்னார்ட் ஷா எதுவும் எழுதியிருக்கவில்லை. '?' என்ற கேள்விக் குறியை மட்டும் எழுதி, தம் கையெழுத்துப் போட்டு அனுப்பியிருந்தார். புத்திசாலியான பதிப்பாளர், ஷாவின் கருத்தைப் புரிந்து கொண்டு, தமது பதில் கடிதத்தில் '!' என்ற குறியைப் போட்டு ஷாவிற்கு அனுப்பினார். உங்களுக்குப் புரிகிறதா?

புத்தக விற்பனை எப்படி இருக்கிறது என்று '?' குறியின் மூலம் பெர்னார்ட் ஷா கேட்டிருந்தார்; ஆச்சரியப்படும் அளவிற்கு பிரமாதமாக விற்பனை ஆகிக் கொண்டிருக்கிறது என்று '!' குறியின் மூலம் பதிப்பாளர் பதில் எழுதியிருந்தார்.

— எஸ். லக்ஷ்மி,
ஏழாம் வகுப்பு,
அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி,
நங்கநல்லூர்.

சந்தித்த போது அவன் சொன்னாள், "நாங்க பூனை வளர்க்கிறோம். பூனைக்கும் நாய்க்கும் ஒத்துக்கிடாது."

என்ன செய்வது என்று தெரியவில்லை. வருத்தத்துடன் வீடு திரும்பினான்.

"தாத்தா!"

"என்ன?"

"நானும் உங்க கூட பெங்களூர் வர முடிவு பண்ணிட்டேன்."

"சந்தோஷம்."

"நாய்க்குட்டி?"

"அதையும் பெங்களூருக்குக் கூட்டிட்டு போகலாம்னு சொல்றியா?"

"ஆமா."

"நடக்காது. ரயில்லே ஏத்த மாட்டாங்க."

"அப்போ என்ன பண்ணறது, தாத்தா?"

"என் கிட்டே விடு. நான் என்னவோ பண்ணறேன்."

தாத்தாவின் கையில் இருப்புக் கொள்ளாமல், நாய்க்குட்டி துள்ளியது. அதை அவர் தன் வயிறோடு அழுத்திக் கொண்டார்.

"எங்கே தாத்தா கொண்டு போறீங்க?"

"கண்காணாத இடத்துல விட்டுட்டு வந்துடறேன்."

உடனே கோகுல் சத்தம் போட்டு அழ ஆரம்பித்தான். கோகுல் எவ்வளவோ தடுத்தும் தாத்தா கேட்கவில்லை.

சிறிது நேரத்தில் தாத்தா திரும்பி வந்தார். கோகுலைக் கூப்பிட்டார். கோகுல் நிமிர்ந்து பார்க்காமல் அழுது கொண்டிருந்தான்.

"டேய் நிமிர்ந்து பார்த்துட்டு அழுடா!"

நிமிர்ந்தவன் சந்தோஷப்பட்டான். எதிரே கோகுலின் நாய்க்குட்டி. "தேங்ஸ் தாத்தா. அப்போ ஊருக்கு?"

"இந்த நாய்க்குட்டிக்காக நான் ஊருக்குப் போகலே. நீ போயிட்டு திரும்பி வா" என்றார் தாத்தா.

கோகுல் தாத்தாவைக் கட்டிக் கொண்டான்.

தலையைக் கிள்ளி...!

எப்போதும் போல கண்ணன் பள்ளிக்கு மின்சார ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தான்.

காலை நேரமாதலால் ரயிலில் சிறிது கூட்டம் இருக்கவே செய்தது.

முதல் ஸ்டேஷன் வந்ததும் நிறையப் பேர் இறங்கினர். வயதான ஒரு பாட்டி ஏறினாள். அவள் கையில் வேர்க்கடலைக் கூடை இருந்தது.

நிறையப் பேர் அவளிடமிருந்து வேர்க்கடலையை வாங்கிக் கொறித்துக் கொண்டிருந்தனர்.

கண்ணன் தன் சட்டைப் பாக்கெட்டைத் தொட்டுப் பார்த்தான். ஐம்பது காசு மட்டுமே இருந்தது.

'வேர்க்கடலை சாப்பிடுவது தவறல்ல. அதில் உடம்புக்கு வேண்டிய சத்துகள் உண்டு. அதனால் சாக்லேட் சாப்பிடும் மாணவர்கள் வேர்க்கடலை சாப்பிடத் தங்களைப் பழக்கிக் கொள்ளலாம். உடம்புக்கும் கேடில்லை' என்று தமிழாசிரியர் ஒருமுறை வகுப்பில் கூறியது கண்ணனின் நினைவுக்கு வந்தது.

பாட்டி அவனருகே வந்து நின்றாள்.

"என்னப்பா, ஆசையா இருந்தால் வேர்க்கடலை வாங்கிச் சாப்பிட வேண்டியதுதானே? சும்மா பார்த்துக்கிட்டே இருந்தால் எப்படி?" - என்றாள் அந்தப் பாட்டி.

"பாட்டி, வேர்க்கடலை வாங்கற அளவுக்கு என்னிடம் காசில்லை. ஐம்பது பைசா மட்டும்தான் இருக்கு" - கண்ணன் வருத்தமாகச் சொன்னான்.

"ஐம்பது காசுதான் இருக்கா? அப்ப தலையைக் கிள்ளி, கையில போட



றேன். சரியா?" என்றாள் பாட்டி.

ஒருநிமிடம் திக்கென்றிருந்தது கண்ணனுக்கு. பாட்டி சொன்னபடி நம்ம தலையைக் கிள்ளி நம்ம கையிலேயே போட்டுடுவாளோ என்று பயந்தான். இராவணன் மாதிரி பத்துத் தலைகள் இருந்தாலாவது பரவாயில்லை. ஒன்று போனாலும் ஒன்பது மிஞ்சும். ஆனால் தனக்கு இருப்பதோ ஒண்ணே ஒண்ணுதான். என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டான்.

"என்ன!... தலையைக் கிள்ளி, கையிலே போடுவியா பாட்டி?" – பயத்தால் குரல் கம்மக் கேட்டான் கண்ணன்.

"ஆமாம். சரி...சீக்கிரம் ஐம்பது பைசாவை எடுத்து என் கையில் போடு" – பாட்டி அதட்டினாள்.

வேறு வழியின்றி கண்ணன் பாட்டி கையில் ஐம்பது பைசாவைக் கொடுத்தான்.

"ஊம்... கையை நீட்டு" - பாட்டி சொல்ல கண்ணன் பயந்தபடியே கையை நீட்டினான்.

பாட்டி டப்பாவில் வேர்க்கடலையை எடுத்து அதன் மேல் பகுதி கடலையை விரலால் கீழே தட்டி விட்டு உள்ளடங்க இருந்த கடலையை அவன் கையில் கவிழ்த்தாள்.

"பாட்டி, தலையைக் கிள்ளிக் கையிலே தருவேன்னு சொன்னீங்களே...?" கண்ணன் கேட்க;

"வேர்க்கடலையை, டப்பி உள்ளடங்கத் தருவதைத்தான் அப்படிச் சொன்னேன்" என்றாள் பாட்டி.

கண்ணன் நிம்மதியாக வேர்க்கடலையைக் கொறிக்க ஆரம்பித்தான்.


— அ.கு. கிருஷ்ணன்

எங்கள் பள்ளியில் நடந்தது!



வராத ராஜன்?

நான் எட்டாம் வகுப்பு படிக்கும் போது என்னுடன் வரதராஜன் என்ற மாணவனும் படித்தான். அவன் பள்ளிக்கு



ஒழுங்காகவே வரமாட்டான். வகுப் பாசிரியர் ஒரு நாள் அவனைக் கூப்பிட்டு "உனக்கு வரதராஜன்னு பேர் வச்சதுக்கு பதிலா 'வராத ராஜன்'னு வச்சிருந்தா பொருத்தமாக இருக்கும்'' என்றார். அவனைத் தவிர அனைவருமே சிரித்தோம்.

டி.என். பாலகிருஷ்ணன்,
மடிப்பாக்கம்.

கப்பலோட்டிய தமிழர்!

வரலாறு வகுப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆசிரியர் திடீரென்று ஒரு மாணவனை எழுப்பி "கப்பலோட்டிய தமிழர் யார்?" என்று கேட்டார். பதட்டத்தில் எழுந்தவன் ''சிவாஜி கணேசன் சார்'' என்றான். எங்களுக்




செல்லாம் ஒரே சிரிப்பு! ஆசிரியரோ அவனுடைய பதிலால் மிகவும் வருந்தினார்.

த.இந்து, ஐந்தாம் வகுப்பு,
ஜவகர் மேல் நிலைப் பள்ளி,
நெய்வேலி.

கண்டுபிடிப்பீர்களா?


கண்டுபிடிப்புகள் என்ற தலைப்பில் ஆசிரியர் பாடம் நடத்தி முடித்தார். பின்னர் மாணவர்களிடம் "பிற்காலத்தில் நீங்கள் எதையாவது கண்டு பிடிக்க முயற்சிப்பீர்களா?" என்று கேட்டார். ஒருவன் வேகமாக எழுந்து "சார்! பரீட்சை எழுதாமல் பாஸ் செய்வது எப்படின்னு நான் கண்டுபிடிப்பேன்" என்று பதிலளித்தான். ஆசிரியரே சிரித்து விட்டார்.



இ. நடராஜன், அனந்தபுரம்.

மணிமேகலையை இயற்றியவர்?


தமிழாசிரியர் பாடம் நடத்தி விட்டு கேள்வி கேட்க ஆரம்பித்தார். "கம்ப ராமாயணத்தை இயற்றியவர் யார்?" என்று கேட்டார் ஒருவனிடம். அவனோ தெரியாமல் முழித்தான். "கேள்வியிலேயே விடை இருக்குது" என்றார் ஆசிரியர். அவன் "கம்பர்" என்று சொல்லி விட்டான். என் நண்பனை எழுப்பி "மணிமேகலையை இயற்றியவர் யார்?" என்றார். அவன் சிறிதும் யோசிக்காமல் "மணி" என்றானே பார்க்கலாம். வகுப்பே சிரிப்பில் மூழ்கியது.



எம். ராஜதுரை, வரிக்கல் கிராமம்.

காஷ்மீரைக் காணவில்லை!

இந்திய வரைபடத்தை வைத்து ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அப்போது "காஷ்மீரால் சுற்றுலா பயணிகள் இந்தியாவிற்கு அதிகமாக வருகிறார்கள். அரசாங்கத்திற்கு வருமானமும் கிடைக்கிறது" என்றார். அப்போது சக மாணவன் ஒருவன் "சார், காஷ்மீரைக் காணோம்" என்றான். எல்லோரும் திகைத்தோம். "என்னடா சொல்றே!" என்றார் ஆசிரியர். "வரைப்படத்துல காஷ்மீர் கிழிஞ்சிருக்கு, அதைத்தான் சொன்னேன் சார்" என்றான். கிழிந்த பகுதியை மீண்டும் ஒட்டினோம்.



டி.ஜெகன், வெள்ளையாம்பட்டு.

சோம்பேறிகளுக்கு

நாட்டில் பஞ்சம் ஏற்பட்டது. மக்கள் உணவு இன்றி வாடினர். குடிக்கத் தண்ணீர் கூடக் கிடைக்கவில்லை.

அந்த நகரில் இரு விவசாயிகள் இருந்தனர். ஒருவர் பெயர் நந்து. அவன் சுறுசுறுப்பான உழைப்பாளி. அவனுக்கு இரண்டு மகன்கள். அவர்களும் தந்தையைப் போன்றவர்களே!

மற்றொருவன் சுந்து. அவனுக்கும் இரண்டு மகன்கள். தந்தை, மகன்கள் எல்லாரும் சோம்பேறிகள்.

பஞ்சம் வந்தபோது, நந்து முடிந்தவரையில் தன் குடும்பம் மற்றும் ஆடு, மாடுகளுக்கு உணவு போன்றவற்றைத் தேடி வழங்கினான். அது முடியாத நிலை வந்தபோது, ஆடு-மாடுகளுடன் வெளியூர் சென்று பிழைக்க எண்ணிக் கிளம்பிவிட்டான்.



வெகு தூரம் நடந்த பிறகு, அவர்கள் ஒரு காட்டை அடைந்தனர். அதற்குள் மாலை வந்துவிட்டது. சற்று தூரத்தில் ஒரு ஓடை சலசலத்து ஓடியது. இரவுப் பொழுதை அங்கேயே கழித்துச் செல்ல விரும்பி அங்கிருந்த பெரிய அரசமரத்தடியில் கூடாரம் இட்டான் நந்து.

பிறகு, தன் மூத்த மகனை அழைத்து, ''நீ போய்க் கொஞ்சம் காய்ந்த சுள்ளிகளைத் தேடியெடுத்துவா, அதைக் கொண்டு அடுப்பு பற்ற வைக்கலாம்'' என்றான்.

அப்போது இளைய மகன், "அண்ணனை அனுப்பாதீங்க. நான் போகிறேன்... நீங்கள் எல்லாம் இங்குள்ள வேலைகளைக் கவனிங்க..." என்றான்.

உடனே நந்து, "எப்படியோ எல்லாரும் ஒன்று கூடி, வேலைகளைப் பங்கிட்டுச் செய்து முடியுங்கள்'' என்றான்.

பின்னர் எல்லாரும் சுறுசுறுப்புடன் உழைக்கத் தொடங்கினார்கள். இளையவன் சுள்ளி பொறுக்கி வந்தான். மூத்தவன் குடிக்க, உணவு சமைக்க நீர் கொண்டு வந்தான். நந்துவின் மனைவி அடுப்பு அமைத்தாள். நந்து சென்று ஆடு-மாடுகளுக்குத் தண்ணீர் காட்டி அழைத்து வந்தான்.

சற்று நேரத்தில் அடுப்பில் நீர் கொதிக்கத் தொடங்கியது. பக்கத்தில் பானை நிறைய தண்ணீர். அதைப் பார்த்ததும் நந்துவுக்குச் சிரிப்புதான்



என்ன பரிசு?

ஜானகி மணாளன்

வந்தது. உடனே அவன் மகன்களிடம், ''எல்லாம் தயார். ஆனால் நாம் எதைச் சமைப்பது; சாப்பிடுவது...?'' என்றான்.

மூத்தவன் யோசனையுடன் உயரே பார்த்தான். அப்போது மரக்கிளையில் இருந்த இரண்டு புறாக்கள் அவன் கண்களில் பட்டன. உடனே உற்சாகத்துடன், ''அப்பா! கவலை வேண்டாம். இதோ நொடியில் சமைக்க மாமிசம் தயார். அதோ மேலே பாருங்கள். இரண்டு புறாக்கள். அவற்றைக் கொன்று தருகிறேன்....'' என்றான்.

அவன் பேச்சைக் கேட்ட புறாக்கள் திடுக்கிட்டன. எப்படியாவது உயிர் பிழைக்க விரும்பின. உடனே ஒரு புறா, ''வேண்டாம் மனிதர்களே, வேண்டாம்! நீங்கள் இந்த மரத்தடியில் வந்து தங்கியதால், எமது விருந்தாளி ஆகி விட்டீர்கள். உங்களுக்கு விருந்தளிக்க வேண்டியது எங்கள் கடமை. எங்களைக் கொல்லாமல் விட்டால், உணவுடன் சேர்த்துப் பொன்னும் மணியும் தருவோம்! என் பின்னால் வாருங்கள்...'' என்றவாறு, பறந்தது. மூத்தவன் பின் தொடர்ந்தான்.

சற்று தூரத்தில் ஒரு பெரிய குன்று. அதன் அடிவாரத்தில் ஒரு குகை. குகைவாயிலில் ஒரு பசுமாடு. அங்கு சென்ற புறா, அவனிடம் அக்குகையைத் திறக்குமாறு கூறியது. அவன் திறந்தான். புறா அவனை உள்ளே அழைத்துச் சென்றது.

என்ன ஆச்சரியம்! குகைக்குள் உணவு சமைப்பதற்குத் தேவையான சகல பண்டங்களும் ஏராளமாகக் கொட்டிக் கிடந்தன. அவற்றுடன் பொன்னும், மணிகளும் கூடத்தான்!

அவற்றைச் சுட்டிக் காட்டிய புறா, ''இவற்றை வேண்டிய மட்டும் அள்ளிக் கொள்...'' என்றது.

உடனே மூத்தவன், ''ஆகா...'' என்றவாறு அரிசி, பருப்பு, மாவு, நெய், எண்ணெய், மிளகாய், மசாலாப் பொருள்கள் முதலியவற்றைத் தேவையான அளவு அள்ளிக் கொண்டான். கூடவே, பொன்னையும் ரத்தினங்களையும் நிறையவே அள்ளிக் கொண்டான்.

வெளியில் வந்ததும், குகைவாயிலை அடைத்து விட்டு, பசுமாட்டிடம் பாலைக் கறந்து கொண்டு, மரத்தடிக்குத் திரும்பினான்.

அவன் தாயார் அவற்றைக் கொண்டு, சுவையான உணவுகளைத் தயாரித்தாள். அனைவரும், புறாக்களுடன் அமர்ந்து உண்டு மகிழ்ந்தார்கள். பின்னர் உண்ட களைப்பில் உறங்கிப் போனார்கள்.

அன்று இரவு, மேகங்கள் திரண்டு நல்ல மழை பெய்தது. உடனே நந்து தன் குடும்பத்தினருடன் கலந்து பேசினான். 'இனி நாம் ஏன் ஊரை விட்டுப் போக வேண்டும்? அதுதான் நல்ல மழை பெய்து விட்டதே! அத்துடன் ஏராளமான செல்வமும் கிடைத்து விட்டது. இனியும் வெளியூர் சென்று எதைச் சாதித்து விடப் போகிறோம்!' என்று முடிவு செய்து, மறுபடியும் ஊருக்குத் திரும்பி விட்டனர்.

நந்து பெரும் பணக்காரனாகத் திரும்பி வந்துள்ளதைக் கண்ட சந்து, "என்ன, நந்து...? உனக்கு இத்தனைச் செல்வம் எப்படிக் கிடைத்தது?" என்று வினவினான்.

நந்து நடந்தவை அனைத்தையும் மறைக்காமல் சொன்னான். அதைக் கேட்ட சந்துவுக்குத் தானும் பெரும் செல்வம் ஈட்ட வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. உடனே தன் குடும்பத்தினர் அனைவரையும் அழைத்துக் கொண்டு, அந்தக் காட்டுக்குக் கிளம்பி விட்டான்.

நீண்ட தூரம் நடந்த பிறகு, அனைவரும் நந்து குறிப்பிட்ட அரசமரத்தை அடைந்தனர். 'அப்பாடா!' என்ற சந்து மரத்தடியில் படுத்து விட்டான். அவன் தான் சோம்பேறி ஆயிற்றே!

பிறகு அவன் தன் மூத்த மகனை அழைத்து நீ போய் விறகு பொறுக் கிவா..." என்றான்.

அதற்கு மூத்தவன் - அவனும்தான் சோம்பேறி ஆயிற்றே! - "முடியாது... எனக்கு மிகவும் களைப்பாக இருக்கிறது.. நான் போக முடியாது.. நீயே போ..." என்றான்.

பிறகு சந்து, தன் இளைய மகனிடம், "நீயாவது போயேன்..." என்றான். அதற்கு அவன், "எனக்கு மட்டும் களைப்பு இருக்காதா?" என்று கோபமாகப் பேசினான்.

இந்தச் சண்டையைப் பார்த்த சந்துவின் மனைவி, "சண்டை ஏன்...? நீங்கள் யாரும் போக வேண்டாம்... நானே போகிறேன்..." என்றாள்.

ஆனால் சந்து, மகன்கள் மீது ஏற்பட்ட ஆத்திரத்தில், "அவர்களுக்கு என்ன அத்தனை சோம்பேறித்தனம்? நீயும் போகாதே.. நடப்பது எல்லாருக்கும் நடக்கட்டும்!" என்று அவளையும் போகாமல் தடுத்து விட்டான்.

அங்கு நடக்கும் அத்தனை வேடிக்கைகளையும் மரத்தில் அமர்ந்திருந்த ஜோடிப் புறாக்களால் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியவில்லை. எனவே, "ஏ மனிதர்களே! இங்கு உங்களிடம் அடுப்பு இல்லை. நெருப்பு இல்லை... சமைக்கப் பண்டம் ஏதும் இல்லை... ஏன் இப்படிச் சோம்பிக் கிடக்கிறீர்கள்?" என்று எள்ளி நகையாடின.


அதைக் கேட்டு ஆத்திரம் அடைந்த சந்துவின் மூத்த மகன், "ஏன்..? நீங்கள் இருக்கிறீர்களே? உங்களையே பிடித்துக் கொன்று தின்று விடுகிறோம்..." என்று எழ முயன்றான். ஆனால் எழச் சோம்பல்!

உடனே ஒரு புறா, "நீங்களாவது என்னைக் கொல்வதாவது...? சோம்பேறித்தனம் தான் உங்கள் கைகளை முடமாக்கிவிட்டதே... என்னைப் பிடிக்கப் பலம் ஏது உங்களிடம்?" என்றது.


அதற்குள் கருமேகம் திரண்டு, மழை பெய்யத் தொடங்கி விட்டது. சந்துவின் மனைவியால் எந்தச் சமையலையும் செய்ய முடியவில்லை. அனைவரும் கொலைப் பட்டினி. அத்துடன், கூடாரம் ஏதும் அமைத்துக் கொள்ளாததால் அனைவருக்கும் ஒதுங்கக் கூட இடம் இல்லை. மழையில் நனைந்து குளிரில் நடுங்கினார்கள். அன்று பெய்தது ஆலங்கட்டி மழை வேறு. பனிக்கட்டிகள் 'பொத்... பொத்' என்று விழுந்து அவர்களை மிகவும் காயப்படுத்தி விட்டன. அனைவரும் தவித்துப் போனார்கள்.

மறு நாள் பொழுது விடிந்தது. புறாக்கள் இரண்டும் கூட்டைவிட்டு வெளி வந்த போது, சந்துவின் குடும்பத்தினர் அனைவரும் காயங்களுடன் மெதுவாக ஊரை நோக்கி நடந்து செல்வதைக் கண்டன.

"உடம்பு இளைக்க வாக்கிங் போனியே, என்னாச்சு?"
"நடம்தான் தேஞ்சுது!"
— பொன். குமார், சேலம் - 6.



குறுக்கெழுத்துப் புதிர்



இடமிருந்து வலம்

1. சாகுந்தலத்தின் ஆசிரியர் (5)
3. அடுப்பு எரிக்க உதவும் (3)
9. இது கண்ணில் பட்டால் உறுத்தும் (2)
11. ஒற்றை ஆணியில் சுற்றும். உங்களுக்குப் பிடித்தமான விளையாட்டு (5)
13. கோயில், பள்ளிகளில் ஒலிக்கும் (2)
15. தானியம் பயிரிடப்படும் இடம் (3)

வலமிருந்து இடம்

6. சிங்கத்திற்கு அடுத்த விலங்கு (2)
8. சஹாரா என்பது (5)
10. களைப்பு நீங்க குடிக்கும் பானம். பாட்டிலில் கோலிக் குண்டு இருக்கும் (2)
17. சரித்திரப் புகழ் பெற்ற செல்லுலர் சிறை உள்ள இடம் (5)

மேலிருந்து கீழ்


1. ராமன் 14 வருடங்கள் சென்ற இடம் (4)
2. ரோடு போட இது அவசியம் (2)
4. 12 வருடத்திற்கு ஒருமுறை பூக்கும் பூ (4)
7. பாதைக்கு இன்னொரு பெயர் (2)
13. நமது தேசியப் பறவை (3)
14. இது கிடைத்தாலும் புதன் கிடைக்காது (4)

கீழிருந்து மேல்

5. தாவரங்கள் தண்ணீரை இதன் மூலம் உறிஞ்சும் (2)
6. குதிரைக்கு இன்னொரு பெயர் (3)
12. நுங்கு இம்மரத்தில் காய்க்கிறது (2)
15. இந் நாடுகளில் பெட்ரோல் அதிகமாகக் கிடைக்கிறது (4)
16. ராவணனுக்கு இது பத்து இருக்கும் (2)
17. பயத்திற்கு இன்னொரு பெயர் (4)

கோ. முத்துகுமார், ஒன்பதாம் வகுப்பு, அரசு மேல்நிலைப்பள்ளி, பெரியதச்சூர் (அஞ்சல்) திண்டிவனம்.

விடை: 60ஆம் பக்கம்



அக்காவைத் தேடி....

ஒரு காலத்தில் காட்டு எல்லையில் இரண்டு இணைபிரியாத சகோதரிகள் வாழ்ந்து வந்தார்கள். வன தேவதைகளே அவர்களைக் கண்டு பொறாமை கொள்ளும் அளவுக்கு அவர்கள் அழகும் அறிவும் மிக்கவர்களாக இருந்தார்கள்.

ஒருநாள் மந்திரவாதி ஒருவன் அக்காவை தூக்கிச் சென்றான். தங்கையும் அக்காவைப் பின்தொடர்ந்தாள். கோபம் கொண்ட மந்திரவாதி அந்த தங்கையை காகமாக மாறுமாறு சாபமிட்டான்.

மறுகணமே தங்கை காகமாக மாறினாள். மந்திரவாதி அவள் அக்காவைத் தூக்கிச் சென்று விட்டான். காகமாக மாறி இருக்கும் தங்கைக்கு அக்காவின் உருவம் தெரியும்.

அன்று முதல் காகமாக மாறிய அந்த தங்கை, "க்கா, அக்கா, அக்கா, க்கா" என்று தினந்தோறும் தன் அக்காவைத் தேடி அலைந்து கொண்டு இருக்கிறாள். அதனால்தான் இன்றும் காகம் 'க்கா, க்கா' என்று கரைந்து கொண்டிருக்கிறதாம்!

– எஸ். கல்யாணி, ஒன்பதாம் வகுப்பு, சேவாசதன் பள்ளி, சென்னை - 45.

முட்டாள்!

சின்னா காட்டு வழியே நடந்து சென்று கொண்டிருந்தான். அங்கே புலியைக் கூண்டில் அடைத்து வைத்திருந்தனர்.

சின்னாவைக் கண்ட புலி, "அருமை நண்பனே, மனிதர்களுக்கு நான் நண்பன். கூண்டைத் திறந்து விடு. உன் கைகளைக் குலுக்குகிறேன்" என்றது.

சின்னா வியந்தான். இதுவரை புலி பேசியதே இல்லையே என்று.

புலி அழைத்தது. "வா, நண்பனே. கஷ்டப்படுகிறவர்களுக்கு உதவுவதுதானே நண்பனுக்கு அழகு!"

"நீ என்னைக் கொன்று தின்று விடுவாயே என்றான் சின்னா. இல்லை! நான் மனிதனைச் சாப்பிடுவதே இல்லை."



நரியின் தந்திரம்!



புலி ஒன்று பசியுடன் சென்று கொண்டிருந்தது. திடீர் என்று ஒரு குள்ள நரியைப் பார்த்தது. அதனைப் பிடித்துச் சாப்பிட நினைத்தது.

"புலியே! உன் பற்களைக் காட்டாதே. உனக்கு ஏதாவது தொல்லை நேருவதற்கு முன்பே நீ இவ்விடத்தை விட்டு ஓடி விடு. உனக்கு நான் யார் என்று தெரியுமா? நான்தான் காட்டு விலங்குகளுக்கெல்லாம் அரசி" என்றது நரி.

"முட்டாள்தனமாகப் பேசாதே. நான்தான் காட்டு விலங்குகளின் அரசன் என்பதை அனைவரும் அறிவர்" என்று முழங்கியது புலி.

"நீ என்னை நம்பாவிட்டால் என்னோடு வா. விரைவில் யார் எவர் என்பதைப் புரிந்து கொள்வாய்" என்றது நரி.

இரண்டும் காட்டு வழியாக நடந்து சென்றன. நரியோடு வரும் புலியைக் கண்டு அஞ்சி இதர விலங்குகள் அனைத்தும் இங்கும் அங்குமாக ஓடி மறைந்து கொண்டன.

நரி சொல்வது ஒருவேளை உண்மையாக இருக்கலாம் என்று எண்ணிய புலி, புதருக்குள் ஓடி மறைந்து விட்டது.

– கே. ராஜேஸ்வரி,
ஏழாம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, கோவிலூர்.

முட்டாள் சின்னா, புலிக் கூண்டைத் திறந்தான். அப்பொழுது அந்த வழியாக ஒரு ஓநாய் வந்தது. "அந்தக் கூண்டின் கம்பி வழியாக உலகைப் பார்ப்பாயா?" என்று புலியிடம் கேட்டது.

அதென்ன கஷ்டம் என்று புலி கூண்டினுள் சென்றது.

சடக்கென்று ஓநாய் கூண்டை மூடித் தாழ் போட்டு விட்டது!

"முட்டாளே! என்ன காரியம் செய்தாய்! உன் உயிரைக் கணத்தில் இழக்கவிருந்தாயே!" என்று சின்னாவைக் கடிந்தது ஓநாய்.

"அடடா! நாம் முட்டாளாகி விட்டோமே! கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போய் விட்டதே!" என்று கூண்டுக்குள் பெருமூச்சு விட்டது புலி!

– ஆர் விசாலம், கலைமகள் மேல்நிலைப் பள்ளி, மேலப்பாதி.

முன்

ரேஷன் கடையிலிருந்து கோபத்துடன் வந்தான் கோபி.

"அம்மா! அம்மா! ரேஷன் வாங்கிட்டு வந்துட்டேன். இந்த கோதுமைக்காக என் ஒருநாள் வீவும் பாழ்'' என்றான் கோபமாக.

''பாழ்னு ஏன் நினைக்கிறே?



வீட்டுக்கு ஒரு நாளாவது உதவ முடிஞ்சுதேன்னு சந்தோஷப்படு'' என்றார் அம்மா.

"நானே ரேஷன்ல சண்டை போட்டுட்டு வந்திருக்கேன். என்னைப் போய் சந்தோஷப்படு, அது இதுன்னு எல்லாம் சொல்லாதே!" என்றான் கோபி.

''என்ன அண்ணா! எங்கிட்டதான் சண்டை போட்டுக்கிட்டு ரேஷனுக்குப் போனே! அங்கேயும் சண்டையா?'' என்றாள் சாந்தி.

மீண்டும் சாந்தியுடன் சண்டைக்குப் போன கோபியைத் தடுத்தார் அம்மா.

"நிறுத்து கோபி. அவ என்ன சொல்லிட்டான்னு இப்படிச் சண்டைக்குப் போறே? நீ என்னைக்குத்தான் கோபத்தை விட்டுட்டு நல்ல பையனா இருக்கப் போறியோ தெரியலே?" என்றார் அம்மா வருத்தத்துடன்.

கோபத்துடன் தன் அறைக்குச் சென்று கதவை ஓங்கிச் சாத்திக் கொண்டான் கோபி.

அம்மா கவலையுடன் தன் வேலையைக் கவனிக்கச் சென்றார்.

விளையாடி விட்டு வீட்டுக்குள் நுழைந்த கோபியை அம்மாதான் கூப்பிட்டார்.

"என்னம்மா, சீக்கிரம் சொல்லுங்க?"

"இன்னிக்கி பள்ளிக்கூடத்துல சண்டை போட்டியா?"

''நானா...? சண்டையா? அப்படியெல்லாம் ஒண்ணும் நடக்கலையே?'' என்றான் கோபி மழுப்பலாக.

''நீ விளையாடப் போனவுடன் ராமுவின் அப்பா வந்தார். நீ ராமுவை அடிச்சிட்டியாமே! ஏண்டா?" - அம்மா தான் கேட்டார்.

கோபி

"என் பிறந்த நாள் பரிசாக் கொடுத்த பேனாவையும், தமிழ் நோட்டையும் அவன் திருடிட்டான். அதனால அடிச்சேன். இதுல என்ன தப்பு?'' அலட்சியத்துடன் கேட்டான் கோபி.

"அவன் திருடினதை நீ பார்த்தியா? இல்லே, அவன்கிட்ட உன் பேனாவும், நோட்டும் இருந்ததா?" என்றார் அம்மா.

''இதை கண்ணால வேற பார்க்கணுமாக்கும்! ரெண்டு நாளைக்கு முன்னாடி பேனாவும், நோட்டும் என்னிடம் கேட்டான். நான் தர மாட்டேன்னு சொல்லிட்டேன். அப்புறம் நான் பேனாவும், நோட்டும் காணோம்ன்னு தேடிட்டு இருக்கும்போது கிண்டலாகச் சிரித்தான். இதைவிட வேற என்ன ஆதாரம் வேணும்?" என்றான் கோபி.

"அவனே எடுத்திருந்தாலும்கூட நீ அடிச்சது தப்பு! உங்க டீச்சர்கிட்ட சொல்ல வேண்டியதுதானே? ஏன் கை நீட்டுறே?"

அம்மா கேட்டுக் கொண்டிருக்கும்போதே சாந்தி ஓடி வந்தாள்.

"இங்க பாருங்க அம்மா! அண்ணன் நேத்துக் கழட்டிப் போட்ட பாண்ட் பைக்குள் இந்தப் பேனா இருந்துச்சு! கோபியோட தமிழ் நோட்டும்கூட என் அலமாரியில கிடந்துச்சு. இன்னிக்கு அடுக்கி வைக்கும்போதுதான் பார்த்தேன்'' என்றாள் சாந்தி.

"நீயே எங்கேயாவது தூக்கிப் போட்டுட்டு அடுத்தவங்க மேல கோபப்படு. பாவம் ராமு, செய்யாத தப்புக்கு தண்டனை கொடுத்திருக்கே" என்றார் அம்மா.

''அண்ணா, உன் பேரை முன் கோபின்னு வச்சுக்க, சரியா இருக்கும்!" - சாந்தி சொன்னவுடன் கோபத்தில் அடிக்கப் போனான்.

"சும்மா இரு சாந்தி! இங்க பாரு கோபி, பொங்கி வரும் வெள்ளத்தைக் கரை போட்டுத் தடுப்பது நல்லதா? இல்லே கரையை வெட்டி வெள்ளத்தை வெளியில் விடுவது நல்லதா?'' என்றார் அம்மா.

"என்னம்மா வினாடி வினாவா



ஜமதக்னி

நடத்துறீங்க?'' - கோபி

''நீ யோசிச்சு பதில் சொல்லேன் பார்க்கலாம்?''

''வெள்ளத்தைத் தடுக்குறதுதான் நல்லது'' என்றான் கோபி.

''அதே மாதிரிதான் உன்னோட கோபத்தையும் வெளியில காட்டாமல் அடக்கி வைக்கிறதுதான் நல்லது. புரியுதா?'' என்றார் அம்மா.

வழக்கம் போல் கோபத்துடன் தன் அறைக்குச் சென்று விட்டான் கோபி. அம்மா கவலையோடு உட்கார்ந்திருந்தாள். ஒரு மணி நேரம் கழித்துக் கதவைத் திறந்த கோபி அம்மாவிடம் வந்தான்.

''அம்மா, நீங்க சொன்னதையெல்லாம் தனிமையில் இருந்து யோசிச்சுப் பார்த்தேன். என் கோபத்தை அடக்குவது தான் நல்லதுன்னு உணர்ந்துக்கிட்டேன். நீங்களும், சாந்தியும் என்னை மன்னிச்சிடுங்க!'' என்றான்.

''அம்மா ஸ்வீட் செய்யுங்க, இனிமேல் புது கோபியைப் பார்க்கப் போறோம்'' என்றாள் சந்தோஷத்துடன் சாந்தி.

கோபி எங்கேயோ கிளம்பினான்.

''எங்கே கிளம்பிட்ட கோபி?''

''ராமுகிட்ட உண்மையைச் சொல்லி மன்னிப்பு கேட்கப் போறேன்''

அம்மாவும் சாந்தியும் பெருமிதத்துடன் பார்த்துக் கொண்டு நின்றனர்.



தங்க அங்கி

அவர் ஒரு பிரபல கவிஞர். நல்ல நண்பர்கள் அவருக்கு ஏராளம். நண்பர்களை உயிரினும் மேலாக மதிப்பார்; பழகுவார்.

ஒரு சமயம் பணக்கார பிரபு ஒருவர் கவிஞரிடம் நட்புக் கொண்டார். அவர் கவிஞருக்கு விலை உயர்ந்த அங்கி ஒன்றை நட்பின் சின்னமாகக் கொடுத்துச் சென்றார். அது தங்கம், ரத்தினக்கற்கள் பதித்து அழகான வேலைப்பாடுகள் செய்யப்பட்டு இருந்தது.

சிறிது காலம் சென்ற பின்பு கவிஞரின் நண்பர் ஏழையாகி விட்டார். அவருக்குக் கவிஞரைப் பார்க்க வேண்டுமென்று எண்ணம் தோன்றியது. சாதாரணமான பருத்தி அங்கியை அணிந்து கவிஞர் வீட்டுக்குப் போனார். இருவரும் அளவளாவிப் பேசிக் கொண்டிருந்தனர். கவிஞர், நண்பர் மிகுந்த ஏழை நிலையில் இருந்ததைப் புரிந்து கொண்டார்.

''நண்பரே! இது கோடைக்காலம். பருத்தி ஆடைகள்தான் ஏற்றது. தாங்கள் அணிந்திருக்கும் அங்கியைக் கொடுங்கள்'' என்று கேட்டார் கவிஞர். நண்பரும் உடனே அங்கியைக் கழற்றிக் கொடுத்து விட்டார்.

அதை வாங்கிக் கொண்டு உள்ளே சென்றார் கவிஞர். நண்பர் முன்பு கொடுத்த விலையுயர்ந்த தங்க அங்கியை எடுத்து வந்தார். அதை அவரிடம் கொடுத்து, அணிந்து கொள்ளச் சொல்லி வெளியே அனுப்பி வைத்தார். நண்பர் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

அப்புறம் அந்தக் கவிஞர் நட்பின் சிறப்பு, செல்வத்தின் நிலையாமை ஆகியவை பற்றி நிறையக் கவிதைகளை எழுதினார். அந்தக் கவிஞர் யார் என்று நினைக்கிறீர்கள்? வேறு யாருமல்ல, 'பிரபல உருது'க் கவிஞர் மீர்ஜா காலிப்தான்!


— ஏழ்வரைக்கடியான்.
'உருதுக் கவிஞர்கள்'
என்ற நூலிலிருந்து

ஹைடர் ஜக்கு


கதை : உதய்லால்
படம் : ஏ.டி. தியாகராஜன் தமிழில் : ராஜன்


ஹைடர் ஜக்கு சகலகலா வல்லவன். எதையும் செய்யும் சக்தி பெற்ற மாயச் சிறுவன். மாற்றுக் கிரகத்தைச் சேர்ந்தவன். மோசடிக்காரர்களைத் தண்டித்து நல்லவர்களுக்கு உதவுபவன்.






பரண்ல எலி உருட்டி இருக்கும்.
எலியா தான் இருக்கும்!
டீ.வி. நிகழ்ச்சி திடீரென நின்று விட்டது!
என்னாச்சு?
எல்லோர் வீட்டிலும் டீ.வி. நிகழ்ச்சிகள் மாயமாய் தடை பட்டது.
என்னாச்சு? ஏன் இப்படி?
டீ.வி. நிலையத்தில்
இது மின் தடங்கல் இல்லே; வேறு ஏதோ....
இன்சாட் 1-ல் ஏதோ பிரச்சனைன்னு கம்ப்யூட்டர் காண்பிக்குது!
நாச வேலையா இருக்குமோ!
TV
எரி பொருள் சக்தி இல்லாமல் ஏற்கனவே இரண்டு செயற்கைக் கோள்கள் செயலிழந்து விட்டன!



இது நாச வேலையேதான். அமெரிக்க விஞ்ஞானிகளைத் தொடர்பு கொள்ள முடியுமா?
தொலைபேசியில் முயற்சித்தனர்.
ஐ.எஸ்.டி. லையனே கிடைக்கலையே!
தொலைபேசிக்கும் இந்த பிரச்சனை வந்து விட்டது!
என்னாச்சு? என்ன பண்ண முடியும்!
அதே நேரம் அமெரிக்காவில் உள்ள நாசா விண்வெளி ஆய்வுக் கூடத்தில் -
சார், நம்ம ராடார் சிஸ்டத்துக்கும் கம்ப்யூட்டருக்கும் பைத்தியம் பிடித்த மாதிரி தெரியுது!
என்னாச்சு?
செயற்கைக் கோள் வேலை செய்யலை. ஏதோ பறக்கும் தட்டு வானத்தில் நுழைந்திருக்கு. ஆனால் அதை அடையாளம் காண முடியலை.
உண்மையில் என்ன நடந்திருக்கும்? ஐக்குவுக்கு மட்டும்தான் தெரியும். கண் மூடி தியானம் செய்து பார்த்தது.
இதோ நான் கண்டு பிடிக்கிறேன்.


ஜக்குவின் தியானத்தில் ஓர் பறக்கும் தட்டு தென்பட்டது.
பறக்கும் தட்டு பூமியை நெருங்கி வருகிறது.
வேற்று கிரக மனிதர்கள் இன்சாட் 1-ல் உள்ள எரிபொருள் சக்தியைத் திருடி தங்கள் பறக்கும் தட்டிற்குள் மாற்றுகிறார்கள்.
விஷயத்தை அறிந்து கொண்ட ஜக்கு ராமுவை ரகசியமாக அழைத்தது.
ராமு, ராமு.....
இருவரும் தனியறைக்குச் சென்றனர்.
விண்வெளியில் வேற்று கிரகத்தினர் புகுந்திருக்கிறார்கள். பயங்கரமான ஆயுதங்களை வைத்திருக்கிறார்கள். விரைவில் பூமியை அழிக்கத் திட்டம் போட்டிருக்கிறார்கள். மனிதர்களால் அவர்களை ஒன்றும் செய்ய இயலாது.
என்ன தான் பண்ண முடியும்!
இதுக்கு ஒரே வழிதான் இருக்கு. நான் போயிட்டு வரேன்.
நானும் வரேன்.
விண்வெளிக்குப் போகும்போது விண்வெளி உடையெல்லாம் உனக்குத் தேவைப்படும். நீ இரு. நான் வெற்றியோட திரும்பறேன்.



ஹைடர் ஜக்கு தன் சக்தியை யெல்லாம் திரட்டிக் கொண்டு சென்றது.
புயல் வேகத்தில் சென்று பறக்கும் தட்டை அடைந்தது ஜக்கு. திருட்டு நடப்பதைப் பார்த்தது.
வேற்று கிரக மனிதர்களுக்குத் தெரியாமல் அவர்கள் இருப பிடத்திற்குள் சென்றது ஜக்கு.
என்னது! இவங்க கிட்டேயே எரிபொருள சக்தி இருக்குதே. ஏன் இப்படி திருடறாங்க!
அவர்களுக்குத் தெரியாமல் எரிபொருள் சக்தியை மீண்டும் இன்சாட் - 1க்குள் அனுப்பியது ஜக்கு.
ஜக்கு மின்சாரமாக மாறி அவர்களைத் தாக்கியது.
ஜக்குவின் தாக்குதலை மனிதர்களின் தாக்குதல் என நினைத்துக் கொண்ட தலைவன் தனது மொழியில் கட்டளை இட்டான்.


அவர்கள் பேசிய விஷயம் ஜக்குவுக்கு புரிந்து விட்டது!
கண்ணால் பார்க்க முடியாத சக்தியை வச்சு மனிதர்கள் தாக்குவதை சமாளிக்க முடியலை. தேவையான எரி பொருள் கிடைத்துவிட்டது. நம்ம கிரகத்துக்கு திரும்பிப் போயிடலாம்.
வேற்று கிரக மனிதர்கள் திரும்பிச் சென்று விட்டனர்.
அடுத்த சில நிமிடங்களில் -
ஹையா! டீ.வில மறுபடியும் படம் தெரியுதே!
ராமுவை அழைத்தது ஜக்கு.
ஜக்கு வாழ்த்துகள். எவ்வளவு பெரிய காரியத்தை சாதிச்சுட்டே!
டீ.வி. நிலையத்தில் -
என்ன? மறுபடியும் எல்லா அலைவரிசைகளும் இயங்க ஆரம்பித்து விட்டதே! இப்பக் கூட கம்ப்யூட்டரால் ஒண்ணும் கண்டு பிடிக்க முடியவில்லையே!
ஒரு பிரச்சனை புதிராக ஆரம்பித்து புதிராக முடிந்து விட்டது.



என்ன ஒற்றுமை?

- போட்டி

இங்கு பன்னிரெண்டு படங்கள் உள்ளன. இந்தப் பன்னிரெண்டு படங்களுக்கும் ஓர் ஒற்றுமை உள்ளது. என்ன ஒற்றுமை என்பதை எழுதி, முகவரிக் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முடிவு தேதி 28.2.98. அயல் நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சரியான விடை எழுதினால் பரிசு குலுக்கல் முறையிலேயே முடிவு செய்யப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

சீல்கள் தத்தெடுக்குமா?



ஆற்றில் நீண்ட நேரமாக நீச்சல் அடித்துக் கொண்டிருந்தான் ஜீவா.

"டேய் ஜீவா, எவ்வளவு நேரமா குளிக்கிறே? சீக்கிரம் வா, வீட்டுக்குப் போகலாம்" என்றான் கரையிலிருந்த பிரகாஷ்.

"இருடா. இன்னும் அஞ்சு நிமிஷத்துலே வந்துடறேன்."

"அரைமணி நேரமாக இதையேதான் சொல்லிக்கிட்டிருக்கே! சீலாக பிறந்திருக்க வேண்டியவன், மனிதனா அதுவும் எனக்கு நண்பனா வந்து சேர்ந்துட்டே" என்று அலுத்துக் கொண்டான் பிரகாஷ்.

"சீல்னு என்னை ஏன் சொல்றே! அதுவும் தண்ணீரிலேயே ரொம்ப நேரம் நீந்திக்கிட்டே இருக்குமா?"

"நீ நீந்திக்கிட்டே இரு. நான் கரையில இருந்து சொல்லிக்கிட்டே இருக்கேன்" என்று சற்று கோபத்துடன் கூறினான் பிரகாஷ்.

"கோவிச்சுக்காதே பிரகாஷ். இதோ வந்துட்டேன்."

இருவரும் சைக்கிளை எடுத்துக் கொண்டு வீட்டிற்குப் புறப்பட்டனர். போகும் வழியில் "பிரகாஷ் நான் கேட்டதுக்கு பதிலே சொல்லலையே!"

"ஓ அதுவா. சீல் உன்னை மாதிரி தான் நீண்ட நேரம் தண்ணீரிலேயே பொழுதைக் கழிக்கும். அதனால்தான் சொன்னேன்!"

"அது கடலில் வாழக் கூடிய விலங்குதானே!"

"ஆமாம். ஆனால் நிலத்துலேயும் வாழும். இவை மிகவும் குளிரான துருவப் பிரதேச நீரில்கூட சந்தோஷமாக நீந்திச் செல்லும்."

"இதுக்கு குளிரவே குளிராதா?"

"உனக்கே இந்த ஆற்றுத் தண்ணீர் குளிரலை. சீல்களின் உடல் முழுவதும் கொழுப்புப் போன்ற பொருள் மூடியிருப்பதால் இவைகளுக்கு குளிரவே குளிராது. இவற்றின் தோலை ஆடையாகப் பயன்படுத்துகின்றனர்.

"இடீர்னு சீல்களைப் பற்றி கேட்ட கேள்விக்கெல்லாம் பதில் சொல்றியே, எப்படிடா?"

"நேற்று விலங்குகள் பற்றி அப்பா ஒரு புத்தகம் வாங்கிட்டு வந்தாங்க. அதுல படிச்சதுதான் இதெல்லாம்."

"அப்படியா! படிக்காமலேயே நான் சொல்றேன் பாரு. சில் குட்டிப் போட்டு பால் கொடுக்கும் விலங்கு தானே!"


"சரிதான் ஜீவா. இவை பாலூட்டி தான். அந்தச் சமயங்களில் கரைக்கு வந்துதான் குட்டிப் போடும். குட்டி, பிறந்த சில மணி நேரத்திலேயே நீந்த ஆரம்பித்து விடும். தாய் சீல் குட்டிக்கு நீந்தவும், வேட்டையாடவும் கற்றுக் கொடுக்கிறது. பிறந்த சில மாதங்கள் வரை கொழுப்புச் சத்து மிகுந்த தாய்ப்பாலையே உணவாகக் கொள்ளும் குட்டி."

"பெங்குவின் மாதிரி இதுவும் நீரிலும் நிலத்திலும் வாழ்வது எப்படி?"

"இவற்றின் கால் விரல்கள் மெல்லிய தோலால் இணைக்கப்பட்டிருக்கும். இத னால் நீரிலும் துடுப்பைப் போல் பயன் படுத்தி நீந்தும்; தரையிலும் நடக்கும். பின்னங் கால்கள் நீந்தவும், முன்னங் கால்கள் திசை திரும்பவும் பயன்படுது."

"பிரகாஷ் பசிக்குதுடா, சீக்கிரம் போகலாமா?"

எஸ். சுஜாதா



அறிவியல் உண்மைகள்

- சீல், கடல் நாய் என்றும் அழைக்கப்படுகிறது.
- இவை குட்டி போட்டுப் பால் கொடுக்கும்.
- நீரிலும் நிலத்திலும் வாழும்.
- குட்டி பிறந்த சிறிது நேரத்திலேயே நீரில் நீந்த ஆரம்பிக்கும்.
- கொழுப்பால் மூடிய தோல் இருப்பதால் நீண்ட நேரம் கடலில் இருந்தாலும் உடல் குளிரைத் தாக்குப் பிடிக்கும்.
- நீரில் நன்றாக நீந்தும்; நிலத்தில் மெதுவாக நகரும்.
- மீன், நத்தை, நண்டு முதலியவை முக்கிய உணவு.
- பின்னங்கால்கள் உறுதியானவை. இதனால் நீரைப் பிளந்து கொண்டு நீந்த முடிகிறது. திசை திரும்ப முன்னங்கால்கள் உதவுகின்றன.
- பொதுவாக சீல்கள் ஐரோப்பா, ஆசியா, வட அமெரிக்கக் கடல் பகுதிகளிலும், துருவப் பிர தேசங்களிலும் வாழ்கின்றன.
- பல வகைகள் உண்டு.
- இவை 1.7 மீ உயரம் வரை வளரக் கூடியவை. 113 கிலோ வரை எடை கொண்டவை.
- பெண் சீல்கள் 32 ஆண்டுகளும் ஆண் சீல்கள் 26 ஆண்டுகளும் உயிர் வாழ்கின்றன.
- மோப்ப சக்தி அதிகம். தாய் தன் குட்டி எங்கு சென்றாலும் முகர்ந்து பார்த்துக் கண்டுபிடித்து விடும்.
- பொதுவாக ஒரு குட்டியே ஈனும். இரண்டு குட்டிகள் பிறந்தாலும் தாய் ஒன்றை மட்டுமே வளர்க்கும். இரண்டாவது குட்டியை இன்னொரு சீல் தத்தெடுத்துக் கொள்ளும்.
- இவை நட்புடன் பழகும். பாறைகளில் கூட்ட மாக அமர்ந்து விளையாடும்.
- இறைச்சிக்காகவும், தோல் உடைக்காகவும் வேட்டையாடப்படுகின்றன.
- கோபம், பசி, மகிழ்ச்சி போன்ற எண்ணங் களை வாய், மூக்கின் மூலம் ஒலி எழுப்பித் தெரிவிக்கும்.

"நான் சொன்னபோது உனக்கு காதுல விழலை. இப்ப பசிக்குதுன்னு சொன்னால் என்ன செய்ய? வேகமா சைக்கிளை ஓட்ட வேண்டியதுதான்."

"பசின்னு சொன்னவுடன் தான் ஞாபகம் வருது. சீல் என்ன சாப்பிடும்?"

"மீன், நண்டு, நத்தை ஆகிய உயிரினங் களே இவற்றின் முக்கிய உணவு."

"இதுக்கு எதிரி ஏதாவது உண்டா?"

"ஏன் இல்லை! சுறா, திமிங்கலம், துருவப் பகுதிகளில் வாழும் வெண்கரடி இவை எல்லாம் எதிரி. முக்கியமான எதிரி மனிதன்தான்."

"என்னது, மனிதனா? இதை வேட்டை யாடி என்ன செய்யப் போறாங்க. பார்க்கவே சின்னத் தலையுடன், ஒரு மாதிரியான உடலமைப்போடும் இருக் குமே!"

"எஸ்கிமோ மக்கள் சீல் இறைச்சியை சாப்பிடுகின்றனர். இவற்றின் தோலை ஆடையாகப் பயன்படுத்துகின்றனர். நீ சொன்ன மாதிரி வித்தியாசமான உருவ மாக இருந்தாலும் மிகவும் அன்பானது தெரியுமா! குழந்தைகள் மகிழ்ச்சியாக விளையாடுவது போன்று சாதுவாக, ஜாலியாக விளையாடும்."

"இன்னொரு ஆச்சரியமான விஷயம் ஜீவா."

"சீக்கிரம் சொல்லுடா. வீடு வந்து விட்டது, சாப்பிடப் போகணும்."

"சீல் ஒரு நேரத்தில் ஒரு குட்டியைத் தான் ஈன்றெடுக்கும். அபூர்வமாக இரண்டு குட்டிகள் போடும் போது ஒரு குட்டியை மட்டுமே தாய் சீல் கவனித்துக் கொள்ளும். இன்னொன்றை ஏதாவது ஒரு சீல் தத்தெடுத்துக் கொள்ளும்."

"நீ கடைசியா சொன்ன விஷயம் சீல் மேல எனக்கு மரியாதையை உண்டாக்கி விட்டது. நான் சாயங்காலம் வந்து அந்தப் புத்தகத்தைப் படிக்கிறேன்."

"கண்டிப்பா வா. அந்தப் புத்தகத்துடன் காத்துக் கொண்டிருப்பேன்" என்ற பிரகாஷ் தன் வீட்டை நோக்கிச் சென் றான்.

சார் தபால்!

எங்கள் பள்ளியில் கோகுலம் சிறுவர் சங்கம் ஆரம்பித்திருக்கிறோம். பன்னிரெண்டு உறுப் பினர்கள் சேர்ந்துள்ளனர். எங்கள் சங்கத்தில் சுதந்தரப் பொன் விழாவையொட்டி ஒரு கண்காட்சிக்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். எங்கள் ஆசிரியர்களும் ஆர்வத்துடன் உதவுகிறார்கள்.

இரா. நிரஞ்சன், பதினோராம் வகுப்பு, கோகுலம் சிறுவர் சங்கம், சாந்தோம் உயர் நிலைப்பள்ளி, சென்னை.

எங்கள் தொட்டியம் கிராமத்தில் கோகுலம் சிறுவர் சங்கம் அமைத்திருக்கிறோம். இளம் பிள்ளைவாத நோய்த் தடுப்பு சிறப்பு சொட்டு மருந்து முகாமிற்கு உதவ இருக்கிறோம்.

ஜி. கார்த்திகேயன், கோகுலம் சிறுவர் சங்கம், தொட்டியம் கிராமம், விழுப்புரம்.

புதிய இரண்டு சிறுவர் சங்கங்களுக்கும் வாழ்த்துகள்! நிகழ்ச்சி முடிந்த பின் உங்கள் அனுபவங்களை மறக்காமல் எழுதி அனுப்புங்கள்.

- ஆர்.

கடல் தனை கடந்து எம் கரங்களில் தவழும் கோகுலத்தின் தொடர்கதை 'ஒன்பதாம் வீடு' விறுவிறுப்பை எட்டிவிட்டது. ஒவ்வொரு இதழையும் ஆவலுடன் படிக்கிறேன்.

ச. சுரேசன், கிளிநொச்சி, இலங்கை.

புத்தாண்டு வாழ்த்துகளுடன் நடு பக்க காலண்டர் மிகவும் உபயோகமாக இருக்கிறது. 'எப்படி? எதனால்? ஏன்?' என்ற விஞ்ஞான கேள்விகளுக்கு அளித்த பதில் பொது அறிவுக்கு விருந்தாக அமைந்தது.

எம். ராதிகா, பன்னிரெண்டாம் வகுப்பு, திருச்சி - 17.

'தவளைகள் சில தகவல்கள்' படித்தேன். மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளது. தவளையின் முதுகில் டிரான்ஸ்மிட்டரைப் பொருத்தி தவளையைக் காக்க ஆஸ்திரேலியா செய்த இச் செயல் நெஞ்சை நெகிழ வைத்தது.

காசிதாசன், தலைமை ஆசிரியர், காவணியாத்தூர், ஒசூர் அஞ்சல்.

'எங்கள் ஊரில் நடந்தது' பகுதியில் இடம் பெற்ற 'அடைக்கல சாமி', ஜோக்காக பல இதழ்களில் வெளி வந்து விட்டது. அதைப் போய் கோகுலத்துக்கு எழுதி அனுப்புவதா?

பா. மதன் மோகன், அய்யம்பாளையம்.

எளிய முறையில் கண்கவரும் வாழ்த்து அட்டைகள் செய்து, நட்பினை பலப்படுத்திக் கொள்ள எங்களுக்கு வழி வகுத்துத் தந்த கோகுலத்திற்கு நன்றி.


ப. ராமகிருஷ்ணன், காயக்காடு, புதுகை மாவட்டம்.


'கார்ல் லூயிஸ்' எப்படிப்பட்ட மனிதர்! எவ்வளவு சாதனைகளைப் புரிந்துள்ளார். அவருக்கு மரியாதை செய்யும் விதத்தில் எழுதிய கட்டுரை பாராட்டத்தக்கது.

ம. நிர்மலா, எட்டாம் வகுப்பு, அரசு உயர் நிலைப்பள்ளி, மயிலாடுதுறை.

எங்களைப் போன்ற பள்ளி மாணவர்கள் எழுதும் பிருந்தாவனக் கதையரங்கம் சூப்பர். இன்னும் பலர் பங்கு பெறும் வகையில் கதையரங்கம் பக்கத்தை அதிகரிக்கலாமே!

க. சாதிக், ஒன்பதாம் வகுப்பு, அரசு ஆண்கள் மேல் நிலைப்பள்ளி, சேலம்.





கோபமும், சாபமும்

திருக்கைலாயம்; அதி காலை நேரம்.

"புட்பதந்தா! எங்கே செல்கிறாய்?" குரல் கேட்டு திரும்பிப் பார்த்த புட்பதந்தன், மாலியவான் விரைந்து வருவதைக் கண்டு தாமதித்தான்.

அருகில் வந்ததும் "மாலியவான்! குடலையில் என்ன பூக்களா?" என்று கேட்டான் புட்பதந்தன்.

"ஆமாம்! வண்டு வந்து தேன் உறிஞ்சு முன்னே பூ மலரும் வரை விழித்திருந்து பறித்து வந்தேன்'' என்று மாலியவான் பெருமையோடு கூறினான்.

'இவனுக்கு தான்தான் பெரிய சிவ பக்தன் என்று கர்வம். இவன் அகம்பாவத்தை அடக்க வேண்டும்' என்று மனதுக்குள் கறுவிக் கொண்டான் புட்பதந்தன்.

''கன்று வாய் வைக்காத காராம் பசுவின் பாலால் நான் அபிஷேகம் செய்கிறேனாக்கும்! அதற்கு முன் இது தூசி" என்று கம்பீரமாகச் சொன்னான் புட்பதந்தன்.

இப்படியே சிவத் தொண்டில் தானே சிறந்தவர் என்று இருவரும் வாக்கு வாதம் செய்தனர்.

மாலியவான் வெகுண்டு "அகந்தை பிடித்தவனே! யானை தான் மதம் பிடித்துத் திரியும்! கட்டுக் கடங்காது! நீ யானையாகக் கடவது" என சபித்து விட்டான்.

புட்பதந்தன் அதைவிடக் கோபமாக, "சிலந்தி ஒருவனைக் கடித்து விட்டால் அந்தப் புண் விரைவில் ஆறாது.

தோழன் என்றும் பாராமல் சாபமிட்டு என் மனதைக் காயப்படுத்திய நீ சிலந்தியாகக் கடவது" எனப் பதில் சாபமிட்டான்.

இருவரும் தங்கள் புண்ணியத்தால் கணப்பதவி பெற்றும், கர்வமும், பொறாமையும் கொண்டு, ஒருவரை ஒருவர்

சாபமிட்டு யானையும், சிலந்தியுமாய் காவிரி நதிக்கரையிலே சந்திர தீர்த்தத்தின் அருகில் பிறந்தனர். அங்கே வெண் நாவல் மரத் தடியில் ஒரு சிவலிங்கம் இருந்ததைக் கண்டது யானை.

முன் செய்த புண்ணியத்தால் சந்திர தீர்த் தத்திலிருந்து தண்ணீர் கொண்டு வந்து அபிஷேகம் செய்தது. நல்ல தூய்மையான மலர்களால் சிவலிங்கத்தை வணங்கி வழிபட்டது.

சிலந்தியும் சிவலிங்கத்தைப் பார்த்தது. அது பார்த்த நேரம் இரவு. அப்போது இலை யுதிர் காலம். பெருங் காற்றடித்தவுடன் சருகுகள் உதிர்ந்து சிவலிங்கத்தின் மேல் ஒரே குப்பையாகி விட்டது. சிலந்தி உடனே வேக வேகமாக வலை பின்னி, பந்தலிட்டு முடியவும் விடிந்து விட்டது.

வழக்கம் போல் யானை அபிஷேகம் செய்யவும் சிலந்தி வலை சேதமடைந்து விட் டது. தும்பிக்கையால் யானை சருகுகளை ஒதுக்கி மலர் வழிபாடு செய்தது.

'அடாடா! எவ்வளவு கஷ்டப்பட்டு வலைப் பந்தலிட்டேன்! எவரோ அழித்து விட்டார்களே' என்று வேதனைப் பட்டுக் கொண்டே அன்றும் வலை பின்னியது.

மறுநாள் வந்த யானை 'சிவ பெருமானே! பொல்லாச் சிலந்தி, பூச்சி பிடிக்க, உங்கள் தலைக்கு மேலா வலை பின்ன வேண்டும்?' என்று வருந்தியபடி, அபிஷேகம் செய்தது.

இப்படிப் பல நாட்கள் நடந்தது. ஒரு நாள் சிலந்தி கோபமுற்று பந்தலை அழிக்கும் பாவியைக் கண்டுபிடிக்க ஒளிந்திருந்தது.

யானை அபிஷேகம் செய்யும்போது "நீதானா அந்த துஷ்டன்" என்று கறுவிய படி தும்பிக்கைக்குள் புகுந்து கடித்தது.

வேதனை தாங்காத யானை தும் பிக்கையை தரையில் பலமுறை அறைந் தது. மண்ணில் புரண்டு பயங்கர மாகப் பிளிறியது. சிலந்திக் கடியின் விஷத்தால் யானையும், தும்பிக் கையை அறைந்ததால் சிலந்தியும் மாண்டன.

முதலில் சபித்ததும் மாலியவான்தான். சிலந்தியான பிறகு தும்பிக்கைக்குள் புகுந்து முதலில் கோபமுற்று கடித்ததும் அவன்தான். அதனால் சிலந்திக்கு மற்றும் ஒரு பிறவி வாய்த்தது. யானை

ஆர். பொன்னம்மாள்


சிவகணமாகி விட்டது.

சுபதேவன் என்ற சோழ மன்னனது மகனாகப் பிறக்கும் பேறு பெற்றது சிலந்தி.

குழந்தையின் கண் சிவந்து இருந்ததால் 'செங்கணான்' எனப் பெயர் சூட்டினார் அரசர். செங்கணான் வேதம், புராணம், சாஸ்திரம் இவற்றோடு அரசர்க்குரிய கலைகளையும் கற்றுத் தேர்ந்தார். முற் பிறப்பின் உணர்வால் எழுபது சிவன் கோவில்களைக் கட்டினார்.

யானை பூசித்த இடம் திருவானைக் காவல் ஆயிற்று. அங்கே செங்கணான், யானை நுழைய முடியாதபடி வாயில் அமைத்தார். அதை இன்றும் காணலாம். பஞ்சபூதஸ்தலங்களில் ஒன்றாக இது சிறப்புப் பெற்றுள்ளது.





பரீட்சைக்கு நாங்கள் பயப்பட மாட்டோம்!

நிர்மலா, ராஜி, முத்து, ராமு நால்வரும் நண்பர்கள். ஒரே வகுப்பில் படிப்பவர்கள். உணவு இடைவேளையின் போது–

"முழு பரீட்சைக்கு இன்னும் இரண்டு மாதம் கூட முழுசா இல்லை. நீங்க எல்லாம் எப்படித் தயார் பண்ணிட்டு இருக்கிங்க?" என்றான் ராமு.

"நீங்க மூணு பேரும் நல்லா படிச்சிடுவீங்க. எனக்குதான் கஷ்டமாயிருக்கு" என்றாள் நிர்மலா.

"என்ன பிரச்னை?"

"என் குட்டித் தம்பியும், அத்தைப் பையனும் படிக்கவே விட மாட்டேங்கிறாங்க. எப்பவும் ஒரே சண்டை, கூச்சல் குழப்பம்தான். சமயத்துல என் புத்தகம், பேனாவை எடுத்து அட்டகாசம் பண்ணிடறாங்க."

"உனக்கு மட்டும்தான் பிரச்னையா? எனக்குக் கூடத்தான்" என்று கவலையுடன் கூறினான் முத்து.

"உனக்கு எப்படி பிரச்னை வரும்? உன் வீட்டில் இருப்பதோ ஒரே ஒரு அக்கா. அவங்களும் படிச்சு முடிச்சிட்டாங்களே" – ராஜி.

"அதான் பிரச்னை! என் அக்காவுக்கு ரேடியோவில் நிகழ்ச்சி கேட்காம இருக்க முடியாது! எப்பவும் ரேடியோவும் கையுமாக இருப்பாள். தூங்கும் நேரத்தைத் தவிர நிகழ்ச்சி இல்லாவிட்டாலும் 'கர்...புர்'

படிப்பது எப்படி?

- தூங்கி எழுந்தவுடன் புத்துணர்வு கிடைக்கும். அந்த அதிகாலை வேளையில் படித்தால் மனதில் நன்கு பதியும்.
- புரியாமல் மனப்பாடம் செய்தால் மறந்து போய் விடும். அதனால் பாடத்தை நன்கு புரிந்து கொண்டு படித்தால் எவ்வளவு காலம் ஆனாலும் மறக்காது.
- ஆங்கிலம், கணிதம் மற்றும் அறிவியல் சூத்திரங்கள், செய்யுள் பகுதிகளைப் படித்த பின் உடனே எழுதிப் பார்க்க வேண்டும். எழுதியவற்றை புத்தகத்துடன் ஒப்பிட்டுத் திருத்திக் கொள்ள வேண்டும்.

என்று ஏதாவது சத்தம் கேட்டே ஆகணும் அவனுக்கு."


"உங்க அம்மா, அப்பா எதுவும் சொல்ல மாட்டாங்களா?"

"அவங்க சொன்னால் கொஞ்சம் சத்தத்தை மட்டும் குறைச்சுக்குவான்."

"ராஜி உனக்கு எதுவும் கஷ்டம் இல்லையே!" என்று கேட்டான் ராமு.

"என் வீட்ல உங்களை மாதிரி பிரச்னை இல்லை. ஆனால் என் தம்பியோட படிக்கிற முறையிலதான் கொஞ்சம் சிக்கல்."

"என்ன சத்தம் போட்டு. ராகம் பாடிக்கிட்டே படிப்பானா?" என்றாள் நிர்மலா.



"எப்படி இவ்வளவு சரியாகச் சொல்றே? என்று வியந்தாள் ராஜி.

"இது நிறைய பேர் வீட்ல நடக்கிறது தான்" என்று கூறினாள் நிர்மலா.

"ராமுதான் நல்லா தயார் பண்ணிட்டு இருப்பான்."

"எனக்கு நானேதான் எதிரி. போன தடவை பாரு. எனக்குப் பிடிக்காத பாடத்தை ஒழுங்கா படிக்கணுமேன்னு நினைச்சு பிடிச்ச பாடத்துல கோட்டை விட்டுட்டேன்" என்று நினைவு கூர்ந்தான் ராமு.

இவர்களின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த ஆசிரியரைப் பார்த்ததும் நால்வரும் எழுந்து நின்றனர்.

"உட்காருங்க. உங்க பிரச்னையெல்லாம் பெரிய, தீர்க்க முடியாத பிரச்னை இல்லை. ஏறக்குறைய எல்லோர் வீட்டிலும் உள்ள பொதுவான பிரச்னைகள்தான். உங்க பெற்றோருடன் பேசித் தீர்வு காண முயற்சி செய்யுங்கள்" என்றார் ஆசிரியர்.

"நீங்க சொன்னது எங்களுக்கு மிகுந்த நம்பிக்கையை அளிக்கிறது" என்று கூறியபடி நால்வரும் தங்கள் வகுப்பிற்குச் சென்றனர்.

அட்டையில்: **மாஷால்**

வண்ணப்படம்: **ஸ்ரீஹரி**

● மனதுக்குள் படிப்பதோ, வாய் விட்டுப் படிப்பதோ, எதுவாக இருந்தாலும் உங்கள் பழக்கத்தையே பின்பற்றுங்கள்.




● கடினமான பகுதிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து படிக்க வேண்டும். ஆனால் அதில் மட்டும் கவனம் செலுத்தி சுலபமானவற்றில் கோட்டை விட்டு விட வேண்டாம்.

● தேர்வுக்கு முதல் வாரம் மட்டும் சிரமப்பட்டு படிக்காமல், அன்றைய பாடத்தை அன்றே படித்தால் தேர்வு காலத்தில் திருப்பிப் பார்த்தாலே போதும். இதனால் தேர்வு பயம் வராது.

● தேர்வுக்கு முதல் நாள் அதிக நேரம் கண் விழிக்க வேண்டாம். அது தேர்வு எழுதும்போது சோர்வடையச் செய்யும்.

● 'நம்மால் முடியும்' என்று நினைத்துக்கொண்டு தேர்வுக்குச் சென்றால் அந்த தன்னம்பிக்கையே பெரிய பலத்தையும் வெற்றியையும் தரும்.

மீன்கள்



• குளம், குட்டை, ஏரி, ஆறு, கடல்களில் கோடிக்கணக்கில் மீன்கள் வாழ்கின்றன. முதுகெலும்புள்ள மற்ற உயிரினங்களின் எண்ணிக்கையை விட மீன்களின் எண்ணிக்கை அதிகம்.

• மீன்கள் குளிர் ரத்தப் பிராணிகள். இவற்றின் உடல் சூடு, அவை வாழும் நீரின் வெப்ப நிலையைப் பொறுத்து மாறும்.

• ஏறக்குறைய எல்லா மீன்களும் துடுப்புகளைப் பெற்றுள்ளன. இவை நீந்துவதற்குப் பயன்படுகின்றன. அதே போல் செதிள்கள் மீன்களின் உடல் பாதுகாப்புக்கு உதவுகின்றன.

• மீன்களில் சுமார் 21,000 வகைகள் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. ஒவ்வொரு

• கடலின் எல்லா மட்டங்களிலும் மீன்கள் வாழ்கின்றன. உலகில் பல நாடுகளில் மீன் பிடித்தல் முக்கியத் தொழிலாக நடைபெற்று வருகிறது.

• புழு, பூச்சிகள், நீரில் வாழும் விலங்குகள், நீர்த்தாவரங்கள் போன்றவையே மீன்களின் உணவு. சில பெரிய மீன்கள் சிறிய மீன்களை உணவாக உட்கொள்கின்றன.

வகை மீன்களும் நிறத்திலும், வடிவத்திலும், பருமனிலும் வேறுபட்டு உள்ளன.

• பொதுவாக மீன்களுக்கு நுரையீரல் கிடையாது. பின் எப்படி சுவாசிக்கின்றன?

மீன்கள் வாய் மூலம் நீரைக் குடித்து கன்னத்திலுள்ள செவுள்கள் மூலம் வெளியேற்றுகின்றன. அப்போது நீரில் உள்ள ஆக்ஸிஜனை எடுத்துக் கொண்டு கார்பன்-டை-ஆக்ஸைடை வெளியிடுகின்றன.

• பெரும்பான்மையான மீன்களுக்கு இரண்டு கண்கள் உண்டு. கண்கள் பக்கத்திற்கு ஒன்றாக அமைந்திருக்கும். சில தட்டையான மீன்களுக்கு இரண்டு கண்களும் ஒரே பக்கத்தில் இருக்கும்.

• மீன்கள் கண்களைத் திறந்து கொண்டே தூங்குகின்றன. ஏனென்றால் இவைகளுக்கு இமைகள் கிடையாது. ஆழ்கடல் பகுதிகளில் வாழும் மீன்கள் தூங்குவதில்லை.



• மீன்களுக்கு புறச் செவிகள் கிடையாது. நீரில் உண்டாகும் அதிர்ச்சிகளைத் துல்லியமாக உணர்ந்து கொள்கின்றன.

• காட், சுறா போன்ற மீன்களில் எண்ணெய் எடுக்கிறார்கள். உணவாகவும், எலும்பு மற்றும் செதிள்கள் உரமாகவும் பயன்படுகின்றன.

ஒன்பதாம் வீடு!

வெ. நல்லதம்பி

6. நிஜா கேட்ட படம்



பிறவி மேதை என்று பிற்காலத்தில் புகழாரம் சூட்டப்படுபவர்களுக்கு, குழந்தையாக இருக்கும்போதே அத்துறையில் உள்ள ஈடுபாடும், திறமையும் வெளிப்பட்டிருப்பதை மேதைகளின் வாழ்க்கை வரலாற்றில் படித்திருக்கிறோம். ஓவியக் கலையில் அப்படிப்பட்ட ஒரு ஈடுபாடும், வயதுக்கு மீறிய திறமையும் சித்ராவுக்கு இருப்பதை அவள் தந்தை பசுபதி நன்கு அறிந்து வைத்திருந்தார். தன் மகளைப் பற்றி உள்ளூர அவருக்குப் பெருமையே. இருந்தாலும் தன் மகள் வருங்காலத்தில் ஒரு டாக்டராகவோ, பொறியாளராகவோ ஆகி, அதிக வருவாய் ஈட்டி, செல்வத்தில் புரண்டு அமோகமாக வாழ வேண்டும். அதை எந்த வகையிலும் அவளுக்குள் இருக்கும் ஓவியத் திறமையும், ஈடுபாடும் பாதித்து விடக் கூடாது என்பதை எண்ணியே பசுபதி கவனமாக இருந்தார். தான் அவளை ஊக்குவிக்காவிட்டாலும் மற்றவர்கள் அவளைப் பாராட்டும் போதெல்லாம், அதைப் பெரிதாக எண்ணி, அதிக அளவுக்கு சித்ரா அதில் ஆர்வம் கொண்டு விடக் கூடாது என்பதிலும் பசுபதி மிகக் கவனமாக இருந்தார். மற்றவர்கள் தன்னை நாகரீகம் அறியாத காட்டுமிராண்டி என்று எள்ளி நகையாடுவதைப் பற்றிக் கூடக் கவலைப்படவில்லை. படிப்பில் சித்ரா புலியாக இருந்துவிட்டால் அவர் எதைப் பற்றியும் கவலைப்பட மாட்டார். ஆனால் சித்ரா அப்படி இல்லை. நடுத்தரமான மாணவியாகவே இருந்தாள். அப்படிப் பட்டவளுடைய கவனம் ஓவியம், அது இது என்று கலைகளில் ஈடுபாடு கொள்ள ஆரம்பித்து விட்டால் சராசரி நிலைக்கு கீழேயும் போக ஆரம்பித்து விடுவாளோ என்றுதான் அவர் பயந்தார். கடுமையாகவும் இருந்தார்.

சித்ராவின் அம்மா மங்கைக்கு, அவளின் ஓவிய ஈடுபாட்டையும் திறமையையும் பற்றித் தனியான பெருமை. பாராட்டுவார். ஆனால், பசுபதி அப்படிப் பாராட்டக்கூடாது என்று கண்டித்து, காரணத்தையும் விளக்கிய பிறகு, மங்கை அப்



படிப் பாராட்டுவதை நிறுத்திக் கொண்டார். வீட்டில் சித்ரா இருக்கும் நேரங்களில் அவள் படிப்பைக் கவனிக்காமல் ஓவிய உலகில் புகுந்து விடாதபடி பார்த்துக் கொண்டார்!

ஒருவழியாகக் கோடை விடுமுறை முடிந்தது. பள்ளியும் திறந்தது.

பள்ளியின் பெயர்ப் பலகையை மாணவிகள் முதலில் கவனிக்கவில்லை. நர்மதா சுட்டிக் காட்டியபின்தான் எல்லோரும் கவனித்தார்கள். 'வித்யா நடுநிலைப் பள்ளி', இப்போது 'வித்யா மேனிலைப் பள்ளி' என்று மாறி இருந்தது.

பள்ளி மைதானத்தில் ஒரே ஆரவாரம். மாணவிகள் ஒருவருக்கொருவர் வாழ்த்துச் சொல்லிக் கொண்டார்கள். பெரும்பாலானோர் புதிய சீருடையில் வந்திருந்தனர்.

பள்ளி மணி ஒலித்தது. மாணவிகள் வகுப்பு வாரியாக பள்ளி அசெம்பிளிக்கு வரிசையாக நின்றார்கள். ஆசிரியைகள் தனியே வந்து நின்றார்கள்.

கோடை விடுமுறை முடிந்து, முதல் நாள் பள்ளி என்பதால் நிறையப் பெற்றோர்களும் வந்திருந்தார்கள். அவர்கள் தனியே நின்றார்கள்.

பள்ளி மைதானம் முழுவதும் மர நிழல். பல ஆண்டுகளுக்கு முன், கோமதி மேடம் வைத்து வளர்த்த மரங்கள். வானத்தை முழுமையாகப் பார்க்க முடியாத அளவுக்குப் பரந்து வளர்ந்து நிழல் தந்தன.

நீராரும் கடலுடுத்த முடிந்த பின் பள்ளிக்கே உரிய தனி இறைவணக்கப் பாடலையும் பாடி முடித்தார்கள்.

பள்ளித் தலைவி நான்சி, இறை வணக்க மேடையில் தோன்றினாள். மைக்கில் அனைவரையும் அமரச் சொன்னாள்.

கோமதி மேடத்தின் 'தொடக்க நான் உரை' தொடரப் போகிறது என்று அறிவித்தாள்.

“பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் ஒரு மகிழ்ச்சியான செய்தி! நாம் எதிர்பார்த்தபடியே நம் பள்ளி மேனிலைப் பள்ளியாகிவிட்டது” என்று தொடங்கினார் கோமதி மேடம். எல்லோரும் மகிழ்ச்சியுடன் பலமாகக் கைதட்டினார்கள்.


“நம் எட்டாம் வகுப்பிலிருந்து தேறிய மாணவிகள் ஒன்பதாம் வகுப்பு மாணவிகளாகி விட்டார்கள். அத்துடன், பத்தாம் வகுப்புக்கும் புதிதாக வெளியே இருந்து மாணவிகள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். முதலில் ஒன்பதாம் வகுப்பும், பிறகு பத்தாம் வகுப்பும் எழுந்து நில்லுங்கள்” என்று அவர் சொல்லவும் அந்தந்த வகுப்பு மாணவிகள் எழுந்து வணக்கம் கூறினர். அவர்களை பெரிய மேடம் மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்தினார். மற்ற வகுப்பு மாணவிகள் அவர்களுக்கு வரவேற்பு கொடுப்பது போல் கை தட்டினர்.

“பிள்ளைகளே! நம் பள்ளி வரலாற்றில் அடுத்த கட்டம் இன்று ஆரம்பம்! விடுமுறையில் செய்தித் தாள்களைப் படித்திருப்பீர்கள். உங்களைப் போன்ற பல பிள்ளைகள், பத்தாம் வகுப்புத் தேர்விலும், பனிரெண்டாம் வகுப்புத் தேர்விலும் மாநிலத்திலேயே முதலாவதாக வந்து சாதனை படைத்துள்ளார்கள். அவர்களின் பேட்டிகளைப் படித்தீர்களா? அது போன்ற சாதனையாளர்கள் நம் பள்ளியிலும் தோன்ற வேண்டும். இது நம் ஆசிரியைகளின் விருப்பம், பெற்

றோர்களின் விருப்பம், ஏன் என்னுடைய விருப்பமும் கூட" என்று சொல்லி நிறுத்தினார்.

அம்புஜம் டீச்சர் மைக் அருகே வந்தார். "நமது மாணவிகளின் விருப்பமும் அதுதான்'' என்று சொல்லிவிட்டு அகன்றார்.

கோமதி மேடம் தொடர்ந்தார்: "நம் வாழ்க்கைக்குப் படிப்பும் தேர்வும் முக்கியம்தான். ஆனால் அதைவிட முக்கியம் நல்ல குணம். பிறருக்கு உதவி செய்தல், விலங்குகளிடம் அன்பு காட்டுதல், சாதி வேற்றுமை பார்க்காதிருத்தல், மற்றவர்களுக்குத் தொல்லை தராமல் இருத்தல். இப்படி எவ்வளவோ நல்ல குணங்களை நீங்கள் பெற வேண்டும். அதைத்தான் நான் பெரிதாக விரும்புகிறேன்" என்று சொன்னவர், இப்போது 'சத்யா டீச்சர் ஒரு கதை சொல்வார்' என்றார்.



சத்யா டீச்சர் மைக் முன் வந்து நின்றார். "அருமை மாணவச் செல்வங்களே! இது வெறும் கதையல்ல. உண்மையாக நடந்த கதை. நடந்த இடம் இங்கிலாந்து. கதாநாயகன் பெயர் பிராட்லி. காலம் சுமார் முந்நூறு வருடங்களுக்கு முன். அவரது தந்தையாருக்கு மிகக் குறைந்த வருமானம். பிராட்லிக்குப் படிக்க வேண்டும் என்று ஆசை. உதவிக்கு வந்தவர் அப்பாவின் சகோதரர். பள்ளி, கல்லூரிப் படிப்பை முடித்த பிராட்லியை அவர்தான் வானவியல் துறையில் ஆர்வம் கொள்ள வைத்தார். அந்நாளில் புகழ் பெற்ற எட்மண்ட் ஹாலி என்பவரின் நட்பையும் பிராட்லிக்கு ஏற்படுத்தி வைத்தார்.

சூழ்நிலையால் பிராட்லி சமயப் பிரசாரகரானார். ஆனாலும் பின்னர் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் வானவியல் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். அவரது அயராத உழைப்பால்தான் நாம் இப்போது மிகத் துல்லியமான நேரத்தைக் கடைப்பிடிக்கிறோம். நம் கடிகாரமும், வானொலி, தொலைக்காட்சிக் கடிகாரங்களும், பல நாட்டு விமானங்களின் பயணங்களுக்கான கடிகாரங்களும், பல நாட்டின் அதிகார பூர்வக் கடிகாரங்களும், உலகில் ஒரு கடிகாரத்தைத்தான் தங்களுக்கு முன்னோடியாக வைத்துப் பின்பற்றுகின்றன. அதுதான் கிரினிச் கடிகாரம். அந்த கிரினிச் கிராமத்தில் உள்ள ராயல்

தொலைநோக்கி மையத்தைச் செம்மைப் படுத்திய பெருமைக்குரியவர்தாம் நம் கதாநாயகன் பிராட்லி. சமயப் பிரசாரகராகப் போயிருக்க வேண்டியவர் உலகம் போற்றும் சாதனையாளராக மாறினார். வெள்ளி, செவ்வாய், வியாழன் போன்ற கோள்களின் குறுக்கு விட்டத்தை அவர்தான் துல்லியமாக கஷ்டப்பட்டு கண்டறிந்தார். கடின உழைப்பின் சின்னமாக சாதனையாளர் பிராட்லி திகழ்வது போல், மாணவச் செல்வங்களே நீங்களும் உங்கள் ஆர்வத்தைச் சிதற விடாது கடினமாக உழைத்து ஏதாவது ஒரு பயனுள்ள துறையில் சாதனை நிகழ்த்தி உங்கள் பள்ளிக்குப் பெருமை சேர்க்க முயல வேண்டும். இதுவே உங்கள் இலட்சியமாக அமைய வேண்டும்'' என்று முடித்தார் சத்யா டீச்சர்.

''கிரிஜா, நீங்கள் ஏதாவது ஒரு விஞ்ஞானியைப் பற்றி நம் மாணவிகளுக்குச் சொல்லலாமே? இந்திய விஞ்ஞானியாக இருந்தால் இன்னும் பெருமை'' என்று கிரிஜா டீச்சரைப் பேச அழைத்தார் பெரிய மேடம்.

"ரொம்ப காலத்துக்கு முன்பு நடந்தது இது. பெங்களூரிலிருந்து மைசூருக்குப் போய்க் கொண்டிருந்த ரயிலில், தலைப்பாகை கட்டியிருந்த ஒருவரும் பயணம் செய்தார். அந்த பெட்டியிலிருந்தவர்கள் தங்கள் தங்கள் ஈடுபாட்டுக்கு ஏற்றபடி வேடிக்கை பார்த்துக் கொண்டும், பேசிக் கொண்டும் பொழுது போக்கியபடி இருந்தார்கள். வண்டி வேகமாகப் போய்க் கொண்டிருந்தது.

தலைப்பாகைக்காரர் தன் பாட்டுக்கு ஏதோ புத்தகம் ஒன்றை வைத்துப் படித்துக் கொண்டிருந்தார். திடீரென்று அவர், தான் படித்த புத்தகத்தைக் கீழே வைத்து விட்டு, தலைக்குமேலே தொங்கிய அபாய அறிவிப்புச் சங்கிலியைப் பிடித்து இழுத்தார். பக்கத்திலிருந்தவர்கள் பதைபதைத்துப் போனார்கள். "ஏன் சார் சங்கிலியை இழுத்தீர்கள்? வண்டி நின்று போகுமே?" என்றார்கள். "நிற்கட்டும். நிற்க வேண்டும் என்றுதானே இழுத்தேன்?'' என்றார் அவர்.

வண்டி நின்றது. ரயில் அதிகாரிகள் பெட்டி பெட்டியாக ஏறிச் சோதனை போட்டுக் கொண்டு வந்தார்கள். தலைப்பாகைக்காரரின் பெட்டியில் ஏறினார்கள். அவரது இருக்கைக்கு மேலே அபாயச் சங்கிலி இழுபட்டுத் தொங்கியதைக் கண்டுபிடித்தார்கள். "சங்கிலியை யார் இழுத்தது?" என்று கேட்டார்கள். "நான்தான் இழுத்தேன்'' என்றார் தலைப்பாகைக்காரர்.

"ஏன் இழுத்தீர்கள்?''

"ரயில் ஆபத்தை நோக்கி ஓடிக் கொண்டிருக்கிறது."


"என்ன ஆபத்து?"

''தண்டவாளங்கள் கழன்று கிடக்கின்றன. அதுதான் ஆபத்து."

"எங்கே கிடக்கின்றன?"

"சுமார் இரண்டு மைலிலிருந்து மூன்று மைல் தூரத்துக்கு அப்பால் அப்படிக் கழன்று கிடக்கின்றன?"

"என்ன கதை விடுகிறாயா? உன் மீது நடவடிக்கை எடுக்கப் போகிறோம்!" என்று ஒரு ரயில்வே அலுவலர்



''உங்க அப்பாவுக்கு கரும்பு வியாபாரமா?''

''எப்படிக் கண்டுபிடிச்சே?''

''புத்தகத்தை தொலைச்சிட்டுப் போனதுக்கு சக்கையா அடிச்சு சாறு பிழிஞ்சுட்டார்ன்னு சொல்றியே!''

— காழி. ஆர். சீதாராமன்

மிரட்டினார்.

தலைப்பாகைக்காரர் சிறிதும் பயப்பட வில்லை. "நான் சொன்னதில் தவறு இருந் தால், அப்படியே நடவடிக்கை எடுங்கள். முதலில் இப்போது தண்டவாளத்திற்கு ஏற்பட்டுள்ள ஆபத்தைக் கண்டுபிடித்து அதைச் சரிசெய்ய நடவடிக்கை எடுங்கள். அப்புறம் வந்து என்னைப் பாருங்கள்" என்றார் உறுதியாக.

நம்பிக்கையில்லாமல் அதிகாரிகள் வண்டி செல்லும் பாதையின் முன்னே நடந்தார்கள். குறிப்பிட்ட தூரம் சென்றதும் அவர்கள் கண்களை அவர்களாலேயே நம்ப முடியவில்லை. தலைப் பாகைக்காரர் சொன்னபடி தண்டவாளம் கழன்று கிடந்தது. உடனே அதைச் சரிசெய்யும் வேலை நடைபெற்றது.

அதிகாரிகள் திரும்பி வந்தார்கள். தலைப்பாகைக்காரரிடம் குழைந்தார்கள். "ஐயா, தாங்கள் சொன்னது முற்றிலும் உண்மை. ஆனால் அது தங்களுக்கு எப்படித் தெரியும்?"


அவர் சொன்னார் : "நான் பலமுறை இதே ரயில் பாதையில் பயணம் செய்துள் ளேன். ரயில் வண்டி ஓடும் சத்தத்தை உற்றுக் கவனிப்பது என் வழக்கம். அந்தச் சத்தத்தை வைத்து அது செல்லும் இடம் தூரம், இன்னும் மற்றத் தகவல்களை மனதில் ஆழப்பதித்து விட்டேன். இந்த ரயில் பாதை எனக்கு அத்துபடி! இப் போது வண்டி ஓடும் ஒலியில் ஏதோ மாற் றம் ஏற்பட்டுள்ளதை உணர்ந்தேன். அது ஏதோ விபத்து ஏற்படுத்தலாம் என்பதை யூகித்தறிந்தேன். அதான் சங்கிலியைப் பிடித்து இழுத்து வண்டியை நிறுத்தி னேன்."

ரயில்வே அதிகாரிகள் அந்த நபரின் ஆழ்ந்து கவனிக்கும் ஆற்றலைக் கண்டு மூக்கின் மேல் விரலை வைத்து அதிசயித் தார்கள். அவர் பின்னாளில் நாடு புகழும் விஞ்ஞானியாக மாறினார். அந்த தலைப்பாகைக்காரர் யார் தெரியுமா? அவர்தான் விஸ்வேஸ்வரய்யா" என்று சொல்லி முடித்தார்.

கோமதி மேடம் மைக்கைப் பிடித் தார். "இரண்டு நிகழ்ச்சிகளையும் கேட்டீர் கள் அல்லவா? சமயப் பிரசாரகராகப் போக வேண்டிய பிராட்லி விஞ்ஞானி யானார். விஞ்ஞானியாக மாறிய விஸ்வேஸ்வரைய்யா இளமையில் ஆழ்ந்த கவனமுடையவராக இருந்திருக்கிறார். கவனிப்பதை உன்னிப்பாக, ஆழமாக, ஒருமித்த மனதுடன் செய்திருக்கிறார். அவர்கள் இருவரின் புகழும், ஒன்று வான வியல் துறையிலும், மற்றது கட்டுமானத் துறையிலும் கொடிகட்டிப் பறக்கின்றன. எனவே நீங்களும் உலகில் உள்ள எத் தனையோ துறைகளில் புகழ்பெற்று விளங்கலாம். அதற்கு வேண்டியதெல்லாம் கடின உழைப்பு, கவனிப்பு. அதில் நாட்டம் செலுத்துங்கள். தேவையில்லாத வற்றில் கவனத்தைச் சிதற விட்டு, உழைப்பைப் புறக்கணிக்காதீர்கள். நல்ல பிள்ளைகளாக இருந்து நாட்டுக்கும் பயனுள்ள சேவையைச் செய்யுங்கள்" என்றார்.

எல்லோரும் கை தட்டினர்.

"எல்லோரும் மாநிலத்தில் முதல் மதிப் பெண் வாங்க முடியாது. ஆனால் எல்லோரும் நல்லவர்களாக நடக்க முடியும். படிப்பின் குறிக்கோளே நாம் நல்லவர்களாக விளங்க வேண்டும் என்பதுதானே? அதுவே என் ஆசை! இந்த ஆண்டில் நீங்கள் எல்லோரும் சிறப்பாக விளங்க, புகழ்பெற என் வாழ்த்துகள்" என்று முடித்தார் பெரிய மேடம். கையொலி எழுந்தது.



"சட்டை உரிச்சு வச்சிருக் கேன். யாராவது ஏழைப் பையனைக் கூட்டிக்கிட்டு வா. அவனுக்குக் கொடுப் போம்!"

– நெற்குப்பை இ. மனோகரன்.

கூடியிருந்த மாணவிகள் தத்தம் வகுப்புக்குச் செல்லத் தொடங்கினர். பெற்றோர்கள் கோமதி மேடத்தையும் ஆசிரியைகளையும் பார்த்துத் தங்கள் மரியாதையைத் தெரிவித்து விட்டுப் புறப்பட்டார்கள். கோமதி மேடம், கேட்டிலிருந்து வந்த வாட்ச்மேன் கொடுத்த தந்திச் செய்தியை வாங்கிப் படித்தார். அவர் முகம் மாறியது.

அம்புஜம் டீச்சர் தலைமை ஆசிரியை முகம் மாறியதைத் தூரத்தி லிருந்தவாறு கவனித்தார். ஆனால் என்ன செய்தி என்பதை அவரே சொல்லட்டும் என்று விட்டு விட்டார். அவர் நினைத்தது வீண் போகவில்லை. கோமதி மேடம் அம்புஜம் டீச்சரை அழைத்தார். ஏதோ பேசிய வண்ணம் இருவரும் கோமதி மேடத்தின் அறைக்குச் சென்றார்கள். உடனே அங்கிருந்து பியூன் முனுசாமி ஆறாம் வகுப்புக்கு ஓடினான். அங்கிருந்து ஆறாம் வகுப்பு ஆசிரியை தமிழரசி கோமதி மேடம் அறைக்குச் சென்றார்.

"உங்கள் வகுப்பு மாணவி நிஜா பள்ளிக்கு வந்திருக்காளா?" என்று கேட்டார் கோமதி மேடம்.

ஆசிரியை தமிழரசி "கவனிக்கவில்லை மேடம்! இன்னும் வருகைப் பதிவு எடுக்கவில்லை. இதோ நொடியில் முடித்து அவள் வந்திருக்கிறாளா, இல்லை என்றால் என்ன காரணம் என்று கேட்டு உங்களுக்கு உடனே சொல்கிறேன்" என்று திரும்ப முயன்றார்.

"தேவையில்லை டீச்சர்! இனி அவள் வகுப்புக்கு வர மாட்டாள்! உங்கள் வருகைப் பதிவிலும் இடம்பெற மாட்டாள்."

"ஏன் மேடம்!" கலவரத்தோடு கோமதி மேடத்தின் முகத்தைத் தமிழரசி டீச்சர் பார்த்தார். "வேறு பள்ளிக்குச் சென்று விட்டாளா?"

"ஆமாம்! நிம்மதியாக உறங்கும் பள்ளிக்குச் சென்று விட்டாள்" என்றவாறே நிஜாவின் பெற்றோர் அனுப்பிய தந்தியைத் தமிழரசியின் கையில் கொடுத்தார் கோமதி மேடம்.

தமிழரசி தந்தியைப் படித்து விட்டு அழுதே விட்டார். "அழாதீர்கள் டீச்சர்!" என்றார் அம்புஜம்.

"நிஜா எத்தனை கெட்டிக் காரி! வகுப்பில் எல்லாப் பாடங்களிலும் அவள்தான் முதல் ரேங்க். எப்போதும் 'துருதுரு'வென்றிருப்பாள். மற்ற பிள்ளைகளிடம் கலகலப்பாகப் பேசிச் சிரிப்பாள். அவளுக்கா இப்படி அகால முடிவு?"

"இறைவன் கொடுத்ததை இறைவனே எடுத்துக் கொண்டான். பாவம்! அவள் பெற்றோர்கள் எவ்வளவு துக்கத்துக்கு ஆளாகி இருப்பார்களோ! இருந்தும் நம் பள்ளிக்குக் காலா காலத்தில் தகவலைத் தந்தி மூலம் தெரிவித்து விட்டார்கள்" என்றார் அம்புஜம்.


"நீரில் மூழ்கும் அளவுக்குப் பாதுகாப்பு இல்லாமல் எப்படி நீச்சலில் இறங்கி இருப்பாள்! ஐயோ கடவுளே, நிஜா இல்லாத வகுப்பு இனி எனக்கு எப்படி இருக்குமோ?" என்று தமிழரசி மனம் நொந்தார்.

எப்போதும் மெழுகுவர்த்தி!


உலகப் புகழ்பெற்ற பிரெஞ்சு நாவலாசிரியர் பால்ஸாக் எழுதும்போது எப்போதும் பக்கத்தில் ஒரு மெழுகுவர்த்தி எரிந்து கொண்டேயிருக்க வேண்டும்.

மெழுகுவர்த்தி இரவில் மட்டும் அல்ல பகலிலும் கூடத்தான் எரிந்து கொண்டிருக்க வேண்டும். அப்போதுதான் அவருக்கு அருமையான ஐடியாக்கள் உதயமாகி எழுதத் தோன்றும்.

— 'மேதைகளின் கருத்துக் களஞ்சியம்' என்ற நூலிலிருந்து ருக்மணி குழந்தைவேல்.



"நம் பள்ளியிலேயே பலரது கண்களிலும் மின்னியவள் நிஜா தான். மின்னாமல் இடித்தது போல், முன் அறிவிப்பு ஏதுமின்றி திடும் என மறைந்து விட்டாள் நிஜா. சரி, இனி நாம் செய்ய வேண்டியதைக் கவனிப்போம்" என்றார் கோமதி மேடம்.



"வழக்கமாய் நாம் முதல் நாளில் முற்பகலோடு பள்ளியை மூடுவோம். இன்று நாம், அவள் நினைவாய் இரு நிமிடங்கள் அமைதியைக் கடைப்பிடிப்போம்! அதற்காக பள்ளி மைதானத்தில் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள். அதை இரண்டாவது பாட வேளைக்குப் பின்வரும் இடைவேளையில் வைத்து பள்ளியை அத்துடன் முடிக்கலாம்" என்றார் அம்புஜம் டீச்சர்.

'அதுவே சரி' என்று பட்டது கோமதி மேடத்திற்கும்.

எல்லா வகுப்புகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டது. மாணவிகள் புதிய வகுப்பில் தங்களுக்கான இடங்கள் பிடிப்பதில் மும்முரமாக இருந்தார்கள். வகுப்பு ஆசிரியை அவர்களுக்கான இடத்தை ஒதுக்குவதற்கு ஒரு வாரம் ஆகும். அதுவரையில் கிடைத்த இடத்திலேயே உட்கார வேண்டும் என்பது அவர்கள் ஆசை. அத்துடன் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு அருகிலேயே உட்கார்ந்துக் கொள்வதிலும் பலருக்கு ஆசை. இந்நிலையில் மீண்டும் பள்ளி மைதானத்திற்கு வரச் சொன்ன சுற்றறிக்கை மாணவிகளுக்கு வியப்பை அளித்தது.

குறித்த நேரத்தில் மைதானத்தில் மாணவிகள் கூடினார்கள். ஆசிரியைகளும் அங்கே வந்தார்கள். செய்தி அவர்கள் வட்டாரத்திற்கு முதலில் எட்டி விட்டது. அனைவரும் உண்மையாக வருந்தினர்.

அம்புஜம் டீச்சர் மூலமாக சித்ராவுக்கு முதலில் விஷயம் கிடைத்து விட்டது. சித்ரா அழுதே விட்டாள். "சித்ரா அக்கா நீங்க நல்லா ஓவியம் வரைவீங்களாமே? என்னை ஓவியம் வரையக் கூடாதா?" என்று எத்தனையோ முறை நிஜா அவளிடம் கேட்டிருக்கிறாள்.

"கண்டிப்பாக வரைஞ்சு தரேன். உன் பிறந்த நாள் எப்போ வருது சொல்லு? அன்னிக்கு பிறந்த நாள் பரிசாக உன்னைப் படம் வரைஞ்சு தரேன்" என்று கூறினாள் சித்ரா.

"ஜூன் பத்தாம் தேதி என் பிறந்த நாள் வருது. அன்றுதான் நமக்குப் பள்ளி திறக்கிறார்கள்."

"அப்போ கண்டிப்பா, பள்ளி திறக்கிற தினத்தன்று உன் படத்தை வரைந்து கொண்டு வந்து தரேன்" என்று உறுதியளித்தாள் சித்ரா.

கோடை விடுமுறையில் மிகவும் போராடி அப்பாவின் அனுமதியுடன் நிஜாவின் படத்தை வரைந்து முடித்து, அவளிடம் தர, பள்ளிக்கு எடுத்து வந்திருந்தாள். ஆனால் அதை வாங்கிக் கொள்ள நிஜா இல்லை!

வகுப்புக்குத் திரும்பிய சித்ரா, தன்

விடுகதைக்கு விடை என்ன?

— போட்டி முடிவு

இந்தப் போட்டியில் ஏராளமான வாசகர்கள் கலந்து கொண்டனர். பெரும்பாலானோர் சரியான விடைகளையே எழுதியிருக்கிறார்கள். எனவே பரிசுக்குரியோரை குலுக்கல் முறையிலேயே தேர்ந்தெடுக்க முடிந்தது.

ரூபாய் பத்து பரிசு பெறுவோர்

1. எஸ். பர்வதவர்த்தினி, செக்காலை, காரைக்குடி.
2. இரா. கண்ணன், இலுப்பூர் அஞ்சல், புதுகை மாவட்டம்.
3. சு. அபிதா, காவேரி நகர், சைதாப்பேட்டை.
4. தா. பீட்டர் ஜோஸ், ஊத்தங்கரை, தருமபுரி மாவட்டம்.
5. கே. மீனாட்சி, லால்குடி, திருச்சி.
6. செ. தக்கரை பீர் முகம்மது, பேட்டை, திருநெல்வேலி மாவட்டம்.
7. கே. இந்துமதி, தேவனூர் புதூர் அஞ்சல், உடுமலை தாலுகா.
8. டி. தணிகை வேல், மானம்பதி, காஞ்சிபுரம் மாவட்டம்.
9. ச. சூர்யா, முன்னங்குடி அஞ்சல், தஞ்சாவூர் மாவட்டம்.
10. மு. பாலமகேஸ்வரி, விருதுநகர் மாவட்டம்.
11. பி. மணிமுடி, வலிவலம், நாகை மாவட்டம்.
12. ஆர். இந்துபிரியா, வெங்கமேடு, வேலூர் மாவட்டம்.
13. ஆர். ரமேஷ் குமார், நாலு வேதபதி அஞ்சல், வேதாரண்யம் தாலுகா.
14. ஆர். விஷ்வநந்தினி, வரகூர், நாமக்கல் மாவட்டம்.
15. செ. சுபத்ரா, பா.நா. பாளையம், கோவை.

சரியான விடை : 1. [illegible], 2. முருங்கை, 3. ஆமணக்கு, 4. கடிகாரம், 5. புகை வண்டி, 6. கடிதம், 7.பட்டம், 8. வாழைமரம், 9. தேசியக் கொடி, 10. புறா.

பையில் சுருட்டி வைத்திருந்த நிஜாவின் படத்தை எடுத்து வந்து ஆறாவது வகுப்பு டீச்சர் தமிழரசியிடம் தந்தாள். பிரித்துப் பார்த்த தமிழரசி அழுது விட்டார்.

"அதிர்ஷ்டம் இல்லாத பெண். தன் படத்தை இத்தனை அழகாக நீ வரைந்திருப்பதைக் கண்டு மகிழக் கொடுத்து வைக்காமல் போய் விட்டாள். இரங்கல் மௌன அஞ்சலிக் கூட்டத்தில் இதை வைப்பது பொருத்தமாக இருக்கும். பெரிய மேடத்திடம் அனுமதி கேட்டு வருகிறேன்'' என்று ஓவியத்துடன் விரைந்தார் தமிழரசி.

"நிஜாவே எதிரே வந்து சிரிப்பது போல இருக்கே!" பிளாஸ்டிக் உறையில் போட்டு, டிராயிங் பின் வைச்சு பெரிய போர்டுல அடிச்சு, மாலை போட்டு வையுங்க'' என்றார் கோமதி மேடம்.

கோமதி மேடத்திடமிருந்து முறையான அறிவிப்பு வெளியானவுடன் பள்ளியே சோகத்தில் ஆழ்ந்தது. மௌனம் கடைப்பிடிக்கப்பட்டவுடன், தமிழரசி டீச்சர் நிஜாவைப் பற்றிப் புகழ்ந்து உரைத்து அஞ்சலி செலுத்தினார். எந்தச் சூழ்நிலையில் அங்கே வைக்கப்பட்டுள்ள நிஜாவின் படம் வரையப்பட்டது என்பதையும் விளக்கினார். படத்தைப் பார்த்தவர்கள் சித்ராவிடம் கைகொடுத்துப் பாராட்டத் தவறவில்லை. அத்துடன் பள்ளிக்கு விடுமுறையும் அறிவிக்கப்பட்டது.


ஆறாம் வகுப்பில் மாட்டப்பட்டிருந்த நிஜாவின் படத்தைப் பார்க்கவே மாணவிகள் இடைவேளையில் ஒரு வாரம் வரை திரண்டனர். ஆசிரியைகளும் பார்த்து அதிசயித்தார்கள்.

ஒரு வாரம் வரை நிஜாவின் மறைவும் சித்ராவின் படம் வரையும் ஓவியத் திறமையும் பள்ளியில் பேசப்பட்டு, மாணவிகள் மூலம், அந்தப் பள்ளியின் சுற்று வட்டாரத்திலும் அறியப்பட்டது. அது தனது எதிர்கால வாழ்வைப் பாதிக்கும்படி பெரும் விளைவை ஏற்படுத்தப் போகிறது என்பதை சித்ரா அறியவில்லை!

(தொடரும்)

பிருந்தாவனக்...

அழகு மயில்



அந்தி நேரம் வந்தது!
ஆகாயம் சிவந்து போனது!
நந்தவன மலர்கள் யாவும்
நவரத்தினமாய் சிரித்தது!
அழகு மயில் வந்தது!
ஆடிக் கொண்டு நின்றது!
பழகு நடை தந்தது!
பார்த்த மனம் நிறைந்தது!

— க. சுகிர்த்மூர்த்தி,
நான்காம் வகுப்பு 'அ' பிரிவு,
மாமல்லன் மெட்ரிக் பள்ளி, காஞ்சிபுரம்.

வேப்பமரம்



வேப்ப மரம் பாருங்கள்
விரைந்து அங்கே கூடுங்கள்!
கண்ணா மூச்சி ஆடுவோம்
காக்கா கதை சொல்லுவோம்
மணல் வீடு கட்டுவோம்
மனம் நிறைந்து மகிழுவோம்
சிறிதாய் இலைகள் இருந்தாலும்
இனிய காற்றைத் தந்திடும்
கசப்புச் சுவை இருந்தாலும்
காக்கும் அரும் மருந்தாகும்.

— ஆர். வானதி, பத்தாம் வகுப்பு,
ந.பெ.மே.நி. பள்ளி,
திருவண்ணாமலை.

பூனையும் எலியும்




எங்கள் வீட்டுத் தோட்டத்தில்
எலிகள் இரண்டு வாழ்ந்தன
அங்கு வந்த பூனையை
அச்சம் பொங்கப் பார்த்தன
நீண்ட காதைத் தூக்கியே
நிமிர்ந்து பார்த்தது பூனையே!
பயந்து நடுங்கி எலிகளும்
போக்குக் காட்டி ஓடின
எனக்கு அதிர்ஷ்டம் இல்லையே
என்றே சென்றது பூனையே!
தப்பிப் பிழைத்த மகிழ்ச்சியில்
தாவி எலிகள் குதித்தன!


— சீ.பெ. முத்துகுமாரன்,
சீரநாயக்கன் பாளையம்,
கோவை.

...கவியரங்கம்


பிங்கி, பாங்கி


கதை :
ஜெ. மகேந்திரன்,
ரெய்ச்சூர், கர்நாடக மாநிலம்.
படம் : சசி





என்பேரு பிங்கி. நீங்க அழகா தாவி குதிக்கிறீங்க.
நான் பாங்கி. உங்க வீட்ல யாரும் இல்லையா?
அம்மா, அப்பா, அண்ணா எல்லோரும் உணவு தேடிப் போயிருக்காங்க.
நீ போகலையா?
நான் பிறந்து சில நாட்கள்தான் ஆகுது. அதான் வீட்ல இருக்கேன்.
சரி. நான் கிளம்பறேன்.
நானும் உன்னுடன் சிறிது தூரம் வரட்டுமா?
தாராளமா வா!
பிங்கி, பாங்கியின் நட்பு தொடர்ந்தது. ஒரு நாள் -
ஏ, பிங்கி! தவளைக் கூட எங்கே போறே?
அம்மா இவங்க பெயர் பாங்கி. என் தோழி.
சரி, சரி வீட்டுக்கு வா போகலாம்.
நாளைக்கு வா பாங்கி.
வீட்டில் -
நம் இனத்தோடுதான் நீ சேரணும். வீணா வம்பெல்லாம் விலைக்கு வாங்காதே!
வம்பு வராது.


மறு நாள் -
பக்கத்து வீட்டுக் குழந்தைகளோட விளையாடு. பாங்கியோட சுத்தாதே!
சரிம்மா.
பிங்கி, நான் பாங்கி வந்திருக்கேன்.
நம்ம ரெண்டு பேரும் வெளியில போயிட்டு அம்மா வருவதற்குள் திரும்பிடலாம்.
போகும் வழியில் -
நீ தாவித் தாவி சீக்கிரம் போறே. என்னால முடியலை.
இந்தக் கயிறால் ரெண்டு பேர் காலையும் கட்டிடலாம்.
நான் தாவும்போது நீயும் சேர்ந்து குதிச்சிடு.
நல்ல யோசனை!
பிங்கியும் பாங்கியும் கயிறால் காலைக் கட்டியபடி சென்றன.
கிணற்றைக் கண்டதும் பாங்கி குதித்தது.
ஐயோ! எதுக்கு பாங்கி கிணத்துலே குதிக்கிறே?
நான் தரையிலும் தண்ணீரிலும் வாழ்பவள். நீயும் தானே!


ஐய்யய்யோ என்னால் தண்ணீரில் வாழ முடியாதே!
இப்ப என்ன செய்யறது?
அப்பா, அம்மா காப்பாத்துங்க!
அழ ஆரம்பித்தது பிங்கி.
அவ்வழியே வந்த பிங்கியின் பெற்றோர் -
பிங்கி சத்தம் கேட்கிறதே!
கிணற்றுக்குள் விழுந்திருப்பதை அறிந்து கொண்டன.
பிங்கி! இந்தக் கயிறைப் பிடிச்சு மேலே வா.
மேலே வந்ததும் பிங்கி, பாங்கியின் கால்களில் கட்டிய கயிறு அவிழ்க்கப்பட்டது.
வம்பு வராதுன்னு சொன்னியே. இதுக்குப் பேர் என்ன?
மன்னிச்சிடுங்க அப்பா!

CONTINUE THE STORY CONTEST FOR UNDER 16s



A SWEET SORROW

BROTHER UNDIA IN HOSPITAL

FEBRUARY '98

Rs.5/-

GOKULAM

The monthly magazine for children

வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில் ஆறுதல் பரிசு பெறும் எட்டாவது கதை



நியாயப்படுத்த...

முதலில் என்னைப் பற்றிக் கூற வேண்டாமா? தங்கத் தமிழகத்திலிருந்து எட்டிப் பார்க்கக்கூடிய தொலைவில் உள்ளதுதான் எங்கள் குட்டித் தீவான இலங்கை. நாலாபுறங்களிலும் அலைகளின் அமைதியில்லாத தாலாட்டு. நிம்மதி இழந்து தவிக்கும் என் தாயகத்தின் தலைநகரான கொழும்பின் இதயப்பகுதி 'வாழைத் தோட்டம்'. இந்த வாழைத் தோட்டமே எனது பிறப்பிடமும், வாழ்விடமும் ஆகும்.

இந்த வாழைத் தோப்பிலிருந்து சுமார் எட்டு கிலோ மீட்டர் தூரத்தில்தான் நான் கல்வி பயிலும் பாடசாலை இருக்கிறது. இலங்கைத் தமிழர்களைத் தலைநிமிர்ந்து, வாழ வழி காட்டிய இரட்டைத் தலைவர்களில் ஒருவரது பெயரைத் தாங்கி, கம்பீரமாகக் காட்சியளிக்கிறது எங்கள் வித்தியாலயம். ஆம் – அதுதான் இராமநாதன் இந்து மகளிர் பள்ளி...

இங்கே நான் எட்டாம் ஆண்டில் படித்துக் கொண்டிருக்கிறேன். எங்கள் நாட்டில் வகுப்பை வருடம் என அழைக்கப் பழகிக் கொண்டோம்.

எங்கள் வாழைத் தோட்டப் பள்ளி வாசலில் ஃபஜர் (வைகறை) தொழுகைக்கு சொல்லப்படும் பாங் கோசை, என்னை எப்போதும் அதிகாலையில் கண் விழிக்கச் செய்யும். 'வுழு' எனும் புறச் சுத்தியைச் செய்துவிட்டுத் தொழுவேன். தொடர்ந்து காலைக் கடன்களை முடிப்பேன். பாடசாலை சீருடை அணிந்து, பஸ் நிறுத்தத்திற்கு வரும்போது, காலை மணி ஏழாகிவிடும்.

கொழும்பு மாநகரம் விழித்துக் கொண்ட அந்தக் காலை வேளையில் வாகன நெரிசல் கொஞ்சம் அதிகமாகவே காணப்படும். அதனால் எப்போதும் பாடசாலைக்குப் போய்ச் சேர தாமதமாகி விடும்.

ஆம்! நான் என்றுமே பாடசாலைக்குத் தாமதமாகவே – ரெகுலர் லேட் கம்மராகவே செல்வது வழக்கம். இதனால் பள்ளிக்கூட முற்றத்தில் தினமும் நடைபெறும் 'அசம்பிளி'யில் பங்குகொள்ளவே முடியாமல் போய்விடும். இதில் எனக்கு வருத்தம்தான்! ஆனாலும் பஸ் நேரத்திற்கு வருவது என்னிடம் இல்லையே? என்ன செய்வது?

வாழைத் தோட்டத்திலிருந்து எங்களது வித்தியாலயத்தில் படிப்பிக்கும் ஒரு டீச்சர் – தேவகி மிஸ் – தினமும் நான் பயணிக்கும் பஸ்ஸிலேயே பள்ளிக்கு வருவார். அநேகமாக நானும் தேவகி மிஸ்ஸும் ஒரே பஸ்ஸில் வித்தியாலயம் செல்வதற்கு தோதாகவே, சூழ்நிலை அமையும். சில வேளைகளில் மிஸ்தான் என்னை விட லேட்டாக வருவார்கள்! காரணம், நேரம் தவறி வரும் பஸ்தான்!

நான் தாமதமாக வித்தியாலய கேட்டினுள் நுழைந்ததும், 'லேட் கமர்ஸ்' மாணவிகள் நிற்கும் இடத்தில்

பாத்திமா ரிஸ்மியா கனி

போய், நின்று கொள்வேன். ஒவ்வொரு நாளும் 'அசம்பிளி' முடிந்த சில நிமிடங்களில் பள்ளிக்கூட ஒழுக்கவியல் ஆசிரியை ஒரு பிரம்புடன், தாமதித்த மாணவியரை நோக்கி வருவார்.

"என்ன லேட்டா வந்தீங்களா?" என சிறு அதட்டலுடன் கேட்பார். ஒருசில பிள்ளைகள் 'தாங்கள் வரும் இடத்தைச் சொல்லி அதைக் காரணமாகக் காட்டி தப்பிக்க முயல்வர். அப்பொழுது அவர், "மத்த பிள்ளைகளெல்லாம் வத்தளை - ஜாஎலையில இருந்து வராங்க... உங்களுக்கென்ன இங்கதானே: நேரத்தோட வரலாகாதோ?" என்று கேட்டபடியே பிரம்பை உயர்த்துவார்.

செய்வதறியாது ஒவ்வொரு பிள்ளையாக வலது கையிலும், இடது கையிலுமாக இரண்டு அடிகளை மிகக் கஷ்டப்பட்டு வாங்கிக் கொண்டு, தத்தம் வகுப்புக்குச் செல்வர்.

என் முறை வரும். நானும் வலதிலோ, இடதிலோ வாங்கிக் கொண்டு என் வகுப்பறைக்குப் போவேன்.

அன்று திங்கட் கிழமை. அன்றைய 'அசம்பிளி'யில் தமிழ்த் தினப் போட்டியில் பரிசு பெற்ற எங்கள் பாடசாலை மாணவியருக்கு பள்ளித் தலைவர் கையால் பரிசு கொடுப்பதாக, சென்ற வெள்ளியே அறிவித்திருந்தார்கள். பரிசு பெறுபவர்களில் எனது தோழியும் ஒருத்தி. அதனால் அவள் பரிசு பெறுவதைப் பார்ப்பதற்காகவேனும் திங்கள் 'அசெம்பிளி'க்காவது நேரத்தோடு செல்ல வேண்டும் என்று எண்ணினேன். ஆனால், அன்றும் பஸ் ஒத்துழைக்கவில்லை. பாடசாலையை சென்றடைய, ஏழு நாற்பது ஆகிவிட்டது! என்ன செய்வேன்?

இதோ... வித்தியாலய 'கேட்'டினுள் நுழைகிறேன். எனக்கு முன்னே தாமதமாக வந்தவர்கள் சுமார் இருபது பேராவது இருப்பர். நானும் இருபத்தோராவது லேட் கம்மராக அந்தக் கூட்டத்தில் கலந்தேன்.

எங்கள் முன்னே - கோவில் கொண்டிருந்த சித்தி விநாயகர் அன்றும் எங்களையே பார்வை மாறாது, உதவ முடியாது பார்த்துக் கொண்டிருந்தார். அவரால் வேறு என்ன செய்ய முடியும்? என்னைத் தொடர்ந்து மேலும் தாமதமாக வந்து கொண்டிருந்த மாணவியரையும் கூட அவர் அதே உதவ இயலாத பார்வையுடன்தான் சித்தி விநாயகப் பெருமான் பார்த்துக் கொண்டிருந்தார்.

அசம்பிளி மாணவியர், பாடசாலை கீதத்தையும், தேசிய கீதத்தையும் பாடி முடித்தனர். பள்ளித் தலைவர் மைக் அருகே வந்தார். அவருக்குப் பின்னால் முன்னமேயே வந்து விட்ட ஆசிரியைமார்கள் நின்றனர். அவர் என்ன பேசப் போகிறார் என்பதைக் கேட்க மாணவிகளும், ஆசிரியைமார்களும் ஆவலுடன் நின்றனர்.

"பிள்ளைகளே...." என ஆரம்பித்து, கல்வித் திணைக் களத்தின் சுற்றறிக்கை ஒன்றைப் பற்றிச் சில வார்த்தைகள் பேசிவிட்டு, வட்டார பாடசாலைகளிடையே கடந்த வாரம் நடைபெற்ற தமிழ்த் தினப் போட்டிகள் பற்றி விளக்கினார் தலைவர். அப்போட்டிகளில் வெற்றி பெற்ற, தன் பாடசாலை மாணவியரைப் பாராட்டிப் பேசினார். அது மட்டுமல்லாமல், போட்டிகளில் தோல்வியுற்ற மாணவியரை உற்சாகப் படுத்தும் நோக்கில் 'தோல்வியே வெற்றியின் அறிகுறி' என்றும் கூறினார்.

சென்ற வாரம் நடந்து



முடிந்த வட்டாரத் தமிழ்த் தினப் போட்டிகளில் அளிக்கப்பட்ட பரிசு களோடு, உரிய மாணவி களை வரச் சொல்லி கர வொலி எழுப்பிப் பாராட் டினார். நாங்களும் கை தட்டினோம்.

இறுதியில் –

"நம் பாடசாலை தலை நகரிலுள்ள முன்னணிப் பாடசாலைகளில் ஒன் றாகத் திகழ்வதற்கு, கல்வித் தரமும், டிஸிப்ளினுமே – அதாவது ஒழுக்கமுமே முக்கிய காரணமாகும். பாடசாலை விதிகளை ஒவ்வொரு மாணவியும் கட்டாயம் பின்பற்ற வேண் டும். வகுப்பிற்கு ஒரு நாளைக்கு வராவிட்டா லும், பெற்றோரிடமிருந்து அவசியம் கடிதம் கொண்டு வர வேண்டும். என்ன பாடு பட்டேனும், காலை ஏழரை மணிக்கு முன்பே எல்லா மாணவிகளும் பள்ளிக்கு வந்து விட வேண்டும். தாமதமாக வரும் பிள்ளைகள் இனிக் கடுமையாகத் தண்டிக்கப்படுவர்" எனப் பேசிக் கொண்டே போனார் தலைவர்.

ஒலிபெருக்கி தலைவரின் பேச்சை அழகாக ஒலிபரப்ப, சித்தி விநாயகருக்கு முன்னே சிலையாக நின்றபடி நாங்கள் கேட்டுக் கொண்டிருந்தோம்.


ஒருவழியாக அசெம்பிளி முடிவடைந்தது. மாணவிகள் வரிசை வரிசையாகத் தத்தம் வகுப்புக்குச் செல்லலாயினர். தலைவர் உட்பட, ஆசிரியைகளும் கலைந்து போய் விட்டனர்.

வித்தியாலய முற்றம் வெறுமையாகக் கிடந்தது. நாங்கள் மட்டும் தண்டனைக்காகக் காத்திருந்தோம்.

ஒழுக்கவியல் ஆசிரியை பிரம்பும் கையுமாக எங்களை நோக்கி வரலானார்.

எங்களை நெருங்கியதும், "என்ன இன்னிக்கும் லேட்டா வந்தீங்களா?" என்ற வழமையான கேள்விப் பல்லவியைப் பாடி சாத்தத் தொடங்கினார்.

என் முறை வந்தது. வலது கையை நீட்டினேன்.



இரண்டு கிடைத்தது. அடிபட்ட வலது உள்ளங்கையை இடது கை பெருவிரலால் அழுத்திக் கொண்டேன். தினமும் இப்படி லேட்டாக வந்து உதை வாங்குகிறாயே... உனக்கு வெட்கமாக இல்லை?" என்று கேட்டார் ஒழுக்கவியல் ஆசிரியை. பள்ளிக்கு அருகிலேயே அவர் வீடு. பஸ்ஸில் வரும் துன்பம் அவருக்கு எப்படித் தெரியும்? சொன்னால் புரியக் கூடப் புரியாது.

இரண்டு நாட்களுக்குப் பிறகு, காலையில் சீக்கிரமே பஸ் நிறுத்தத்திற்கு வந்து விட்டேன். அப்பாவுக்குத் தெரிந்த நண்பர் மோட்டார் சைக்கிளில் வந்தார். "உங்க பாடசாலை வழியாத்தான் போறேன். வருகிறாயா?" என்று கேட்டார்.

அளவில்லாத மகிழ்ச்சி. இன்றைக்காவது சரியான நேரத்திற்குப் போய் விடலாம் என்று ஏறப் போனேன். பஸ்ஸுக்காகக் காத் திருந்த கும்பலில் ஒழுக்கவியல் டீச்சர்! தெரியாத்தனமாக எப்படியோ வந்து சிக்கிக் கொண்டு விட்டார். கண்டிப்பாக லேட்தான்.

"அங்கிள், என்னை விட சரியான நேரத் திற்கு எங்க ஒழுக்கவியல் டீச்சர் போவதுதான் ரொம்ப அவசியம். எனக்குப் பதில் அவரைக் கூட்டிக் கொண்டு போனால் மிகவும் மகிழ்ச்சியடைவேன்" என்றேன்.

"வரச் சொல்லும்மா" என்றார் அவர்.

ஒழுக்கவியல் டீச்சர் தயக்கத்துடன் வந்தார்.

"நீ போனால் நேரத்துடன் போகலாமே?"


"நான் ரெகுலர் லேட் கம்மர் டீச்சர். உங்களுக்குத்தான் தெரியுமே? தினமும் அடி வாங்குவேனே! பஸ் நிலைமை இப்படித்தான். என் நிலைமை வேறு, உங்க நிலைமை வேறு. நீங்களே நேரத்துக்குப் போகலைன்னா சரியா இருக்காது. உங்களை நியாயப்படுத்திக் கொள்ளவாவது நீங்கள் கண்டிப்பாக நேரத்திற்குப் போக வேண்டியது அவசியம்."

டீச்சரின் கண்கள் கலங்கின. கையை அசைத்து விடை பெற்றார். மோட்டார் சைக்கிள் நகர்ந்தது.

குறுக்கெழுத்துப் புதிர் - விடை

1 கா	ளி	2 தா	ச	ர்	■	3 வி	ற	4 கு
ன	■	ர்	■	5 வே	■	ர	■	றி
க	■	■	■	■	லி	6 பு	■	ஞ்
ம்	ன	7 வ	லை	8 பா	■	■	9 தூ	சி
■	■	ழி	■	■	■	ணை	■	■
டா	10 சோ	■	■	11 ப	ம்	12 ப	ர	ம்
கு	■	13 ம	ணி	■	■	■	■	ச
ளை	■	யி	■	14 பொ	■	லை	■	ச்
15 வ	ய	ல்	■	ன்	மா	16 த	ந்	17 அ





உங்கள் நூலகம்

ஒரு வரிச் செய்திகள் இரண்டாயிரம், பாகம் – 2, பக். 96 ரூ.18/- மணிமேகலை பிரசுரம், 4. தணிகாசலம் சாலை, சென்னை–17.

இலக்கியம், புராணம், அறிவியல் என்று பல துறைகளிலுமாக 2000 தகவல்கள் தரப்பட்டுள்ளன. அத்தனையும் சுவையானவை என்பதுடன் வியக்கவும் வைக்கக் கூடியவை. வினாடிவினா நடத்துவோருக்கும், புதிய தகவல்களுக்காக ஏங்குவோருக்கும் பயன்படும். எல்லோருமே படித்துப் பயன் பெறலாம்.

படம் பார்த்து விடை சொல் – பாகம் –2, அப்பாஸ் மந்திரி, பக்.120, ரூ.23/- மணிமேகலை பிரசுரம், 4. தணிகாசலம் சாலை, சென்னை – 17.

ஆங்கிலத்தில் குழந்தைகளுக்கு மூளைக்கு வேலை தந்து சிந்தித்து விடை காண வைக்கும் action puzzle புத்தகங்கள் நிறைய இருக்கின்றன. இவைகளில் படங்களும், குறிப்புச் சொற்களும்தான் முக்கியம். இவைகளைத் தமிழில் தயாரிக்க செலவும் பொறுமையும் அதிகம் தேவை. இதை வழங்க திறமையான எழுத்தாளர்களும் தேவை. எழுத்தாளர், ஓவியர், பதிப்பாளர் மூவரும் ஈடுபாட்டுடன் கூடிச் செய்ய வேண்டிய பணி இது. எனவே பெரும்பாலான பதிப்பாளர்கள் இதில் ஈடுபடத் தயங்குகிறார்கள். இந்தக் குறையைப் போக்க முன் வந்துள்ளது இப்புத்தகம். ஏற்கனவே இதன் முதல் பகுதி வெளி வந்துள்ளது. இது இரண்டாம் பகுதி. சிந்திக்க வைக்கும் சுவையான புத்தகம். பரிசளிக்க ஏற்ற புத்தகம்.

வால்ட் டிஸ்னியின் கார்டூன் படங்கள், மு. சேரன், பக்.96, ரூ.18/- மணிமேகலை பிரசுரம், 4. தணிகாசலம் சாலை, சென்னை 17.

பெருமை மிக்க சாதனையாளரான வால்ட் டிஸ்னியின் புகழ் மிக்க படைப்புகளின் விவரங்களை சுருக்கமாக தந்திருக்கிறார்கள். மிக்கி தொடர்கள் எல்லாம் இடம் பெற்றுள்ளன. குழந்தைகளின் மனதைக் கவர்ந்த சின்டரெல்லா, ஸ்லீப்பிங் பியூட்டி, பினாச்சியோ போன்றவை எப்படி எந்தக் கோணத்தில் படமாக்கப்பட்டன என்ற செய்திகள் சுவையாகவும் வியப்பாகவும் உள்ளன. புதுமையான தொகுப்பு. வால்ட் டிஸ்னியின் வாழ்க்கை வரலாறும் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது.

இந்தியாவில் பேசப்படும் 325 மொழிகளும் விவரங்களும், சேனா சரவணன், பக். 132/- ரூ.20/- மணி மேகலை பிரசுரம், 4. தணிகாசலம் சாலை, சென்னை – 17.

இந்தியாவில் பேசப்படும் மொழிகள் 325 என்றால் எத்தனை வியப்பாக இருக்கிறது! முண்டாரி, ஹோ, சவரா, கோங்கு போன்ற பல மொழிகளுக்கு இன்னமும் எழுத்து வடிவமே இல்லை என்பது எத்தனை திகைப்பாக இருக்கிறது! இப்படி எத்தனையோ திகைக்க வைக்கும் தகவல்களுடன், 325 மொழிகளைப் பற்றிய தகவல்கள் இந்த நூலில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. அவசியம் படித்து அறிய வேண்டிய நூல்.

அறிவை வளர்க்கும் அற்புதக் கதைகள். எஸ்.எஸ். வாசன், பக். 108, ரூ.20/- மணிமேகலை பிரசுரம், 4. தணிகாசலம் சாலை, சென்னை–17.

உலக நீதிகளை உணர வைக்கும் கதைகளின் தொகுப்பு. புராணம், அறிவியல், அறிஞர் வாழ்க்கை என்று எல்லாவற்றிலிருந்தும் கதைகளாகத் தரப்பட்டுள்ளன. பயன் தரும் முயற்சி.


— ரே



எங்கள் ஊரில் நடந்தது!

இரண்டு கடுகு!

பக்கத்து வீட்டு மாமி அம்மாவிடம் வந்து "ரெண்டு கடுகு கொடுங்க, தாளிக்கணும்" என்றார். அம்மா என்னை கடுகு எடுத்து வரச் சொன்னார். எனக்கோ ஒரே யோசனையாக இருந்தது. இரண்டு கடுகுகளை வைத்து எப்படித் தாளிக்க முடியும் என்று நினைத்துக் கொண்டே கடுகை எடுத்து வந்து கொடுத்தேன். கடுகை வாங்கிய மாமியின் முகம் மாறியது. "என்னது ரெண்டே ரெண்டு கடுகை தர்றியே!" என்றார் வியப்புடன். "நீங்க



தானே சொன்னீங்க மாமி" என்றேன் நான். "நான் ஒரு பேச்சுக்கு சொன்னேன். போய் 40, 50 கடுகுகளை எடுத்துட்டு வா" என்றார். அம்மாவுக்கோ சிரிப்பை அடக்க முடியவில்லை!

எஸ். நாகராஜன், வரிக்கல் கிராமம், செஞ்சி.



தூக்கி அடிக்கிறது!

அப்பா ஊரிலிருந்து புதுத் துணிகள் வாங்கி வந்தார். நான் உடனே அதைப் போட்டுக் காட்டினேன். அம்மா "தூக்கி அடிக்கிறது" என்றார். அம்மா பாராட்டியதை நான் புரிந்து கொள்ளாமல் "என்னம்மா! நான் எங்கேயும் தூக்கி அடிக்கவில்லையே, சும்மாதானே நிற்கிறேன்" என்றேன். அப்பாவும் அம்மாவும் சிரித்தார்கள்.

கே. பிரபு, ஜனக்புரி

அண்ணன் அடிக்கக் கூடாதா?

மழைக்காக இரண்டு நாட்கள்




பள்ளிக்கு விடுமுறை. எனக்கோ மிகவும் போரடித்தது. வெளியில் எங்கும் போக முடியவில்லை. அம்மாவிடம் சென்று "அம்மா போரடிக்குது, போரடிக்குது" என்று நச்சரித்தேன். அப்போது என் அண்ணன் ஓடி வந்து அடித்தான். "அம்மா நான் சும்மா இருக்கும் போது அண்ணன் வந்து அடிக்கிறான் பாருங்க!" என்று அழ ஆரம்பித்தேன். "போர் உன்னை அடிக்கலாம். உன் அண்ணன் அடிக்கக் கூடாதா?" என்றான். நான் அழுவதை நிறுத்தி விட்டு சிரிக்க ஆரம்பித்தேன்.

ஆர். ஜனனி, மணக்காடு.

என்ன ரோடு?


எங்கள் ஊரில் ரோடு சரியாக இருக்காது. என் தோழி ஊரில் இருந்து வந்திருந்தாள். நானும் அவளும் சைக்கிளில் பக்கத்து ஊருக்குக் கிளம்பினோம். போகும் வழியில் "என்ன ரோடு இது?" என்று கேட்டாள். நான் சற்றும் தாமதிக்காமல் "தார் ரோடு தான்" என்றேன். அவளுக்கோ பயங்கர கோபம் வந்தது. நான் சமாதானப்படுத்த மிகவும் கஷ்டப்பட்டேன்.



எஸ். கௌரி, திருவண்ணாதபுரம்.

சீரகம் வேண்டும்!

மளிகைக் கடையில் சாமான்கள் வாங்கிக் கொண்டிருந்தேன். அப்போது சிறுவன் ஒருவன் வந்து "சீரகம் நூறு கிராம் கொடுங்க" என்றான். கடைக்காரர்



"A ரகமா, B ரகமா, எது வேணும் தம்பி?" என்றார். "எனக்கு சீரகம் மட்டும் போதும்" என்றான் அவன். சுற்றியிருந்தவர்கள் சிரிக்க அவன் திருதிருவென விழித்தான்.

ஆபில் மஹரூப், அரசினர் ஆண்கள் மேல் நிலைப் பள்ளி, வத்தலகுண்டு.

யார் வாங்கவில்லை?

நாங்கள் பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்தோம். திடீரென டிக்கெட் பரிசோதகர்கள் ஏறினர். பரிசோதித்து விட்டு "ரெண்டு டிக்கெட் குறையுது, யார் டிக்கெட் இன்னும் வாங்கலை?" என்று சத்தம் போட்டார்கள். பக்கத்திலிருந்த என் தோழி "சார் நீங்க ரெண்டு பேரும் தான் டிக்கெட் வாங்கவில்லை" என்றாள். பரிசோதகர்களுக்கு கோபம் வந்து இறங்கி விட்டனர். பேருந்து நகர, கண்டக்டரும் மற்றவர்களும் சிரிக்க ஆரம்பித்தார்கள்.

டி. பானு, வெள்ளையாம்பட்டு.

கொலைகாரச் செடிகள்!

தாவரங்கள் தனக்கு வேண்டிய உணவை, பச்சையத்தின் உதவியால், தானே தயாரித்துக் கொள்கின்றன என்பது நமக்குத் தெரியும். ஆனாலும் கூட சில தாவரங்களுக்கு அகோரப் பசி; பச்சையத்தின் மூலம் கிடைக்கும் உணவு போதுமானதாக இல்லை. அவை தன் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள பூச்சிகள், சிறிய தவளைகள் மற்றும் சிறிய பறவைகள் போன்றவற்றை வலை வைத்துப் பிடித்து, உண்ணும் கலையை பாரம்பரியமாகப் பெற்றுள்ளன. இச் செடிகளில் உலகம் முழுவதும் 450 சிற்றினங்களும், இந்தியாவில் 35 வகைகளும் உள்ளன.

ஏன் இவைகள் மட்டும் விலங்குகளை உண்கின்றன? ஆச்சரியமாக இல்லை! பொதுவாக இத் தாவரங்கள் வளரும் நிலத்தில் இவைகளுக்குப் போதுமான நைட்ரஜன் மற்றும் தாது உப்புகள் இருப்பதில்லை. அதற்காகவே இவைகள் இலைகள் மூலம் பொறி வைத்துப் பூச்சிகளையும், மற்ற சிறு விலங்குகளையும் பிடித்துச் சாப்பிடுகின்றன. பூச்சியைப் பிடித்ததும், இலையில் சுரக்கப்படும் ஒருவித நொதியால், 'நான் அப்படியே சாப்பிடுவேன்' என்றபடி, பூச்சி மற்றும் சிறு பிராணிகளின் உடலிலுள்ள சதையைக் கரைத்து உறிஞ்சிவிட்டு, அவைகளின் மேல் கூட்டை அப்படியே வெளியே தள்ளி விடுகின்றன.

'வீனஸ் பூச்சி பொறி' ('Venus fly trap) என்ற செடியில் இலைகளின் மேற்புறம் பசையாக, பளபளப்பாக இரத்தினச் சிவப்பாய் இருக்கும்; இலைகளின் ஓரங்



• வீனஸ் பூச்சி பொறி

களில் உள்ள நீண்ட முட்கள் நாம் இரண்டு கைகளையும் கோர்ப்பது போல் மடிந்து ஒன்றையொன்று கோர்த்துக் கொள்ளும். இவ்விலைகள் பூச்சியை எதிர்நோக்கி விரிந்து, திறந்திருக்கும். இலையைப் பூ என எண்ணி, ஏமாந்த பூச்சி அதில் வந்து அமர்ந்தவுடன் இலையின் ஓரங்கள் 'படக்' கென்று பூட்டிக் கொள்ளும். பூச்சியை ஜீரணம் செய்த பின்னர்தான், இலை மீண்டும் அடுத்த இரையின் வரவை எதிர்பார்த்துத் திறக்கும்.

'சூரியப் பனி' (SUN

ஸ்வாதி

DEW) என்ற செடி பூச்சி பிடிப்பதற்காக தரையை ஒட்டி தன் இலைகளை வட்டமாகப் பரப்பி, கடை விரித்திருக்கும்! இலைகளின் மேற்புறம் கொம்பு போன்ற மென் முடிகள் நிறைய நீட்டிக் கொண்டிருக்கும். இதன் நுனியில் 'பனித்துளி' போன்ற பிசுக்குள்ள தேன்துளி மின்னிக் கொண்டிருக்கும். இத்துளியால் ஈர்க்கப்படும் பூச்சி இவைகளைத் தொட்டதும், 'பிசுக்' கென ஒட்டிக் கொள்ளும், நகரவே முடியாது. பின் செடி பூச்சியை 'ஸ்வாகா' பண்ணி விடும்.!





'ஜாடி செடி' எனப்படும் 'பிட்சர் செடி' (Pitcher plant) இலைகள் பூச்சியைப் பொறி வைத்துப் பிடிக்க, ஜாடி போன்ற அமைப்புடன் காணப்படுகின்றன. ஜாடியின் வாய்ப் பகுதியில் மூடி போன்ற அமைப்பு உள்ளது. ஜாடிக்குள் பூச்சி சென்றதும் மூடி 'டப்' என மூடிக் கொள்ளும்; பின் உயிர் போகும்வரை பூச்சி சிறையில்தான்! தப்பவே முடியாது.

நீர்த் தாவரமான யூட்ரிகுலேரியா (Utricularia) வின் இலைகள், நீருக்குள் சின்னக் குமிழ்களாய் மிதக்கும். இதுவும் பூச்சிக்காக குமிழைத் திறந்து வைத்திருக்கும். நீர்ப் பூச்சிகள் நுழைந்தவுடன் மூடி, பூச்சியை உறிஞ்சி சத்தை இழுத்துக் கொண்டு, மீதியை வெளியே தள்ளி விடும். இந்தச் செடிகளைப் பற்றி பயங்கரமான கதைகள் உலவி வருகின்றன. காட்டுக்குள் காணப்படும் இச்செடிகள் பக்கத்தில் செல்லும் மனிதர்கள் மற்றும் விலங்குகளின் இரத்தத்தை உறிஞ்சும் 'இரத்தக் காட்டேறிகள்' என்று கருதப்படுகின்றன. அப்படியேதும் இல்லை! இது வெறும் கட்டுக் கதையே!



• பிட்சர் செடி

● **எஸ். நாகராஜன், மேலப்பாதி.**

? பான்பராக் போடுவதால் ஏற்படும் தீய விளைவுகள் என்ன, டாக்டர்?

! பான்பராக் போடுபவர்களுக்கு ஆரம்பத்தில் அஜீரணம் தலைகாட்டும். பசி குறையும். உணவை சாப்பிடப் பிடிக்காது. நாளாக ஆக வயிற்றில் புண் ஏற்பட்டு வயிற்றுவலி தொல்லை கொடுக்கும். வாயின் உட்புறத்தில் கறுப்பும் வெள்ளையும் கலந்த சிறிய திட்டுகள் தோன்றும். இந்தச் சமயத்திலாவது அந்த நபர் சுதாரித்து பான்பராக் பழக்கத்தை நிறுத்த வேண்டும். இல்லையென்றால், அதி பயங்கர விளைவான 'புற்றுநோய்' துளிர்க்கும். வாய், கன்னம், நாக்கு, தொண்டை போன்ற இடங்களில் புற்றுநோய் வேரூன்ற மரணம் நெருங்கும். இப்போது சொல்லுங்கள் நாகராஜன், மனிதனுக்குப் பான்பராக் பழக்கம் மிகவும் அவசியமா?

● **என். சலீம்பாஷா, பேர்ணாம்பட்டு.**

? நம் உடம்பில் அதிக ரத்த ஓட்டம் உள்ள பகுதி எது, டாக்டர்?

! தோல்!

● **ஆர். ரவிவர்மன், கபிஸ்தலம்.**

? கண் பார்வைக் குறைவில் எத்தனை வகைகள் உள்ளன?

! மொத்தம் மூன்று. அவை 1. கிட்டப் பார்வை, 2. தூரப் பார்வை, 3. சிதறிய பார்வை. கிட்டப் பார்வைக் குறைபாடு உள்ளவர்களுக்குத் தூரத்தில் உள்ள பொருள்கள் தெரியாது; தூரப்பார்வை உள்ளவர்களுக்கு அருகில் உள்ள பொருள்கள் தெரியாது. இந்த இரண்டும் கண்ணுக்குள் அமைந்துள்ள விழி லென்ஸின் கோளாறால் ஏற்படுகின்றன. சிதறிய பார்வை (Astigmatism) என்பது 'கார்னியா' என்ற கருவிழியின் வளைவு சீராக இல்லாமல், மேடுபள்ளமாக இருந்தால், கண்ணுக்குள் புகும் ஒளி நேர்கோட்டில் செல்லாமல், பலவாறு சிதறி, பார்வையை சிதைப்பதால் ஏற்படுவது. இம் மூன்று குறைபாடுகளையும் தகுந்த கண்ணாடி அணிவதன் மூலம் சரி செய்து விடலாம்.



காதுகளில் சீழ் வடிவது ஏன்?

● **க. முருகேசன், அந்தமான்.**

? சிலர் திக்குவாயர்களாக இருப்பது ஏன், டாக்டர்?

! இதற்கு மூன்று காரணங்கள் உள்ளன. முதலாவது, மனம் தொடர்பானது. குழந்தைப் பருவத்தில் ஏற்படுகின்ற பயம், பதற்றம், பரபரப்பு, வேகம், சங்கோஜம், கவலை, சோகம், அதிருப்தி, அவநம்பிக்கை, ஏக்கம் போன்றவை திக்குவாய்க்கு வாசல் அமைக்கும். அடுத்தது, குழந்தைகள் பேசப் பழகும்போது மிரட்டுவதால் ஏற்படும் குறை. வீட்டிற்கு வந்துள்ள விருந்தினர் முன்னிலையில், குழந்தையை அப்படிப் பேசு, இப்படிப் பேசு என்று அதட்டி, பயமுறுத்திப் பேசச் சொல்லும்போது,





குழந்தை தான் தவறாகப் பேசி விடுவோமோ என்று பயந்து திக்கித் திக்கிப் பேசத் துவங்குவது. நாளடைவில் இதுவே பழக்கமாக திக்குவாய் நிரந்தரமாகி விடுவது. கடைசிக் காரணம், பரம்பரை அம்சம்! நாக்கு, உதடு, மேலண்ணம், குரல் மடிப்புகள் போன்றவற்றில் பிறவியிலேயே குறைபாடுகள் தோன்றுவதாலும், குரலை வெளிப்படுத்தும் தசைநார்களில் இயக்கம் தடைபடுவதாலும் திக்குவாய் ஏற்படுவதுண்டு.



● செ. மலர்விழி, அன்சாரிநகர்.

? தலையில் காயம் பட்டு ரத்தம் வந்தால் உடனே காப்பித் தூளை எடுத்து வைக்கின்றனரே... இது நல்லதா, கெட்டதா, டாக்டர்?

! சந்தேகமே வேண்டாம், மலர்விழி... இது கெடுதல்தான். காயத்தின் மீது காப்பித் தூளை வைத்தால் காயத்தில் சீழ் பிடிக்கும். காயம் ஆறுவது தாமதமாகும். மாறாக, காயத்தின் மீது சுத்தமான துணியை (துணி கிடைக்காவிட்டால் இருக்கவே இருக்கிறது கைக்குட்டை!) தண்ணீரில் நனைத்துப் பிழிந்து கொண்டு, அதை சில மடிப்புகளாக மடித்து, காயத்தின் மீது வைத்து அழுத்தமாகக் கட்டுப் போட்டால் ரத்தம் வடிவது உடனே நின்று விடும். அதற்குப் பிறகு மருத்துவரிடம் சென்று தகுந்த சிகிச்சையை மேற்கொண்டால், காயம் சீக்கிரத்தில் ஆறிவிடும்.

● க. அருணா, தக்கோலம்.

? இருதய மாற்று அறுவை சிகிச்சை முதன் முதலில் எங்கு, யாரால் செய்யப்பட்டது?


! தென்னாப்பிரிக்காவில், கேப்டவுன் நகரில், குருட்சூர் மருத்துவமனையில், கிறிஸ்டியன் பர்னார்ட் என்ற மருத்துவரால், 1967-ஆம் ஆண்டு டிசம்பர் 3-ஆம் நாளில் முதல் இருதய மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. நம் இந்தியாவில் 1994-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 3-ஆம் நாளில் புதுதில்லியில் உள்ள அகில இந்திய மருத்துவ அறிவியல் கழக (AIIMS) மருத்துவமனையில் டாக்டர் வேணு கோபால் என்பவரால் முதல் முறையாக இருதய மாற்று அறுவை சிகிச்சை நடத்தப்பட்டது.

டாக்டர் கு. கணேசன்

● வே. முருகானந்தன், சென்னை – 78.

? என்னுடைய காதுகளில் அடிக்கடி சீழ் வடிகிறது, டாக்டர்! அதை நிறுத்த சிறந்த வழி சொல்லுங்கள், ப்ளீஸ்!

! தொண்டைக்கும் காதுக்கும் இடையில் உள்ள ஓர் இணைப்புக் குழாய் வழியாக பாக்டீரியா, வைரஸ் போன்ற கிருமிகள் நடுக்காதுக்குச் சென்று அழற்சியை ஏற்படுத்துவதால் காதில் சீழ் பிடிக்கிறது. பொதுவாக அடிக்கடி ஜலதோசம் பிடிப்பது, தொண்டையில் டான்சில் வீங்கிக் கொள்வது, மூக்கில் அடினாய்டு பெருத்து விடுவது போன்றவற்றால் இந்தத் தொல்லை ஏற்படுவது வழக்கம். ஆரம்பத்தில் இதை கவனிக்காவிட்டால், காது சவ்வில் துவாரம் விழுந்து சீழ் வெளியேறும். அடிக்கடி காதில் சீழ் வடிந்தால் காது செவிடாகி விடும். சமயங்களில் இந்த நோய்த் தொற்று மூளைக்குப் பரவி மூளைக் காய்ச்சலை ஏற்படுத்தி விடும். ஆகையால்... முருகானந்தன், நீ அவசியம் ஒரு காது-மூக்கு-தொண்டை மருத்துவ நிபுணரை உடனடியாகக் கலந்தாலோசிக்க வேண்டும். காதில் சீழ் வடிவதை அறவே நிறுத்த பல்வேறு மருந்துகள் உள்ளன. அறுவை சிகிச்சையும் உண்டு. உனக்குத் தேவையான சிகிச்சையை மேற்கொண்டு காதில் சீழ் வடிவதை நிறுத்தி விடுவார் மருத்துவர்! ஆக, காலத்தோடு சிகிச்சைக்குச் செல்ல வேண்டியது உன் அத்தியாவசிய கடமை, தம்பி!



சிரிப்...

ஆசிரியர் : உன் தம்பியிடம் பத்து பழம் இருக்கு. உனக்கு மூணு பழம் தந்துட்டான். இப்ப அவனிடம் எத்தனை இருக்கும்?

மாணவன் : ஏழு இருக்கும் சார்!

ஆசிரியர் : இப்ப மீண்டும் இரண்டு கொடுத்துட்டான். அப்ப அவனிடம் எத்தனை இருக்கும்.


மாணவன் : ஐந்து இருக்கும் சார்!

ஆசிரியர் : இப்ப மீண்டும்...

மாணவன் : வேண்டாம் சார்! இதுக்கு மேல கேட்டா அடிச்சுடு வான்!

— எம்.கே. வேங்கவேல், சேலம்.





"எந்தப் பூச்சிக்குக் குளிரவே குளிராது?"

"கம்பளிப் பூச்சிக்குத்தான்!"

— பா. கவிதா, சென்னை - 17



ஆசிரியர் : மாண வர்கள் மத்தியில் பிரபலமான வார்த்தை எது?

மாணவன் : தெரி யாது சார்!

ஆசிரியர் : சரி யாகச் சொன்னே!

— இமாம் பாஷா, வத்தலகுண்டு.




"என் வகுப்பிலே ஒருத்தி உட்காரவே மாட்டாள்!"

"ஏன்?"

"அவ பேருதான் 'அமரா' வதியாச்சே!"

— பூங்கோதை கிருஷ்ணராஜ், பாண்டிச்சேரி.



"விண்வெளி வீரர்களிலேயே ரொம்ப பலசாலி யார்?"

"'ஆர்ம்ஸ்ட்ராங்' தான்!"

— தாரமங்கலம் மகேஷ்.



பட்டம்!

காட்சி 1

செந்தில் : கானமேகம்! காளமேகம்!

கானமேகம்: செந்திலா...? வா செந்தில்!... இனிமேல் நீ என்னை அப்படிக் கூப்பிடக் கூடாது!

செந்தில்: ஏன் காளமேகம்? நீ முன்னைப் போலத்தானே இருக்கே?

கானமேகம்: டேய், என் உருவத்திலே மாற்றம் இல்லை.... அறிவிலேதான் மாற்றம் ஏற்பட்டிருக்கு!

செந்தில்: அறிவிலே மாற்றமா?... புரியல்லையே!

கானமேகம்: செந்தில், இனிமேல் நான் 'தமிழ்ப்புலி காளமேகம்!' என்னைக் கூப்பிட்டால் 'தமிழ்ப்புலி' கானமேகம் - என்றுதான் கூப்பிட வேண்டும்!

செந்தில்: உனக்கு யாரு, எப்போ தமிழ்ப் புலின்னு பட்டம் கொடுத்தாங்க!

கானமேகம்: அந்தப் பட்டத்தைக் கொடுக்க வேண்டியவன் நீதான் செந்தில்! அதைக் கொடுக்க வேண்டிய நேரமும் இப்பொழுதுதான்! எங்கே... ஒருமுறை 'தமிழ்ப் புலி காளமேகம்'னு என்னைக் கூப்பிடு பார்க்கலாம்!

செந்தில்: உனக்கு 'தமிழ்ப்புலி'ன்னு பட்டம் நான் தரணுமா?

கானமேகம்: ஏன் தரக் கூடாது செந்தில்? நம்ம வகுப்பிலே ஒவ்வொரு வருடமும் தமிழில் தவறாமல் முதல் 'மார்க்கு' வாங்கறவங்க யாரு? நீயே சொல்!

செந்தில்: நீதான் காளமேகம். அதிலென்ன சந்தேகம்?

கானமேகம்: அப்புறம் ஒவ்வொரு ஆண்டு விழாவின்போதும் நடக்கும் தமிழ்க் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் முதல் பரிசு வாங்குவது யார்?

செந்தில்: அதுவும் தெரிந்ததுதான் - தமிழ் சம்பந்தப்பட்ட எல்லாப் போட்டிகளிலும் நீதான் முதல் பரிசைத் தட்டிக் கிட்டுப் போறே.

கானமேகம்: அப்போ நான் தமிழிலே மத்தவங்களைக் காட்டிலும் கெட்டிக்காரன் அப்படித்தானே?

செந்தில்: இதுவரை அப்படித்தான்!

கானமேகம்: அப்படியானால் என்னைத் தமிழ்ப்புலின்னு பட்டம் கொடுத்து கூப்பிடறதிலே என்ன தவறு?

செந்தில்: காளமேகம்! நீ தமிழில் கெட்டிக்காரன்தான்! ஆனால் இந்த மாதிரி சிறப்புப் பட்டங்களையெல்லாம் நாமாக வைத்துக் கொள்வது தவறு. நம்மைவிட வயதிலும் அறிவிலும் சிறந்தவர்கள் அவர்களாகவே விருப்பப்பட்டுக் கொடுப்பதுதான் முறை! உன் கூடவே படிக்கும் நான் உனக்குப் பட்டம் சூட்டினால் அது ஒரு கேலியாகத்தான் இருக்கும்! பட்டத்திற்குத் தகுதி பெற நாம் இன்னும் தமிழறிவில் எவ்வளவோ வளர வேண்டும்.

கானமேகம்: செந்தில்! இந்த வகுப்பிலே

எஸ்.ஆர்.ஜி. சுந்தரம்

உனக்கு ஒரு தனி மதிப்பு உண்டு! நீ எதைச் சொன்னாலும் மற்ற மாணவர்கள் அதை அப்படியே கேட்டு நடப்பார்கள்! நீ என்னை மற்ற மாணவர்கள் முன்னிலையில் என் தமிழறிவைப் பாராட்டி "காளமேகம் ஒரு தமிழ்ப்புலி"ன்னு ஒரே ஒரு முறை சொல்லி விட்டால் போதும்! என்னை 'தமிழ்ப்புலி காளமேகம்'னு கூப்பிட ஆரம்பிச்சுடுவாங்க! நான் வேண்டுமானால் பதிலுக்கு உன்னை "பூகோளப்புலி"ன்னு கூப்பிடறேன். சரிதானா?

செந்தில்: வேண்டாம் காளமேகம் வேண்டாம்! பட்டம் கடைச்சரக்கு இல்லை! நமக்கு நாமே வைத்துக் கொள்ளும் பட்டத்திற்கு மதிப்பும் இருக்காது; நெடுநாள் தங்கவும் தங்காது. காற்றில் பறக்கும் பட்டமாகப் பறந்து விடும்!

காளமேகம்: செந்தில் உனக்கு என் மீது பொறாமை! அதனால்தான் நீ இப்படிப் பேசுகிறாய்! ஆனால் எனக்குப் பிடித்த இந்த "தமிழ்ப்புலி" பட்டத்தை, இந்த வகுப்பு மாணவர்களைக் கொண்டே நான் அடையத்தான் போகிறேன். இது உறுதி. வருகிறேன்!

காட்சி 2

காளமேகம்: சிகாமணி, சிகாமணி!

சிகாமணி: என்ன காளமேகம்?

காளமேகம்: நான் 'சிறுவர் தமிழ்ச் சங்கம்' என்று ஒன்றைத் தொடங்கப் போகிறேன். நீ அதில் சேர வேண்டும்!"

சிகாமணி: சிறுவர் தமிழ்ச் சங்கமா?

"என்ன முயலாரே, உங்களுக்கு எப்படி கழுத்து சுளுக்கிடுச்சு?"
"நம்ம ஒட்டகச்சிவிங்கியாரை நிமிர்ந்து பார்த்தேன், அதான்."
— பா. ஜெயக்குமார்



காளமேகம்: ஆமாம்...! நம் வகுப்பிலே பல பேருக்கு இன்னும் தமிழ் சரியா பேச வரல்லே. எழுத வரல்லே! இந்தத் தமிழ்ச் சங்கத்தின் மூலம் ஓய்வு நேரத்தில் நமது தவறுகளை நாமே திருத்திக் கொள்ளலாம்! தமிழறிவை நன்றாக விருத்தி செய்து கொள்ளலாம்.

சிகாமணி: அது எப்படி காளமேகம்?

காளமேகம்: நான் தொடங்கப் போகும் தமிழ்ச் சங்கத்தில் சேரும் உறுப்பினர்களுக்குச் சில கட்டுத் திட்டங்களை விதிக்கப் போகிறேன். உறுப்பினர் கட்டணம் எதுவும் கிடையாது. ஆனால் சங்கத்தில் சேரும் உறுப்பினர்கள் எல்லோரும் சங்கக் கூட்டங்களுக்குத் தவறாமல் வர வேண்டும். கூட்டம் நடக்கும் நேரத்தில் சுத்தத் தமிழிலேயே பேச வேண்டும். நடுவில் தமிழுடன் ஆங்கிலச் சொற்களைக் கலந்து பேசக் கூடாது. உச்சரிப்பிலும் தவறு வரக் கூடாது.

சிகாமணி: அப்படிப்பட்ட தவறுகள் நேர்ந்து விட்டால்?

காளமேகம்: தவறாகப் பேசிய உறுப்பினர் ஒரு தவறுக்கு இருபத்தைந்து காசு அபராதம் செலுத்த வேண்டும்.

சிகாமணி: இது அவசியமா காளமேகம்?

காளமேகம்: ம்! அபராதம் இருந்தால் தான் எல்லோரும் பயத்துடன் சரியான தமிழையே பேச முயல்வார்கள். அவர்களுக்கும் நல்ல தமிழ் பேச வந்துவிடும். அது மட்டுமில்லை சிகாமணி, இப்படி அபராதம் செலுத்துவதால் சேரக்கூடிய பணம் அனைத்தும் யாருக்குத் தெரியுமா?

சிகாமணி: யாருக்கு?

காளமேகம்: முதல் பத்துநாள் கூட்டத்தில், பத்தாம் நாள் வரை யார் ஒருமுறை கூட அபராதம் செலுத்தாமல் இருக்கிறார்களோ அவர்களுக்குத்தான் அத்தனை பணமும் பரிசாக அளிக்கப்படும்! அத்துடன் 'தமிழ்ப்புலி' என்ற பட்டமும் அந்த உறுப்பினருக்குக் கொடுக்கப்படும்.

சிகாமணி: மற்ற நண்பர்கள் இச்சங்கத்தில் சேர சம்மதிச்சுட்டாங்களா?

காளமேகம்: ஓ!... ஆனால் இந்த செந்தில் மட்டும்தான் சேர சம்மதம் தெரிவிக்கவில்லை.

சிகாமணி: சரி காளமேகம்! என் தமிழறிவை வளர்த்துக் கொள்ள நானும் இதில் சேரச் சம்மதிக்கிறேன்.

காளமேகம்: மகிழ்ச்சி! இச்சங்கத்தின் முதல் 10 நாள் கூட்டங்களுக்கும் நான்தான் தலைவன். அப்பொழுது நான் பலரிடம் பல பொதுவான கேள்



விகள் கேட்பேன். பலரோடு பேசுவேன். மாற்றி மாற்றி ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளலாம். அச்சமயம் யார் தவறாகப் பேசினாலும் அபராதக் காசை ஓர் உண்டியலில் போட்டு விட வேண்டும். சரியா?. நாளை கூட்டத்திற்குத் தவறாமல் வந்துவிடு! கூட்டம்கூட என் வீட்டில் தான்!

காட்சி 3

செந்தில்: சிகாமணி, காளமேகம் நடத்தி வரும் சிறுவர் தமிழ்ச்சங்கம் எப்படி நடக்கிறது?

சிகாமணி: தமிழ்ச்சங்கம் என்ற பெயரில் காளமேகம் இப்படியெல்லாம் கேலி செய்வான் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. தெரிந்திருந்தால் நாங்கள் சங்கத்தில் சேர்ந்தே இருக்க மாட்டோம்.

செந்தில்: ஏன்? என்ன நடந்தது?


சிகாமணி: நேற்று காளமேகம் நம் பன்னீர் செல்வத்தைப் பார்த்து 'பன்னீர் மாடே! என்று கூப்பிட்டான். காரணம் கேட்டால் தமிழில் 'மாடு' என்றால் செல்வம் என்று பொருள். ஆதலால் பன்னீர் மாடே என்று கூப்பிட்டதில் தவறில்லை என்றான். ஒருநாள் என்னைப் பார்த்து முட்டாளே என்றான். உடனே சிரித்துவிட்டு, ''முட்டாள்'' என்றால் 'முழுமை நிறைந்த ஆள்' என்றுதான் பொருள். கோபப் படாதே!'' என்றான்! இப்படி ஒன்பது கூட்டங்களிலும் எல்லாரையும் பலவிதமாகக் கேலி செய்து விட்டான். இதுவரை காளமேகம் தவிர மற்ற எல்லாரும் தமிழில் தவறாகப் பேசியதற்காக அபராதமும் செலுத்தி விட்டார்கள்.

செந்தில்: அப்படியா?

சிகாமணி: ஆமாம்! இன்றுதான் கடைசி நாள் கூட்டம்! இன்றைய கூட்டத்திலும் அவன் அபராதம் செலுத்தாவிட்டால் பிறகு 'தமிழ்ப்புலி' என்று அவனைக் கூப்பிடும்படி நேரும்! அப்புறம் அவன் செய்யும் கேலிகளையெல்லாம் நாங்கள் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

செந்தில்: இன்று ஒருநாள் இருக்கிறதே, முயற்சி செய்து பாருங்கள்!

சிகாமணி: எங்களால் முடியாது... அவன் பேச்சில் தவறு கண்டுபிடிக்க முடியவில்லை... எங்களாலும் தவறு வராமல் தமிழ் பேச முடியவில்லை. செந்தில்! நீதான் இன்றைய கூட்டத்திற்கு வந்து எப்படியாவது காளமேகத்தைத் தவறா பேச வைக்க



"பையன், கணக்குல கொஞ்சம் வீக்னு எப்படி கண்டுபுடிச்சீங்க?"
"அதான் வயசு கேட்டால் 'பிறந்த தேதி'யைச் சொல்லி, நீங்களே கணக்கு பண்ணிக்கோங்க சார்னு சொல்றானே!"

— சீர்காழி வி. ரேவதி

வேண்டும். அப்பொழுதுதான் அவன் அகங்காரமும் அடங்கும்!

செந்தில்: வேண்டாம் சிகாமணி! திடீரென்று நான் சங்கக் கூட்டத்திற்கு வருவது சரியில்லை... காளமேகம் இதற்கு சம்மதிக்க மாட்டான்.

சிகாமணி: இல்லை சம்மதித்து விட்டான்... ஆனால் இன்று உன்னைத் தவிர வேறு யாரும் அவனுடன் பேசக்கூடாது என்று சொல்லி விட்டான். நாங்களும் ஒப்புக் கொண்டு விட்டோம்! ஒருவகையில் உன்னுடன் மோதுவதில் அவனுக்கும் மகிழ்ச்சிதான்!

செந்தில்: சரி, வருகிறேன்.

காட்சி 4

காளமேகம்: வா சிகாமணி, இன்று பத்தாவது நாள் கூட்டம்!

சிகாமணி: நினைவிருக்கிறது காளமேகம்! நீ ஒருவன்தான் இதுவரை அபராதம் செலுத்தாதவன் என்பதும் நினைவிருக்கிறது.

காளமேகம்: ஆமாம்! இன்னும் சற்று நேரத்தில் 'தமிழ்ப்புலி'யும் ஆகப் போகிறவன்.

சிகாமணி: நேற்று நாங்கள் சொல்லியிருந்தபடியே, இன்று எங்கள் சார்பில் பேச செந்திலை அழைத்துக் கொண்டு வந்துள்ளோம்!

காளமேகம்: சரி! ஆனால் மற்றவர்கள் யாரும் பேசக் கூடாது! செந்தில்! இன்றைய கூட்டத்திலும் நான் அபராதம் செலுத்தவில்லை என்றால், மற்றவர்களுடன் சேர்ந்து கொண்டு நீயும் என்னைத் 'தமிழ்ப் புலி காளமேகம்!' என்று அழைத்து வாழ்த்த வேண்டும்! சரியா?

செந்தில்: அப்படியே ஆகட்டும்!

காளமேகம்: அப்படியானால் நாம் பேசத் துவங்கலாமா?

செந்தில்: ஓ!.... எனக்கு இப்பொழுது தொண்டை கரகரப்பாயிருக்கிறது. ஒரு குவளை தண்ணீர் மட்டும் வேண்டும்!

காளமேகம்: என்ன தண்ணீர் வேண்டும் செந்தில்?

செந்தில்: அப்படியென்றால்?.... தண்ணீர் வேண்டும் அவ்வளவுதான்!

காளமேகம்: என்ன செந்தில் நான் கேட்பது உனக்குப் புரியவில்லையா? உனக்கு வெறும் தண்ணீர் வேண்டுமா? இல்லை சுடுதண்ணீர் வேண்டுமா? தொண்டை கரகரப்பிற்கு சுடுதண்ணீர்தான் நல்லது இல்லையா?

செந்தில்: என்னது, சுடு தண்ணீரா?... அப்படியொரு தண்ணீர் உண்டா என்ன?

காளமேகம்: என்ன செந்தில் இது?... சூடான நீரைத்தான் அப்படிக் குறிப்பிட்டேன்! இதுகூடப் புரியவில்லையா?

செந்தில்: காளமேகம்! தண்ணீர் என்றாலே தண்மை பொருந்திய நீர் - அதாவது குளிர்ந்த நீர் என்றுதான் பொருள். எனவே நீ சுடுதண்ணீர் என்று சொன்னது பிழை! வெந்நீர் அல்லது சுடுநீர் என்பதுதான் சூடான நீருக்குச் சரியான சொல்! எனவே நான் தண்ணீர் கேட்டபோது, நீ சரியாகப் புரிந்து கொண்டு, குளிர்ந்த நீரைக் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் நீயோ சுடுதண்ணீர் வேண்டுமா என்று தவறாகப் பேசிவிட்டாய்! சுடுநீர், வெந்நீர் என்ற சரியான சொற்கள் இருப்பதை மறந்து விட்டாய்! என்ன என் விளக்கம் சரிதானே?


காளமேகம்: மிகவும் சரி செந்தில்! தவறாகத்தான் பேசி விட்டேன். 'யானைக்கும் அடி சறுக்கும்' என்று சொல்வார்கள். எனக்கும் சறுக்கி விட்டது. தமிழில் வல்லவன் என்ற செருக்கால், 'தமிழ்ப்புலி' பட்டத்திற்கு ஆசைப்பட்டேன். உங்களைக் கேலி செய்தேன். தோற்று விட்டேன். எல்லோரும் என்னை மன்னித்து விடுங்கள்! இதோ என் அபராதப் பணம்!

செந்தில்: காளமேகம்! இந்த சிறுவர் தமிழ்ச்சங்கத்தை விடாமல் நடத்துவோம். கிடைக்கும் அபராதப் பணத்தில் பல நல்ல இலக்கிய நூல்களை வாங்கிப் படிப்போம்!


எல்லோரும்: அப்படியே செய்வோம்!

பால்

ஆழி



குட்டிப்போட்டுப் பால்கொடுக்கும் உயிரினங்களில், குட்டி அல்லது கன்று போட்ட பிறகு, அதற்கென்று உள்ள சுரப்பியிலிருந்து சுரக்கும் திரவம்தான் பால் என்பது. பொதுவாக, பாலில் நீர் 87 %, லாக்டோஸ் என்னும் சர்க்கரை 4·7 %, புரோட்டீன் 3·5%, கொழுப்பு 3·5%, மற்றும் வைட்டமின் A, B_1, B_2, C, D, சுண்ணாம்புச் சத்து, கந்தகச் சத்து, பொட்டாசியம் முதலியவை இருக்கின்றன.



பசும்பால்

தாய்ப்பால்


பசும்பாலைவிட தாய்ப்பாலில் சர்க்கரை அதிகம்; புரோட்டீன் குறைவு. தண்ணீர் சமம்!



பாலூட்டிகளில் மிகவும் சிறியது 'கிட்டி' வெளவால். 2 கிராம் எடைதான் இருக்கும்! ஒரு நிலக் கடலை அளவுகூட இருக்காது!

பாலூட்டிகளில் மிகவும் பெரியது நீலத்திமிங்கிலம். 31 மீ. நீளமும் 190 டன் எடையும் இருக்கும். ஒரு பெண் திமிங்கிலம் ஒரு தடவைக்குச் சுமார் 40 லிட்டர் பால் கொடுக்கும்! அதன் பால், பசும்பாலை விட 10 மடங்கு அடர்த்தியானது. பசும்பாலைவிட 12 மடங்கு கொழுப்புச் சத்து அதிகம். 53% கொழுப்புச் சத்து! திமிங்கிலக் கன்று, தாயின் முதுகில் உள்ள மடியில் பாலைக் குடித்துவிட்டு தினமும் 100 கிலோ எடை கூடும்!






யானைப் பாலில் 14 % கொழுப்புச் சத்தும் அதிக அளவு சர்க்கரையும் இருக்கின்றன. அதிகம் தித்திப்பானது. தாய் யானையின் முன்னங்கால்களுக்கருகில் உள்ள மடியில் யானைக்குட்டி பால் குடிக்கும். யானைப் பால் உடலுக்கு அழகைக் கொடுக்கும் என்று சொல்லப்படுகிறது.

அரேபியாவிலும், ராஜஸ்தான் பாலைவனப் பிரதேசங்களிலும் ஒட்டகப் பாலை அருந்துகிறார்கள். ஓர் ஒட்டகம் நாள்தோறும் 2 லிட்டர் விதம் 3 ஆண்டுகளுக்குத் தொடர்ந்து பால் கொடுக்கும். ஒட்டகப் பாலில் புரோட்டீன், கொழுப்பு, வைட்டமின்கள் முதலிய சத்துக்கள் இருக்கின்றன. ஒட்டகப் பால், தோல், காது ஆகியவற்றில் ஏற்படும் நோய்களைக் குணப்படுத்தும்.






இமயமலைப் பகுதிகளிலும் திபேத்திலும் 'யாக்' என்னும் விலங்கின் பாலை அருந்துகின்றனர். இந்தப் பாலிலிருந்து அதிக அளவு வெண்ணெயும் எடுக்கின்றனர். பொதுவாக, பாலின் நிறம் வெண்மைதான். ஆனால் யாக்கின் பால் ஆரஞ்சு நிறத்தில் இருக்கும். கண் நோய்களைக் குணப்படுத்தும்.




கழுதைப்பால் குழந்தை நோய்களுக்கு நல்ல மருந்து என்று கருதப்படுகிறது. எளிதில் ஜீரணமாகும் இந்தப் பாலைக் குடிக்கும் குழந்தையை எந்த நோயும் பாதிக்காது என்று நம்பப்படுகிறது. அதனால்தான் இந்தப் பழமொழி: 'அழுத பிள்ளை சிரித்ததாம்; கழுதைப் பாலைக் குடித்ததாம்!'


குதிரைப்பாலைக் குடித்தால் தோல் பளபளப்பாக மாறும்; ஆண்களுக்கு உடலில் சக்தியும் நல்ல வடிவமும் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது.




தென் அமெரிக்காவில் 'லாமா' என்னும் விலங்கின் பாலை அருந்துகின்றனர்.




முயலின் பாலில் 25% கொழுப்பு உள்ளது. பசும்பாலைவிட இதில் 6 மடங்கு கொழுப்பு. எனவே, தாய் முயல் தன் குட்டிக்கு வாரத்திற்கு 2 அல்லது 3 தடவைகள் மட்டுமே பால் கொடுக்கும்!





ரஷ்யாவில் சுமரகோவா கிராமப் பகுதியில், கடம்பை மானின் பாலை அருந்துகின்றனர். இந்தப் பாலில் புரோட்டீனும் கொழுப்பும் அதிகம். இது குடல் புண் வராமல் தடுக்கும்.



துருவப் பிரதேசங்களிலும், லாப்லாந்திலும் ரெயின் டீர் என்னும் மானின் பாலை அருந்துகின்றனர். ஒரு டம்ளர் காபி தயாரிக்க ஒரு ஸ்பூன் ரெயின் டீர் பால் போதும். அவ்வளவு கெட்டியாக இருக்கும் பால்!




ஒட்டகச்சிவிங்கியின் பாலில் பசும்பாலைவிட 7 மடங்கு புரோட்டீன் அதிகம் உள்ளது.



ஸ்விட்ஸர்லாந்தில் உள்ளவர்கள் வெள்ளாட்டின் பாலைத்தான் அதிகமாக அருந்துகிறார்கள். இந்தியாவின் கிராமப்புறங்களிலும் வெள்ளாட்டின் பாலை அருந்துகிறார்கள். எளிதில் ஜீரணமாகக் கூடியது. காந்தியடிகள் அருந்திவந்த பால் இது!


கங்காருவின் குட்டி பிறக்கும்போது 3 செ.மீ. நீளம்தான் இருக்கும். ஆனால், தாயின் சத்து மிகுந்த பாலைக் குடித்துவிட்டு, அந்தச் சின்னஞ்சிறு குட்டி 6 மாதங்களுக்குள் 2000 மடங்கு பெரிதாக வளர்ந்து விடும்!






பாலூட்டிகளில், ஆஸ்திரேலியாவில் உள்ள 'வாத்தலகி' என்னும் 'பிளாடிபஸ்' வித்தியாசமானது. அதன் மூக்கு வாத்து அலகு மாதிரி இருக்கும். கால்களும் வாத்தின் கால்கள் மாதிரித்தான். அது முட்டையிடுகிறது. அடை காக்கிறது. ஆனால், முட்டையிலிருந்து குஞ்சு வந்ததும் அதற்குப் பால் கொடுக்கிறது!

உலகில் உள்ள மாடுகளின் எண்ணிக்கையில் 25% இந்தியாவில் இருக்கின்றன. இதில் மூன்றில் ஒன்றுதான் பால் கொடுக்கிறது. உலகில் அதிகமாகப் பால் கொடுப்பது அமெரிக்கப் பசு. அது ஆண்டுக்குச் சுமார் 4250 கிலோ பால் கொடுக்கிறது. ஆனால் ஒரு நல்ல பசு 5000 கிலோ பால் கொடுக்கும். மிகச் சிறந்த பசு சுமார் 10,000 கிலோ பால் கொடுக்கும். ஆனால் மிகக் குறைவாகப் பால் கொடுப்பது இந்தியப் பசு— ஆண்டுக்குச் சுமார் 220 கிலோ தான்!





1994-இல், தென் ஆப்பிரிக்காவில், லூட்விக்வேன் என்பவரின் பசு ஒன்று, ஒரு நாளில் 111.2 லிட்டர் பால் கறந்து உலக சாதனை புரிந்திருக்கிறது. இதற்கு முன் உலக சாதனை புரிந்த பசு கறந்தது ஒரு நாளில் 109.3 லிட்டர்!

பால், உணவுப் பொருளாக மட்டுமே பயன்படவில்லை; ஹாலந்தில், பாலிலிருந்து பெயின்ட், செயற்கை நூல், முகத்தில் தடவும் அழகுசாதன கிரீம் முதலியவற்றையும் தயாரிக்கிறார்கள்!



விளையாட்டு நாயகர்கள் - 1997



• அரவிந்த டி சில்வா

கிரிக்கெட்

அரவிந்த டி சில்வா

நமக்கு நன்கு அறிமுகமான இலங்கை அணியின் துணை கேப்டன். 1997இல் மட்டும் 7 சதங்கள். எல்லாமே இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு எதிராக! பேட்ஸ்மேன்களில் சனத் ஜெயசூர்யா, ராகுல் திராவிட், சௌரவ் கங்குலி, கிரேக் புளூவெட், மாத்யூ - எலியாட், சச்சின் டெண்டுல்கர், மொஹமத் அஸாருதின் ஆகியோரும் சிறப்பாக விளையாடியவர்கள்தான். இருப்பினும் அரவிந்த டி சில்வா நெருக்கடி நேரங்களில்கூட தோல்வியைத் தவிர்க்கும் வகையில் விளையாடியவர்.



• பீட் சாம்ப்ராஸ்



• விஸ்வநாதன் ஆனந்த்

கிளென் மெக்ராத்

ஆஸ்திரேலியாவின் வேகப்பந்து வீச்சாளர். 1997 இல் 63 விக்கெட்டுகள். லார்ட் மைதானத்தில் இங்கிலாந்தோடு விளையாடியபோது 38 ரன்கள் மட்டுமே அளித்து 8 விக்கெட்டுகளை எடுத்துக் கொண்டார். ஆஸ்திரேலிய அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வார்னே இவரை விட 5 விக்கெட்டுகள் அதிகம் வீழ்த்தியிருக்கிறார். இருப்பினும் மெக்ராத் விக்கெட்டுகளை வீழ்த்த முடியாத நிலையிலும் ரன்களைக் கட்டுப்படுத்துவதில் கைதேர்ந்தவர். மேற்கிந்தியத் தீவு ஆட்டக்காரர் பிரையன் லாரா கூட மெக்ராத்தின் பந்துவீச்சை எதிர்கொள்வது மிகவும் கடினமென ஒத்துக்கொள்கிறார்.

இலங்கை

1997இல் ஆடிய 11 டெஸ்ட்களில் ஒன்றில் கூட வெற்றியில்லை. ஆனால் ஒரு தினப் போட்டிகளில் அமோக வெற்றி! ஷார்ஜாவில் சிங்கர்-அகாய் கோப்பை, இந்தியாவில் சுதந்தரக் கோப்பை, இலங்கையில் ஆசியக் கோப்பை - இவை எல்லாம் இவர்களுக்கே! மேலும் இலங்கைக்கு வந்த இந்திய அணியினரை மூன்று ஒரு தினப் போட்டிகளிலும் தோற்கடித்து திருப்பியனுப்பினர்.



• மார்டினா ஹிங்கிஸ்

ஆஸ்திரேலியா

1997 இல் மேற்கிந்தியத் தீவு, தென் ஆப்பிரிக்கா, இங்கிலாந்து, நியூசிலாந்து ஆகிய நாடுகளுடனான டெஸ்ட் தொடர்களை ஆஸ்திரேலியா 3-2, 2-1, 3-2, 2-0 என்ற கணக்கில் வென்றது. ஒரு தினப் போட்டிகளில்

உலகின் மிகச் சிறிய நாடு

உலகிலேயே மிகச் சிறிய நாடு போப் பாண்டவரின் ஆட்சியின் கீழ் உள்ள வாடிகன்தான். ரோம் நகரின் மையத்தில் அது அமைந்துள்ளது. இந்நாட்டை போப் பாண்டவர் ஆட்சி செய்கிறார். வாடிகன் நாட்டிற்கென்று தனியான கொடி, தபால் நிலையம், ரயில்வே ஸ்டேஷன், டெலிபோன் நிர்வாகம், ரேடியோ நிலையம் ஆகியவை உண்டு. தனியான நாணயங்களும் செலாவணியில் உள்ளது.



உலகெங்கும் உள்ள கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் செலுத்தும் காணிக்கையிலிருந்து இதன் நிர்வாகம் நடைபெறுகிறது. வாடிகன் மாளிகையில் போப்பாண்டவர் வசிக்கிறார். மாளிகையைச் சுற்றிலும் அழகான தோட்டங்கள், தேவாலயங்கள், அருங் கலைக் காட்சியகங்கள், நூல் நிலையங்கள் ஆகியவை உள்ளன. வாடிகன் நூல் நிலையம் உலகப் பெரும் நூல் நிலையங்களில் ஒன்றாகும்.

('சிரிக்க... ரசிக்க... சிந்திக்க' என்ற நூலில் இருந்து)

— எல். கோபாலகிருஷ்ணன்

குறிப்பிடத் தகுந்த வெற்றிகள் கிட்டாவிடினும் டெஸ்ட் தொடர்களின் வெற்றி நாயகர்கள் ஆஸ்திரேலியர்களே!

டென்னிஸ்

1997இல் டென்னிஸ் உலகில் நிறைய புதுமுகங்கள். பீட் சாம்ப்ராஸ், மார்ட்டினா ஹிங்கிஸ் – இவர்கள் இருவரும் முதலிடத்தில் இருக்கிறார்கள். ஆண்களில் பாட்ரிக் ராஃப்டர், மைக்கேல் சங், ஜோனஸ் போஜர்க் மேன், கஸ்டாவோ கூர்டென் ஆகியோரும், பெண்களில் ஜன நவோத்னா, லின்ட்சே டேவன் போர்ட், இவா மேஜோலி, அமந்தா கோட்ஸர் ஆகியோரும் அடுத்தடுத்த இடங்களைப் பிடிக்கிறார்கள்.

சாம்ப்ராஸ் 50 தனிப்பட்டங்களையும், 10 கிராண்ட் ஸ்லாம் தனிப்பட்டங்களையும் பெற்றவர்.

இந்தியர்களில் லியாண்டர் பயஸ், மகேஷ் பூபதி இருவரும் அதிகம் பேசப்பட்டனர்.

செஸ்

Deep Blue என்ற IBM கணிப்பொறியுடன் உலக சாம்பியன் கேரி காஸ்பரோவ் விளையாடியது இந் நூற்றாண்டின் மிக முக்கிய செஸ் ஆட்டம். இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் முந்தைய வருடங்களை விட அதிக அளவிலான போட்டிகளில் வென்றது 1997இல் தான்!

— விளையாட்டுப் பையன்

கிரிக்கெட் டேட்டா

99 ரன்களில் ஆட்டமிழந்த இந்தியர்கள்

1. பங்கஜ் ராய் (கேட்ச்) ஆஸ்திரேலியாவுடன் 1959-60 டெல்லி
2. எம். எல். ஜெய்சிம்ஹா (ரன் அவுட்) பாகிஸ்தானுடன் 1960-61 கான்பூர்
3. அஜித் வடேகர் (கேட்ச்) ஆஸ்திரேலியாவுடன் 1967-68 மெல்போர்ன்
4. ஆர்.எப். சர்தி (கேட்ச்) நியூசிலாந்துடன் 1967-68 ஆக்லாந்து
5. நவஜோத் சிங் சித்து (எல் பி டபிள்யூ) இலங்கையுடன் 1993 -94 பெங்களூர்
6. சௌரவ் கங்குலி (கேட்ச்) இலங்கையுடன் 1997 -98 நாக்பூர்

எது, ஏன், எப்படி?

உலகிலேயே இனிப்பான பொருள் எது?



உங்களுக்கெல்லாம் இனிப்பென்றால் ரொம்பவும் பிடிக்குமல்லவா? அது சரி, டீ, காப்பியில் சர்க்கரை கொஞ்சம் குறைவாக இருந்தால் சாப்பிடுவீர்களா? முகம் சுளிக்க வேண்டாம். உப்புமாவா? இட்டிலி, தோசையா எதுவானாலும் தொட்டுக் கொள்ள சர்க்கரை கேட்கிறீர்கள், இல்லையா? இதெல்லாம்... நாம் சர்க்கரையை உபயோகிக்கத் தெரிந்த பின்னர்தானே! சர்க்கரையே கண்டு பிடிக்காத காலத்தில் மனிதன் எப்படி இனிப்பைப் பயன்படுத்தினான்? இனிப்பு என்றொரு சுவையைப் பற்றி அவனுக்குத் தெரியுமா என்று நினைத்துப் பார்த்ததுண்டா?

கிரேக்கர்கள் மற்றும் ரோமானியர்கள் காலத்தில், மக்கள் தேனீக்களிடமிருந்து பெற்ற தேன் மற்றும் தாவரங்களிலிருந்து கசிந்த இனிப்பான சாறுகள் மூலம் உணவை இனிப்பாக்கினர். மேலும் மரங்களின் பட்டைகளிலிருந்து வடியும் சாறை உணவை இனிப்பாக்கப் பயன்படுத்தினர் என்று பைபிளிலும் சொல்லப்பட்டிருக்கிறது. இறகு போன்ற மெல்லிய இலைகள் உடைய ஒரு வகைச் செடிகளின் தண்டை, பூச்சிகள் அரித்த பின்பு, அதிலிருந்து வடியும் சாறு இனிப்பாக இருந்ததால், மக்கள் அதனைப் பருகினர். அதன் பின்னரே பெர்சியாவில் சர்க்கரைக்காக கரும்பு பயிரிடப் பட்டது. பின் கிரீஸ் மற்றும் ரோமிலும் கரும்பு பயிரிடப்பட்டது. கி.பி. 1000க்குப் பின் அரேபியர்கள் மத்திய தரைக் கடல் பகுதிகளில் கரும்பை விளைவித்தனர். பின்பு, போர் வீரர்கள் மூலம் ஐரோப்பாவுக்குள் நுழைந்தது.

இதெல்லாம் விடுங்க! உலகிலேயே மிக இனிப்பான பொருள் எது தெரியுமா? பராகுவே நாட்டிலுள்ள 'ஸ்டீவியா' என்ற செடியிலிருந்து சுரக்கும் ஒரு திரவம்தான். எவ்வளவு இனிப்பு தெரியுமா? நம் சர்க்கரையைவிட 300 மடங்கு இனிப்பானது! ஓ! அம்மாடியோவ்...! ஒரு டம்ளர் காப்பிக்கு ஒரு சொட்டு சாறு போதும்! இன்னும் கூட, இத்திரவம் அந்நாட்டு காட்டுவாசிகளால், உணவை இனிப்பாக்கப் பயன்படுத்தப்படுகிறது.




ஒருவரைப் போல் இன்னொருவர் இருக்க முடியாதா, ஏன்?

உலகில் ஒருவர்

போலவே அச்சு, அசலாக ஏழு பேர் இருப்பார்கள் என்றெல்லாம் சொல்லப் படுவது உண்டு. அப்படியே இருந்தாலும், ஒருவரது கை ரேகை போல மற்றவரது கைரேகை இருக்காது. ஏனெனில் பரிணாம வளர்ச்சியில் சில குணங்கள் பாரம்பரிய தனித்தன்மையை (Uniqueness) பெற்று விட்டன. கைரேகை அமைப்பும் சிறப்பு தனித்தன்மை பெற்றதாகும். தடவியல் துறையினர், கைரேகையின் மூலமாகவே குற்றவாளிகளைப் பிடிக்கின்றனர் என்பது நமக்குத் தெரிந்த விஷயமே! இதனால் கையெழுத்தைவிட கைரேகைக்குப் பெருமை அதிகம். கைரேகையைப் 'போர்ஜரி' (போலி ரேகை) செய்ய முடியாது. கைரேகை மட்டுமின்றி வேறு சில பாரம்பரியக் குணங்களும் இவ்வாறு தனித் தன்மை பெற்று விளங்குகின்றன. ஒருவரது உதட்டிலுள்ள ரேகைகள் உதட்டின் மடிப்புகள் போல, வேறு எவருக்கும் இருக்காது. அதேபோல மனிதக் கண்விழியிலுள்ள இரத்தக் குழாய்களின் தந்துகி வலைப் பின்னல் அமைப்பும் தனித் தன்மையுடையது. ஒருவரது வலைப் பின்னல் அமைப்பு போல் மற்றவருக்கு இருக்காது. மனிதனில் மட்டுமல்ல, விலங்குகளிடமும் கூட இந்த தனித் தன்மை குணங்கள் காணப்படுகின்றன. வரிக்குதிரைகளின் மேலுள்ள வரிகளின் அமைப்பு, சிறுத்தையின் உடம்பிலுள்ள புள்ளிகளின் எண்ணிக்கை, உருவம், அளவு மற்றும் அமைப்பு, வரிப்புலியின் மேலுள்ள வரிகளின் நீளம், எண்ணிக்கை மற்றும் அமைப்பு, பசுமாடுகளின் நாக்கிலுள்ள ரேகைகளின் அமைப்பு போன்றவையும் கூட பரிணாம அமைப்பில் தனித்துவம் பெற்றவையாகும்!

–எஸ். மோகனா



இதயத் துடிப்பு - ஒரு விளக்கம்

ஒருவருடைய இதயம் முதன்முதலில் எப்போது வேலை செய்யத் தொடங்குகிறது? மனிதக் கரு உருவான 30–ஆம் நாளில் இதயம் உருவெடுத்து விடும். ஆனால் அந்த இதயம் நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கிற மாதிரி, உருண்டையாக, நான்கு அறைகளைக் கொண்டதாக இருக்காது. மாறாக, சிறிய குழல் போல் இருக்கும். செங்குத்தாக இருக்காது; படுத்த வசத்தில்தான் இருக்கும். என்றாலும் அப்போதே அது துடிக்கத் துவங்கும்.


ரத்தக் குழாய்களோ, நரம்புகளோ உருவெடுக்காத அந்த இளம் இதயத்தில் துடிப்புகள் உண்டாவது அதனுடைய உள்ளார்ந்த இயக்கமாகும். குழல் போல் அமைந்துள்ள இதயத் தசைகளில் இதயத் துடிப்பை உற்பத்தி செய்வதற்கான இயக்க மரபணுக்கள் பரம்பரையாகவே மறைந்துள்ளதுதான் இதற்குக் காரணம்.


மேலும் மனிதக் கரு அடுத்தடுத்து வளர்ச்சி பெறுவதற்கும், ரத்த ஓட்ட மண்டலம் உருவாவதற்கும், இதயம் நான்கு அறைகளைக் கொண்டதாக வளர்வதற்கும் இந்தத் துடிப்பு அவசியமாகிறது. எனினும் இந்தத் துடிப்பை ஆரம்பத்தில் நம்மால் உணர முடியாது. கரு வளர்ந்து சுமார் 90 நாட்கள் ஆன பின்புதான் இயல்பான இதயத்தின் துடிப்பை நாம் நன்றாக உணர முடியும்.

–டாக்டர் கு. கணேசன்

Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones — Editorial : 2345624; Circulation Manager : 2345623;
Subscription and Advertisement : 2345622; Chief Administrative Officer : 2345621
Subscription — (Inland) Annual Rs. 60/-; Half Yearly Rs. 30/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-

ஜோடி சேருங்கள்!





குட்டி மீன்கள் தாயை அடைய வழிகாட்டுங்கள்!

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / MS (S) 281/97 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS / (S) 14 * Registered as a Newspaper in Srilanka

LECTRA

mummy you don't have to wake me up any more

Finally, a cute lil' personal LECTRA TALKING CLOCK. With an alarm system that will wake you or your child up in three different ways! Yes. You could opt for an early morning chirpy rooster sound or set it to belt out cheerful tunes. Your personal LECTRA TALKING CLOCK will also display as well as announce the time!

Available in a range of exciting colours, it's the ideal personal clock for every member in the family. So get yours today. In fact, give it to your daughter and get up late tomorrow!

Ideal corporate gift.
Bulk orders undertaken.



LECTRA

SHANKHESHWARA INDUSTRIES
Nonankuppam, Opp. Boat House,
Ariankuppam, Pondicherry - 605 007
Fax : 0413-48748

Distributorship enquiries solicited for unrepresented areas.

HTA.7900.98